# உதயன்

32 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 079 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 01 புதன்கிழமை (13/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily



**சுரங்கம் தோண்டிய கைதிகள்**
குஜராத் மாநிலம் அகமதாபாத் மத்திய சிறையில்... 08

**நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து**
சீனா நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில்... 09

**அருந்த வாங்கிய பானமும் காலாவதியானது**
உணவு நஞ்சானதால் சுகவீனமுற்று... 13

**தீவுகள் சூடின வாகை**
நியூசிலாந்துக்கெதிரான மகளிர் உலகக் கிண்ணச் 'சுப்பர் 6' போட்டியில்... 23




சுன்னாகம் மின் நிலையத்தில் புதிய மின் விநியோக நிலையத்தை ஜனாதிபதி நேற்றுத் திறந்து வைத்தார். (சு)

## பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் இன்று விடுதலை

### ஜனாதிபதி நேற்றுத் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்.13

கைதுசெய்யப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வரும் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரையும் இன்று புதன்கிழமை விடுவிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுப் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர், ஜனாதிபதியிடம் நேரடியாகக் கோரிக்கை விடுத்ததற்கு அமைய அவர்களை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

யாழ்.மாவட்டத்துக்கு இரண்டு நாள் பயணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

நேற்றைய தினம் ...

பார்க்க பக்கம் 04

# இலங்கைக்கு நிபந்தனை

## பொதுநலவாய அமைப்பு அதிரடி நடவடிக்கை

கொழும்பு, பெப்ரவரி 13

பொதுநலவாய நாடுகள் மாநாடு இலங்கையில் நடத்தப்பட வேண்டுமானால் இலங்கை அரசு முக்கியமான நிபந்தனைகள் சிலவற்றை நிறைவேற்ற வேண்டுமெனப் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமைச் செயலகம் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் தங்கியுள்ள பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா இந்த நிபந்தனைகள் அடங்கிய கடிதத்தை அரசிடம் ஒப்படைத்திருப்பது அரசுக்கு கடும் அதிருப்தியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருப்பதாக அறியமுடிகின்றது.

மனித உரிமைகள், தேர்தல்கள், ஊடக சுதந்திரம் ஆகிய மூன்று துறைகளுக்கும் சுயாதீன ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும், பொலிஸ் திணைக்களத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்

பார்க்க பக்கம் 04

- ★ முக்கிய துறைகளுக்கு சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுதல்
- ★ பாதுகாப்பு அமைச்சிலிருந்து பொலிஸ் துறையை விலக்கல்
- ★ நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறை

### உதயனுக்கு அனுமதியில்லை

யாழ்ப்பாணம், பெப்.13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கலந்துகொண்ட நிகழ்வுகளில் செய்திசேகரிப்பதற்கு உதயன் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு நாள் பயணமாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். அத்துடன் மூன்று நிகழ்வுகளிலும் பங்குபற்றியிருந்தார்.

முற்பகல் 10 மணியளவில் சுன்னாகத்தில் புதிய மின்நிலையத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற 'உதயன்'

பார்க்க பக்கம் 04

### அரசின் மாநாட்டு அறிவிப்பை நிராகரித்தது பொதுநலவாயம்

கொழும்பு, பெப்.13

எதிர்வரும் நவம்பர் மாதம் பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் உச்சி மாநாடு கொழும்பிலேயே நடைபெறும் என்று தான் உறுதிப்படுத்தியுள்ளதாக இலங்கை வெளிவிவகாரச் செயலர் ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்தை பொதுநலவாயத்தின் செயலர் கமலேஷ் சர்மா அடியோடு நிராகரித்துள்ளார்.

இது தொடர்பாக பொதுநலவாய செயலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

பார்க்க பக்கம் 04

### பங்களாதேஷை வளைக்க டாக்கா விரைகிறார் பீரிஸ்

கொழும்பு, பெப். 13

பொதுநலவாய மாநாட்டை கொழும்பில் நடத்தும் விவகாரத்தில் ஏற்பட்டுள்ள சிக்கலில், பங்களாதேஷின் உதவி கோரி இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாளை டாக்காவுக்குப் பயணமாகவுள்ளார்.

பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் தலைமைப் பொறுப்பு தற்போது பங்களாதேஷிடமே உள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம்

பார்க்க பக்கம் 04

### யாழ். நகரில் படைமுகாமை திறந்தார் கோத்தபாய

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ். நகரின் மத்தியில், சிங்கள மகாவித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டு வந்த நிரந்தர படை முகாம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் நேற்றுத்

பார்க்க பக்கம் 04

### பாப்பரசர் நிலைக்கு மல்கம் போட்டி



கொழும்பு, பெப். 13

பாப்பரசர் பதவி நிலைக்கு இலங்கையைச் சேர்ந்த கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை போட்டியிடுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பர் எதிர்வரும் 28 ஆம் திகதி பதவி விலகவுள்ளதாக நேற்றுமுன்தினம் திடீர் அறிவிப்பை விடுத்தார்.

உடல் நலக் குறைவே இவரது இந்த அறிவிப்புக்கு

பார்க்க பக்கம் 04

### தென்னை மரத்தில் மின்சாரம்; 'இறந்த' சிறுவன் மீண்டான்

கிளிநொச்சியில் நேற்றுப் பரபரப்பு



மரத்திலிருந்து சிறுவன் மீட்கப்பட்ட வேளை...

கிளிநொச்சி, பெப்.13

தென்னைமரம் ஒன்றில் மின்சாரம் திடீரெனப் பாய்ந்து அதில் தென்னோலை வெட்டுவதற்காக ஏறிய சிறுவனைத் தாக்கியது. இதில் குறித்த சிறுவன் உயிரிழந்து விட்டதாகக் கருதி நீண்ட நேரத்தின் பின்னர் உடலை கீழே இறக்கியபோதே, அவன் உயிரோடு இருப்பது தெரியவந்தது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை

பார்க்க பக்கம் 04

### ஜனாதிபதியின் கூட்டத்துக்கு அழைப்பில்லை கூட்டமைப்புக்கு

யாழ்ப்பாணம், பெப்.13

ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டு எமக்கான அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறவில்லையெனத் தெரிவித்த பின்னரும், அழைப்பு அனுப்பப்படவில்லை. அதனாலேயே ஜனாதிபதி தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்ட விசேட அபிவிருத்திக்குழுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்றுள்ளது. ஆயினும் எனக்கு அழைப்பிதழ் கிடைக்கப்பெறவில்லை. அத்துடன் சக நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், மாவை.சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோ

பார்க்க பக்கம் 04

### குற்றச்செயல்களை மறைக்கவே ஊடகங்களுக்குப் புதிய சட்டம்

ஐ.தே.க. குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு, பெப்.13

நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களை அம்பலப்படுத்தும் ஊடகங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என அரசு கூறுவதனூடாக, குற்றச்செயல்களை மூடி மறைக்க அது திட்டமிடுகிறது. அத்துடன், இது ஊடக சுதந்திரத்தைப் பறிக்கும் செயலாகும் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

...பின் காரணமாகவே நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதுடன், தற்கொலைகளும், கொலைகளும் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்த ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற அவ்வாறான சம்பவங்கள் பலவற்றையும் பட்டியலிட்டுக் காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில்

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இளைஞரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,பெப்.13

கோண்டாவிலில் வீடு ஒன்றில் இருந்து இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த பரராஜசிங்கம் பிரசன்னா (வயது-31) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இளைஞன் இறந்தமைக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(த-4-ரி)

# கூட்டத்தில் அதிகாரிகளை துளைத்தெடுத்த ஜனாதிபதி

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருவதை முன்னிட்டு அதிகாரிகள் அவசர அவசரமாக அபிவிருத்தி வேலைகளைச் செய்திருப்பினும், யாழ்ப்பாணத்தில் பூரணப் படுத்தப்படாத அபிவிருத்தி வேலைகள் தொடர்பில் அதிகாரிகளை கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்தார் ஜனாதிபதி மஹிந்த.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ். மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம் ரில்கோ ஹோட்டலில் இடம்பெற்றது.

அதன்போது குடாநாட்டில் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு யாழ்.அரச அதிகாரிகளால் எடுத்துக் கூறப்பட்டது.

அதன் பின்னர் யாழ்.மாவட்டத்தில் பூரணப்படுத்தப்படாத அபிவிருத்தி வேலைகள் தொடர்பில் படங்களைக் காண்பித்து அரச அதிகாரிகளிடம் விளக்கம் கோரினார் ஜனாதிபதி.

அரைகுறை நிலையில் காணப்படும் பாடசாலைக் கட்டடங்கள், கட்டி முடிக்கப்பட்டுத் திறக்கப்படாமல் உள்ள கட்டடங்கள், 1989 ஆம் ஆண்டிலிருந்து யாழ். பல்கலைக்கழகத்தில் பூரணப்படுத்தப்படாமல் இருக்கும் குடிதண்ணீர் தாங்கி என்பன படங்களுடன் காண்பிக்கப்பட்டன.

இந்த வேலைகள் ஏன் முடிக்கப்படவில்லை என்றும் வேலை முடிக்கப்பட்ட சில கட்டடங்கள் ஏன் திறக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி எழுப்பிய சரமாரியான கேள்விகளுக்கு அரச அதிகாரிகள் பதிலளிக்கத் திணறினர்.

ஜனாதிபதியின் யாழ். வருகையை முன்னிட்டு அதிகாரிகள் அவசர அவசரமாக அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்ட போதிலும், இரண்டு வாரங்களுக்கு முற்பட்ட அபிவிருத்தி நிலைமைகளை ஜனாதிபதி படங்களைப் போட்டுக் காட்டி அதிகாரிகளை நேற்றுத் திணற வைத்தார். (த-5)

# வாகனம் மோதியதில் இரண்டு பேர் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.13

வீதி திருத்தப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்த இரண்டு பேரை வாகனம் மோதியதால் காயமடைந்த அவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து யாழ். பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் குருநாகலைச் சேர்ந்த சசலங்க (வயது-21) கொழும்பு றாகமவைச் சேர்ந்த குணரட்ண (வயது-49) ஆகியோரே காயமடைந்துள்ளார்.

காபெற் போடப்பட்ட வீதி பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவ்வழியே வந்த வாகனம் இருவரையும் மோதியுள்ளது.

நேற்று முன்தினம் அந்தப் பகுதியில் 'காபெற்' போடப்பட்டது. அதனை நேற்று முற்பகல் பரிசோதனைக்குட்படுத்தியபோது அவ்வழியே வந்த வாகனம் இருவரையும் மோதியுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-4-ரி)

# நயினாதீவில் ஜனாதிபதி

யாழ்ப்பாணம்,பெப்.13

நயினாதீவுக்கு நேற்று மாலை சென்ற ஜனாதிபதி அங்கு நாகவிகாரைக்கு முன்பாக அமைக்கப்பட்ட இறங்கு துறையை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

ஹெலி மூலம் நயினாதீவைச் சென்றடைந்த ஜனாதிபதியுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் சென்றிருந்தனர்.

ஜனாதிபதியும் குழுவினரும் பின்னர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளிலும் ஈடுபட்டனர். ஜனாதிபதியின் நயினாதீவுக்கான வருகையை முன்னிட்டு அங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (த-17)

# நெல்சிப் திட்டத்துக்கான நிதி மீண்டும் பிரதேச சபைகளுக்கு

## உறுதியளித்தார் ஜனாதிபதி

**கடந்த வருடம் முடிக்கப்படாத வேலைத்திட்டங்களுக்குரிய பொதுக் கணக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த நிதி பிரதேச சபை வேலை திட்டங்களுக்கு வழங்கப்படும்.**

யாழ்ப்பாணம்,பெப்.13

பிரதேச சபைகளிடமிருந்து பெறப்பட்ட 'நெல்சிப்' திட்டத்துக்குரிய நிதி மீளவும் அந்தந்தப் பிரதேச சபைகளுக்கு இந்த ஆண்டு வழங்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று இடம்பெற்றது.

அந்தக் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அமைச்சர்களின் செயலாளர்களும் கலந்துகொண்டனர்.

அத்துடன் யாழ்.மாவட்ட அரச அதிபர், 15 பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள், வடமாகாணத் திணைக்களத் தலைவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

**வேறுபாடு இல்லை**

நிகழ்வின் ஆரம்பத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழில் சிறிது நேரம் உரையாற்றினார். இதன்போது சகல பிரதேசங்களிலும் எந்தவிதமான வேறுபாடுமின்றி அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்து வருகின்றோம். தனியே நகரப் பகுதிகளில் மாத்திரம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் கிராமத்துக்கும் முன்னேடுத்துச் செல்ல வேண்டும். அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்காகச் சேவையாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

**மீள்குடியமர்வு இல்லை**

வலி.வடக்கில் மக்களை மீளக்குடியமர்த்துமாறு கோரியும், அங்கிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் தொடர்பிலும் பட்டியலிட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

அதனைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதிலுள்ள புள்ளி விவரங்களில் சந்தேகம் இருப்பதாகவும் பார்த்துக் கொள்ளலாம் என்றும் சொல்லி யாழ். இராணுவத்தளபதி ஹத்துருசிங்கவிடம் அதனைக் கையளித்தார்.

வலி.வடக்கு மீளக்குடியமர்வு தொடர்பில் அவர் எந்தவித அறிவிப்பையும் வெளியிடவில்லை.

**கே.கே.எஸ். வரை ரயில் வரும்**

இந்திய அரசின் நிதியுதவியில் ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறை வரையில் ரயில் செல்லுமா என்று வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்பினார்.

அதற்கு கே.கே.எஸ். வரையில் ரயில் வரும் என ஜனாதிபதி பதிலளித்தார்.

**'நெல்சிப்' பணம் மீளவும் கிடைக்கும்**

பிரதேச சபைகளுக்கு 'நெல்சிப்' திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ஏன் மீளத் திரும்பப் பெறப்பட்டது என்று ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

கடந்த வருடம் முடிக்கப்படாத வேலைத்திட்டங்களுக்குரிய பொதுக் கணக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த நிதி பிரதேச சபை வேலை திட்டங்களுக்கு வழங்கப்படும்-என்று ஜனாதிபதி தெரிவித்தார். (த-5)

# இராணுவப் பொழுதுபோக்கு விடுதி நேற்றுப் பலாலியில் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப்.13

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள, பலாலி இராணுவத் தலைமையகத்துக்குள் இராணுவத்தினருகென அமைக்கப்பட்ட பொழுது போக்கு விடுதியை நேற்று திறந்து வைத்தார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

52 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த விடுதியில் படையினருக்கான தியேட்டரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தை சேர்ந்த மக்கள் கடந்த 23 வருடங்களாக தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமல், நலன்புரி நிலையங்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

அத்துடன் மேற்படி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகள் ஒருபோதும் விடுவிக்கப்பட மாட்டாது என்றும் குறித்த பகுதிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாகவும் இராணுவத் தளபதியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பலாலியில் 52 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இராணுவத்தினருக்கான உல்லாச விடுதி பாதுகாப்புச் செயலாளரினால் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடுதியில் 350 பேர் ஒரே நேரத்தில் அமர்ந்து பார்க்கும் வகையில் குளிரூட்டப்பட்ட தியேட்டர், கேட்போர்கூடம், விசாலமான உணவு விடுதி, சிகை அலங்கரிப்பு நிலையம், தையல் நிலையம், உள்ளக விளையாட்டரங்கு என்பன அடங்கியுள்ளன. (ஜ-5)

# கடலுக்குள் பாய்ந்தது பஸ் பயணிகள் நால்வர் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.13

பயணிகள் பஸ் திடீரெனக் கடலுக்குள் பாய்ந்து சரிந்தமையினால் அதில் பயணித்த நால்வர் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் யாழ். பண்ணைக் கடலில் நேற்றுச் செவ்வாய்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸே இவ்வாறு கடலுக்குள் இறங்கியது. வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் கடலுக்குள் இறங்கியமையால் பயணிகள் நால்வர் காயமுற்றனர்.



சம்பவத்தில் சரவணையைச் சேர்ந்த எஸ்.துவாரகா (வயது-26) என்பவர் முகத்தில் படுகாயமடைந்தார். ஊர்காவற்றுறை வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவருக்குக் கை முறிந்தது. மற்றையவர் பொலிஸ் உத்தியோகத்தர். மேலும் ஒருவர் தென் பகுதியைச் சேர்ந்த பெண்ணாவார். இது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (த-4-17)

# இருவேறு விபத்துக்களில் இளைஞன், யுவதி காயம்

யாழ்ப்பாணம்,பெப்.13

வேகமாக வந்த டிப்பர் வாகனம் முன்னே சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்த விபத்து நேற்று காலை நுணாவில் மத்தி ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

துணுக்காய் மல்லாவியைச் சேர்ந்த விஜயரத்தினம் ரவிச்சந்திரன் (வயது-24) என்ற பல்கலை மாணவனே படுகாயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை வரணிப் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யுவதி ஒருவர் படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தவாளை இயற்றாலை வரணியியைச் சேர்ந்த இரத்தினம் ஜெனித்தா (வயது-23) என்ற யுவதியே படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்தவர்கள் முன்னே சென்று கொண்டிருந்த சிறிய வகை மோட்டார் சைக்கிளை மோதிவிட்டு தப்பிச் சென்றனர். அதன்போதே இந்த விபத்து ஏற்பட்டது.

(ஐ-9)

# இரு தினங்கள் குடிதண்ணீர் இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.13

மாநகர சபையின் பிரதான நீர்த்தாங்கிக்கான குழாயில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் இரண்டு தினங்களுக்கு நீர்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் பகுதியில் இருந்து பிரதான நீர்த் தாங்கிக்கு நீர் ஏற்றும் குழாயே சேதமாகியுள்ளது.

இதனால் நேற்று மாலையில் இருந்து நகரப் பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டது.

திடீரென ஏற்பட்ட இந்த நீர்த் தடை காரணமாக மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

(ஐ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வாழைத் தோட்டங்களில் டெங்குஒழிப்பு

**டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சுகாதாரப் பகுதியினர் விழிப்புணர்வு செயற்பாட்டைத் தீவிரப் படுத்தியுள்ளனர்.**

யாழ்ப்பாணம்,பெப்.13

வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள வாழைத் தோட்டங்களில் சுகாதாரப் பகுதியினர் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சுகாதாரப் பகுதியினர் இந்தப்பிரதேசத்தில் விழிப்புணர்வு செயற்பாட்டைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் வாழைத் தோட்டங்களில் இருந்து நுளம்பின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.


இதனையடுத்து வாழைத் தோட்டங்களிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால், மாசிவன், நவக்கிரி, அச்சுவேலி போன்ற பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களில் இவ்வாறு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாகச் சிறுப்பிட்டிப் பகுதியில் உள்ள வாழைத் தோட்டத்தில் வாழைகள் குறுக்காக வெட்டப்பட்டு அதில் இருந்து சுரக்கும் நீரில் நுளம்பு குடம்பிகள் உற்பத்தியாவது இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வாழைத் தோட்ட உரிமையாளர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

வாழைத்தோட்டங்களில் குலைகள் போட்ட வாழைகளை அடியோடு வெட்டிப் புதைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.(த-17)



உரிமையாளர்களின் வரவை எதிர்பார்த்து கடந்த ஐந்து நாள்களுக்கு மேலாக யாழ். மாநகர சபையில் காத்திருக்கும் கட்டாக்காலி மாடுகள்.

## யாழ். நகரில் மோப்ப நாய்கள்

**ஜனாதிபதி தலைமையில் நகரின் ரில்கோ ஹோட்ட லில் நடைபெற்ற யாழ். மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்காகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப் படுத்தப்பட்டிருந்தன.**

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை மோப்ப நாய்களைக் கொண்டு பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ஜனாதிபதி தலைமையில் நகரின் ரில்கோ ஹோட்டலில் நடைபெற்ற யாழ். மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்காகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

ஜனாதிபதியின் வருகைக்கு முன்பாக நேற்று காலை தொடக்கம் பொலிஸாரும், படையினரும் இணைந்து ரில்கோ ஹோட்டலை அண்டிய வர்த்தக நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்களில் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர்.

இதனைவிடப் பொலிஸார் யாழ்.முற்றவெளிப் பகுதியை மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனைகளை மேற்கொண்டனர்.

(த-17)

# உருளைக்கிழங்கு செய்கை யாழில் இந்தமுறை வீழ்ச்சி

**உருளைக்கிழங்கு செய்கையில் உற்பத்திச் செலவு அதிகரித்த நிலையில் காலநிலை சீர்கேட்டினால் உரிய விளைச்சல் கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு பெருநட்டம்.**

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் உருளைக்கிழங்குச் செய்கை பெரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

உருளைக்கிழங்கின் விற்பனை விலையும் வீழ்ச்சி அடைந்திருப்பதால் யாழ். விவசாயிகள் இலாபம் ஈட்ட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் நிலவிய முரண்பாடான காலநிலை உருளைக் கிழங்கு செய்கையில் பாதிப்பான நிலையை ஏற்படுத்தியுள்ளது. கடும் வறட்சிக்குப் பிந்திய மழைவீழ்ச்சி அதிகரிப்பு, வெள்ளம், பனிப்பொழிவு இல்லாத மந்தமான நிலை என்பன உருளைக்கிழங்கு விளைச்சலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் உருளைக்கிழங்கு 50 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது. கடந்த வருடம் 22.5 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் இது பயிரிடப் பட்டது. விதை உருளைக் கிழங்கு 50 கிலோ கொண்ட பொதியை 11 ஆயிரம் ரூபாவில் இருந்து 35,000 ரூபா வரை கொடுத்து வாங்கிய விவசாயிகள் நடுகை செய்தனர். றெட்லைட் சோடா, கல்வைட், அனோவா றெவறா ஆகிய ரகங்கள் விதை கிழங்காகப் பயன்படுத்தப்பட்டன.

உருளைக்கிழங்கு செய்கையில் உற்பத்திச் செலவு அதிகரித்த நிலையில் காலநிலை சீர்கேட்டினால் உரிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. 50 கிலோ கொண்ட பொதிக்கு குறைந்தது 400 முதல் 500 கிலோ கிழங்கை அறுவடையாக பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஒரு கிலோ உருளைக்கிழங்கை 75 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்கின்றபோது தான் கணிசமான அளவு வருமானத்தை விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒக்ரோபர் நடுப்பகுதியில் இருந்து ஜனவரி முற்பகுதிவரை யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு நடுகை நடைபெற்றது. முற்பகுதியில் நடுகை செய்த உருளைக்கிழங்கு விளைச்சல் மிகமிகக் குறைவான நிலையில் இருந்த போதிலும் பிற்பகுதியில் நடுகை செய்யப்பட்ட உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கு கணிசமான அளவு விளைச்சல் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

உருளைக்கிழங்கின் விற்பனை விலையும் யாழ்.மாவட்ட கிழங்கு அறுவடை செய்யும் காலவேளையில் வீழ்ச்சி அடைவதால் விவசாயிகள் எதிர்பார்த்த அளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதநிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

காலநிலையும் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு சாதகமான நிலையில் இல்லாமல் போய்விடுவதால் விவசாயிகள் எதிர்பாராத பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகவேண்டிய நிலை ஏற்பட்டதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தெற்கில் இருந்து இங்கு எடுத்து வரப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 70 ரூபாவாகவும், உள்ளூர் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 50 ரூபா முதல் 60 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-11-17)

## காசநோய் மருத்துவ முகாம்

**காசநோய் தொடர்பான சந்தேகங்களையும் கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ள முடியும்.**

யாழ்ப்பாணம், பெப் 13

யாழ். மாவட்டக் காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் காச நோய் தொடர்பான விழிப்புணர்வு, சிகிச்சை என்பன இன்று புதன்கிழமை அனலை தீவில் நடைபெறவுள்ளது என்று யாழ். மாவட்டக் காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் சி. யமுனானந்தா தெரிவித்தார்.

பிராந்திய வைத்தியசாலையின் உதவியுடனும், துறைசார்ந்த வைத்தியர்களின் உதவியுடனும் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் சளிப் பிரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். காசநோய் தொடர்பான சந்தேகங்களையும் கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ள முடியும் என்று மருத்துவர் யமுனானந்தா மேலும் தெரிவித்தார். (த-13)

## உறுப்பினர் பதவி தொடர்ந்தும் வெற்றிடம்

வடமராட்சி, பெப்.13

பருத்தித்துறை பிரதேச சபையில் ஆளும்தரப்பு உறுப்பினர் ஒருவருக்கான பதவி தொடர்ந்தும் வெற்றிடமாகவே உள்ளது.

பிரதேச சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர்களில் ஒருவராக இருந்த இளைப்பாறிய தபால் அதிபர் பொ.திருச்செல்வம் மரணமடைந்ததைத் தொடர்ந்து அந்த உறுப்பினர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது.

உறுப்பினர் ஒருவர் மரணமடைந்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் வெற்றிடமாக உள்ள உறுப்பினர் பதவிக்கு பட்டியலில் அடுத்து உள்ளவரை நியமிப்பதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அசமந்தமாக இருப்பதாகப் பிரதேச மக்கள் மத்தியில் கருத்து நிலை ஏற்பட்டுள்ளது. (த-8)

## கைத்தொழிலில் ஈடுபடுவோர் விவரங்கள் திரட்டும் பணி

**விவரங்களை கைத்தொழில் முயற்சியாளர்களிடம் பெற்று நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.**

யாழ்ப்பாணம், பெப்.13

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு யாழ். மாவட்டத்தில் கைத் தொழில்களை மேம்படுத்தும் நோக்குடன் கைத்தொழில்களில் ஈடுபடுவோரின் விவரங்களைப் பிரதேச ரீதியாகக் கோரியுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இயங்கும் பாதணி, தொல்பொருள், பீங்கான் பொருள்கள் மின்னியல் மற்றும் மின்சார உபகரணங்கள் மருந்து மற்றும் வாசனைத் திரவியங்கள், மை மற்றும் அச்சிடும் கைத்தொழில்களை நடத் தும் நிறுவனங்களின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளது.

நிறுவனத்தின் பெயர் முகவரியும், மேற்கொள்ளப் படும் உற்பத்தி, முதலீடு, பணியாளர்களின் எண்ணிக்கை, எதிர்நோக்கும் பிரச்சினைகள் (தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொள்ளல், பயிற்சி பெறுதல் மற்றும் ஏனையவை) ஆகிய விவரங்களை கைத்தொழில் முயற்சியாளர்களிடம் பெற்று நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலகங்களுக்கு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.(த-9)

## வலி.மேற்குப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு நிதி

### சரவணபவன் எம்.பி. வழங்கினார்

வலிகாமம் மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீட்டை வழங்கிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டார்.

2012 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து வலிகாமம் மேற்கு பிரதேசத்துக்கான ஒதுக்கப்பட்ட நிதிகளை கடந்த 2 ஆம் திகதி கையளிக்கும் போதே பொதுமக்களது பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

இதன் போது சுழிபுரம் காட்டுப்புலம் பிரதேச மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக சுழிபுரம் [illegible] நிலை [illegible]லவன் பாடசாலையை மீண்டும் பழைய இடத்தில் இயக்க வைப்பது தொடர்பாகவும், பாடசாலையின் புனரமைப்புத் தொடர்பாகவும், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

பாடசாலையின் பழைய இடத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

அத்துடன் அராலி கிழக்கு மயானப் புனரமைப்புக்கென ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியையும், அம்பாள் சனசமூக நிலைய கட்டட புனரமைப்புக்கென 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதியையும், அராலி தெற்கு அம்பாள் சனசமூக நிலையத்தின் தலைவர் ச. சாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் போது கையளித்தார்.

இதனைவிட சுழிபுரம் பாண்டவெட்டை பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுடன் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

கெங்காதேவி கடற்றொழிலாளர் சங்கத்தின் கட்டடத்துக்கு மின்சார வசதிக்கான நிதி ஒதுக்கீட்டை வழங்கி இருந்ததை அடுத்து மின் இணைப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், கட்டடத்துக்கான மின் விநியோகத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் சித்தன்கேணி பிரதேசத்தில் புனரமைப்புக்கென ஒரு இலட்சம் ரூபா நிதியையும், சித்தன்கேணி இளைஞர் முன்னேற்ற கழகத்துக்கென மின்பிறப்பாக்கி ஒன்றையும் கையளித்தார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னை மெரினா கடற்கரையில் நேற்று மாலை 7 மணியளவில் தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தலைமையில் ஈழத்தமிழருக்காக உயிர்த் தியாகம்செய்த முருகதாஸனின் 4 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எழுச்சியுடன் நடைபெற்றது.

## அரசின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஒன்றில், சில ஊடகங்களில் வெளியானது போன்று, இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவது குறித்த எந்த செய்திக் குறிப்பையும் கமலேஷ் சர்மா வெளியிட வில்லை என்று கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, இலங்கை வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள், செயலணிக் குழுக்களின் தலைவர்களுடன் பொதுநலவாய அமைப்பின் செயலர் கமலேஷ் சர்மா தலைமையிலான குழு நடத்திய பேச்சுகளின் போது, கொழும்பில் மாநாடு நடைபெறும் என்று கமலேஷ் சர்மா உறுதிப்படுத்தியுள்ளார் என இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்திருந்தார்.

கொழும்பு சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இதனையே தலைப்புச்செய்தியாக வெளியிட்டிருந்தன.

நான்கு நாள்கள் பயணமாக கொழும்பு வந்த பொதுநலவாய அமைப்பின் செயலர் கமலேஷ் சர்மா, நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் அதிகாரிகளை சந்தித்துப் பேசியுள்ளார்.

இதேவேளை, பொதுநலவாய மாநாட்டை கொழும்பில் நடத்துவதா, இல்லையா என்பது குறித்து ஆராய பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தை கூட்டுமாறு கனடா கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

## உதயனுக்கு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஊடகவியலாளர்கள் நிகழ்வு நடைபெற்ற இடத்துக்கு அனுமதிக்கப்படவில்லை.

நிகழ்வுக்கு செய்தி சேகரிக்க அனுமதிக் கப்பட்ட ஊடகவியாலாளர்களின் பெயர்ப் பட்டியலில் 'உதயன்' ஊடகவியலாளர்களின் பெயர்கள் இல்லை எனத் தெரிவித்து பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

இருப்பினும் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் செய்தி சேகரிக்க அனுமதி வழங்குமாறுகோரி அதில் கலந்துகொள்ளும் ஊடகவியலாளர்களின் பெயர்களையும் உள்ளடக்கி ஜனாதிபதி செயலக ஊடகப் பிரிவுக்கு 6 ஆம் திகதி 'உதயன்' அலுவலகத்தால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

குறித்த கடிதம் கிடைக்கப்பெற்றதை அவர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர். இருப்பினும் நேற்று 'உதயன்' ஊடகவியலாளர்களின் பெயர்கள் பட்டியலில் இல்லை எனத் தெரிவித்து செய்தி சேகரிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (த-5)

## ஜனாதிபதியின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ருக்கும் அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெற வில்லை.

அழைப்பிதழ்கள் கிடைக்காமை தொடர்பில் நேற்று (நேற்று முன்தினம்) ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டிருந்தேன். அதற்கு அவர்கள் ஒருவாரத்துக்கு முன்னரே அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டு விட்டதாகத் தெரிவித்தனர்.

நான் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்பதை தெரியப்படுத்தியதுடன் எனது ''பக்ஸ்'' இலக்கத்தைக் கொடுத்து அதற்கு அழைப்பிதழ் அனுப்புமாறு தெரிவித்தேன். ஆயினும் அவர்கள் அதனை அனுப்பவில்லை.

இதேவேளை நான் அறிந்த வரையில் நேற்று மாலை (நேற்று முன்தினம்) யாழ். மாவட்ட செயலகத்துக்கு , ஜனாதிபதி செயலகத்தால் அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டது. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு அழைப்பிதழ்கள் அனுப்பத்தவறி விட்டோம். அவர்களை அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு அழைக்குமாறு யாழ்.செயலகத்துக்கு கூறப்பட்டிருந்தது. எங்களுக்கு அதன் பின்னரும் அழைப்பு விடுக்கவில்லை.

நாங்கள் ஜனாதிபதியுடன் சில விடயங்களைப் பேசத் தீர்மானித்திருந்தோம். அழைப்பு வழங்கப்படாமையால் எங்களுக்கு கூட்டத்தில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்காது அதனால் அங்கு செல்லவில்லை என்றார்.

இந்த விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபருடன் பலமுறை தொடர்பு கொண்டு கேட்டபோதும் அது பயனளிக்க வில்லை.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது ஆயினும் ஏனைய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருக்காமையால் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனும் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தார். (த-5)

## பல்கலைக்கழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

லில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் பங்கு பற்றியிருந்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந் மற்றும் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் க.ஜெனமேஜெயந் ஆகியோரின் பெற்றோரும் கூட்டத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

கூட்டத்தின் முடிவில் தங்கள் பிள்ளைகளை விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் எவ்வளவு காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று கேட்ட ஜனாதிபதி அவர்களை நாளை (இன்று) விடுதலை செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் என். இலங்கக்கோனுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் மாவீரர் தினத்தன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் தீபம் ஏற்றினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் நான்கு பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் பரமலிங்கம் தர்ஷானந் (வயது-25), கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கனக சுந்தரசுவாமி ஜெனமேஜெயந் (வயது-25), விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த சண்முகம் சொலமன் (வயது -25), யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியத்தலைவர் வி.பாவானந்தன் (வயது-25) ஆகிய நான்கு பேருமே கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டிருந்த 4 மாணவர்களும் வெலிக்கந்தையிலுள்ள புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களை விடுவிக்குமாறு கோரி பல்கலைக்கழக மாணவர்கள் தொடர் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மாணவர்கள் விடுவிக்கப்படாத நிலையிலேயே யாழ்.பல்கலைக்கழகம் கடந்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகியது. அதன் பின்னர் கடந்த ஜனவரி 22 ஆம் திகதி சொலமன் மற்றும் பாவானந்தன் இருவரும் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

எஞ்சிய இரு பல்கலைக்கழக மாணவர்களான தர்ஷானந் [illegible] ஜனாதிபதியின் [illegible] விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்டுகின்றது. (த-5-7)

## யாழ். நகரில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

றுத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.நகரின் மத்தியில் அமைந்துள்ள சிங்கள மகாவித்தியாலயத்துக்குச் சொந்தமான காணி படையினரால் பெறப்பட்டிருந்தது. இந்தக் காணியில் சீன அரசினால் வழங்கப்பட்டிருந்த முகாம்களைப் பயன்படுத்தி நிரந்தர படை முகாம் குறித்த பகுதியில் அமைக்கப்பட்டு வந்தது.

யாழ். மாவட்டத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விஜயம் செய்துள்ளார். அவருடன் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் வருகை தந்துள்ளார்.

சிங்கள மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமைப் பாதுகாப்புச் செயலாளர் நேற்று மாலை திறந்து வைத்தார். (த-5)

## குற்றச்செயல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாழ்க்கைச் சுமை அதிகரிப்பால் நாட்டு மக்கள் உளவியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அதனால்தான் குற்றச்செயல்களும், தற்கொலைகள், கொலைகள் என்பனவும் நாட்டில் அதிகரிக்கின்றன.

வாழ்க்கைச் சுமையாலே நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரிக்கின்றன என்பதை அரசு மூடிமறைக்கப் பார்க்கிறது. ஒரு நடவடிக்கையாகத்தான் ஹொரணையிலுள்ள 13 வயது மாணவி தேங்காய்களைத் திருடினார் எனக் கூறி அவரைத் திருடனாக்க அரசு முயற்சிக்கிறது.

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்களிடம் பணம் அறவிடக் கூடாது என சுற்றறிக்கைகள் வெளியிடப்படுகின்றபோதிலும் அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்களிடம் பணம் அறவிடப் படுகின்றது.

இவ்வாறான தமது குற்றங்களை மூடி மறைக்கவே கடந்த காலங்களில் அரசு செயற்பட்டுள்ளது.

வாழ்க்கைச் சுமை அதிகரிப்பால் நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. ஹொரணையில் 13 வயது சிறுமி தேங்காய்களைத் திருடியதாக கைதுசெய்யப்பட்டமை, கண்டி - பேராதனை பகுதியிலுள்ள தந்தையொருவர் தனது இரு பிள்ளைகளுக்கும் நஞ்சூட்டிவிட்டு தானும் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டமை, மஹரகம விகாரையில் உண்டியலைத் திருடுவதற்காக தேரர்கள் 3 பேர் கொலைசெய்யப்பட்டமை, அவிசாவளையில் பிறந்து ஐந்து நாளான குழந்தையை அவரது தாய் 2 இலட்சம் ரூபாவுக்கு விற்க முயன்றமை முதலான பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவற்றுக்கெல்லாம் அரசின் விடை என்ன? இதுபோன்ற குற்றச்செயல்களை அம்பலப்படுத்தும் ஊடகங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என ஊடகத்துறை செயலாளர் கூறுகிறார். இது ஊடக தர்மத்திற்கு எதிரான செயல். அத்துடன், நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களை மூடி மறைக்க அரசு மேற்கொள்ளும் மறைமுகச் செயற்பாடாகும் - என்றார். (த-சி)

## இலங்கைக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பாட்டிலிருந்து விலக்கி சிவில் நிர்வாக சேவையாக மாற்றுதல், நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளின் நடைமுறைப்படுத்தல் உட்பட்ட முக்கிய கோரிக்கைகளையே பொதுநலவாய அமையம் நிபந்தனைகளாக முன்வைத்துள்ளது.பொதுநலவாய அமையத்தின் இந்த நிபந்தனைகளால் கடும் அதிர்ச்சியடைந்துள்ள இலங்கை இந்த நிபந்தனைகள் தொடர்பில் அவசர ஆலோசனைகளை உள்ளூர நடத்தி வருகிறது.

பொதுநலவாய நாடுகள் அமையத்தின் இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படமுடியாத ஒரு சூழ்நிலை இருப்பதால் அமையத்தின் மாநாடு இலங்கையில் நடக்கக்கூடிய வாய்ப்பு இல்லையென மூத்த இராஜதந்திரியொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுநலவாய நாடுகள் அமையத்தின் மாநாடு ஏற்கனவே திட்டமிட்டபடி இலங்கையில் நடைபெறாத பட்சத்தில் [illegible] பனை தெரிவித்து அந்த அமைப்பிலிருந்து விலகிக்கொள்வது தொடர்பில் இலங்கை ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## பாப்பரசர்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

காரணம் என பரவலாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் வத்திக்கானில் புதிய பாப்பரசர் இயேசு நாதர் உயிர்த்தெழுந்த நாளான எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதியன்று தேர்ந்தெடுக்கப்படுவார் என பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பரின் ஊடகப் பேச்சாளர் பெடரிகோ லெம்போர்டி தெரிவித்துள்ளார்.

புதிய பாப்பரசர் இலத்தின் அமெரிக்காவில் இருந்து தெரிவுசெய்யப்படுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பாப்பரசர் நிலைக்கு போட்டியிடக் கூடியவர்கள் பெயர் பட்டியல் வெளியிடப் பட்டுள்ள நிலையில், அதில் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் பெயரும் உள்ளடக் கப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.(த)

## தென்னை மர...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திப் பகுதியில் இடம்பெற்றது. இதில் அதேஇடத்தைச் சேர்ந்த மகேஸ்வரன் அந்தோனிதாஸ் (வயது - 13) என்ற சிறுவன் மின்சாரம் தாக்கிய நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வீதியால் சென்ற சிறுவனை அழைத்து பணம் தருவதாக ஆசை காட்டி தென்னை மரத்தில் ஓலை வெட்டுமாறு ஏற்றியுள்ளனர் வீட்டு உரிமையாளர்கள்.

சிறுவன் மரத்தில் ஏறி ஓலையை வெட்டியபோது அது சாய்ந்து மின் கம்பியில் வீழ்ந்தது. இதனால் தென்னை மரத்தின் வட்டுக்குள் மின்சாரம் பாய்ந்தது. சிறுவனும் தாக்கப்பட்டு அதற்குள்ளே அகப்பட்டுக் கொண்டான்.

சிறுவன் உயிரிழந்து விட்டான் என்று கீழே நின்றவர்கள் முடிவெடுத்தனர்.

நீண்ட நேரத்தின் பின்னர் சிறுவனின் உடலத்தை கீழே இறக்கினர். இறந்து போனதாகக் கருதப்பட்ட சிறுவனின் உடல் திடீரென துடித்தது. அதன்போதே சிறுவன் உயிரோடு இருக்கும் விடயம் தெரிய வந்தது. உடனடியாக குறித்த சிறுவன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டான். சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சிறுவனை ஆபத்தான பணியில் ஈடுபடுத்தியதோடு மட்டுமல்லாமல், அவன் இறந்து விட்டதாகக் கருதி நீண்ட நேரமாக மீட்பு நடவடிக்கைகள் எவற்றிலும் ஈடுபடாத வீட்டு உரிமையாளர்கள் குறித்து அங்கு கூடிய மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஜ-6)

## பங்களாதேஷை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

லண்டனில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைச்சர் மட்ட நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில், இலங்கை விவகாரம் உள்ளடக் கப்பட்டுள்ள நிலையிலேயே பங்களாதேஷின் ஆதரவைப் பெறுவதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், டாக்கா செல்லவுள்ளார்.

பொதுநலவாய அமைப்பின் கோட்பாடுகளுக்கு முரணாகச் செயற்படும் இலங்கை மீது கடும் நடவடிக்கை எடுக்கும் வகையில், பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தை முன்கூட்டியே கூட்டுமாறு பங்களாதேஷுக்கு பல்வேறு பொதுநலவாய நாடுகள் பலமாக அழுத்தம் கொடுத்து வருகின்றன என தெற்காசிய இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் இருந்து லண்டனுக்கோ அல்லது மொரிசியஸ் தலைநகர் போர்ட் லூயிசுக்கோ மாற்றுமாறும் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், பொதுநலவாய மாநாட்டு விவகாரத்தில் இலங்கைக்கு எதிராகச் செயற்படும் கனடா உள்ளிட்ட நாடுகளுடன் பங்களாதேஷ் இணைந்து கொள்வதைத் தடுப்பதை நோக்கமாக கொண்டே இலங்கை வெளிவிவகார அமைச்சர் டாக்கா செல்லவுள்ளார்.

ஆனால், இலங்கைக்கு ஆதரவான நிலையில் பங்களாதேஷ் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கைக்கு எதிரான முடிவை எடுக்கும் அதிகாரத்தை பங்களாதேஷ் கொண்டிராத போதிலும், தன் மீதான அழுத்தங்களைக் குறைப்பதற்கு பங்களாதேஷின் ஆதரவு அவசியம் என்று இலங்கை உணர்வதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நயவஞ்சகத் திட்டங்களை நியாயப்படுத்த முனையலாமோ...?

தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையில் அழிக்கப்பட்டு விட்டாலும், அவர்களது வலையமைப்பு, நவீன தொழில் நுட்பம், இணையத்தளங்கள் மூலம் மட்டுமன்றி வேறு பல வழிகளிலும் அவர்களை மீண்டும் உருவாக்குவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

தோற்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் உள்நாட்டில் இரகசியமாகச் செயற்படுகின்றனர். நாட்டின் பாதுகாப்பில் இப்போதுள்ள இறுக்கம் தளர்த்தப்பட்டால், ஜனநாயக ரீதியில் அரசியல் கட்சிகள் என்ற வடிவத்தில் பழைய தத்துவத்துடன் அவர்கள் செயற்படலாம்.

அதுமட்டுமன்றி, செயற்பாட்டு ரீதியாக பகிரங்கமாகவோ அல்லது இரகசியமாகவோ இயங்குவதற்கான சாத்தியமும் உண்டு.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவத் தலைமை அழிக்கப்பட்டு விட்டாலும் அது அவர்களின் ஒரு பிரிவே. ஏனைய பிரிவுகள் இன்னமும் பெரியளவில் உள்ளன.

இத்தகைய நிலையில் நாட்டின் பாதுகாப்பை இறுக்கமாகப் பேணும் விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமே இல்லை.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைநெறிகளுக்கான நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உதிர்த்த கருத்துக்களே மேற்கண்டவை.

"போர் மற்றும் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் நாடுகள் எதிர்நோக்கும் அரசியல் மற்றும் ராஜதந்திரச் சவால்கள்" என்ற தொனிப்பொருளில் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட கருத்துக்களை அவர் வெளியிட்டார்.

போர் முடிவுற்று மூன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும், தமிழர் பிரதேசங்களில் ஆயுதப் படைகளின் பிரசன்னத்தை அரசு தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறது. அது மட்டுமன்றி தமிழ் மக்களின் பரம்பரை பரம்பரையான நிலப்பிரதேசங்களை படையினரின் தேவைகளுக்கெனக் கபளீகரம் செய்துவருகிறது.

அந்த நிலையைத் தொடர்ந்தும், காலவரையறை எதுவும் விதிக்காமல் தொடரும் திட்டத்தினை நியாயப்படுத்தவும், அனைத்துலகத்துக்கு நியாயமான அல்லது தவிர்க்கமுடியாத தேவை என்று எடுத்தியம்புவதற்கான உள்நோக்கம் கொண்டதே அரசு சார்பில் பாதுகாப்புச் செயலாளர் வெளியிட்ட கருத்து எனக் கொள்வது தப்பன்று.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெற்ற ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்த பிரேரணை நிறைவேற்றப்பட்டதும்-

எமது நாட்டு அரசு நிறைவேற்ற வேண்டிய பரிந்துரைகளை நிறைவேற்ற ஓராண்டு கால அவகாசம் வழங்கப்பட்டதும், அந்தப் பரிந்துரைகளில் ஒரு சிலவற்றைத்தானும் நிறைவேற்ற இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் அக்கறை காட்டாது, காலம் கடத்தும் போக்கு சூரிய வெளிச்சம் போன்று தெரிகிறது.

அடுத்த மாதம் ஜெனிவாவில் கூடவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், இலங்கை அரசுக்கு எதிராக மற்றுமொரு இறுக்கமான பிரேரணையை அமெரிக்கா முன்வைக்கவுள்ளமை உறுதியாகிவிட்ட சூழமைவில்-

அமெரிக்காவினால் முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்துக்கு ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான உறுப்பு நாடுகள் ஆதரவளிக்கவுள்ளன என்று செய்திகள் வெளியாகிவரும் இன்றைய தருணத்தில்-

பாதுகாப்புச் செயலாளர் பழைய சம்பவங்களைப் பட்டியலிட்டு, முன்னைய பாணியிலான இட்டுக்கட்டும், சமாளிக்கும் போக்கில் கருத்து வெளியிட்டுள்ளமை, ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் நாட்டுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள பிரேரணைக்கு முன்னேற்பாடான சப்புக்கட்டுப் போடும் பதிலாக இதனை வெளிப்படுத்த முனைகிறாரா என்ற சந்தேகத்தை எவருக்கும் ஏற்படுத்தும்.

அரசாங்கம், அதன் பிரதானிகள் வகுத்துள்ள திட்டங்களையோ, உள்ளார்ந்த நயவஞ்சகத்துடன் பொதிந்துள்ள திட்டங்களையோ நடைமுறைப்படுத்தி அவற்றை நியாயப்படுத்த அரசு முனையலாகாது.

அதாவது விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்குகிறார்கள் அல்லது தலைதூக்க உள்ளனர் என்று கூறிக்கொண்டு, தமிழ் மக்களுக்குரிய ஜனநாயக உரிமைகளை பிய்த்துப் பிடுங்கி வழங்க முனையலாகாது.

அவற்றை முழுமையாகவும், சீராகவும் வழங்க முன்வரவேண்டும். அத்தகைய அரசியல் தர்மமே நாட்டின் சுபீட்சத்துக்கும் சகவாழ்வுக்கும் வழிகோலும். நல்ல எண்ணங்களே, நல்ல செயற்பாடுகளே நாட்டை துரிதகதியில் செவ்வனே முன்னேற்றும் என்பதனை தலைமைப் பதவிகளில் உள்ளவர்கள் எப்போதுதான் உணரப் போகிறார்களோ....!

# பாடசாலை அனுமதிக்கு பணம் பெற்ற அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை

அச்சுவேலி,பெப்.13

பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கு அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்வித்து பற்றுச் சீட்டை ஆவணமாகப் பெற்றுக் கொண்ட பாடசாலை அதிபர்கள் தொடர்பாக மேலிடத்துக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கு எதிராக விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

தரம் 1 மற்றும் மாணவர்களைப் பாடசாலையில் அனுமதிப்பதற்கு எந்தவிதமான நன்கொடையோ, அன்பளிப்போ பெற்றுக்கொள்ளக் கூடாது என கல்வி அமைச்சு சுற்றறிக்கை மூலம் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருப்பதோடு இந்த விடயம் தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தையோ, பழைய மாணவர் சங்கத்தையோ பயன்படுத்தக் கூடாது எனவும் வலியுறுத்திக் கூறியிருந்தது.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கும் வலியுறுத்தலுக்கும் மாறாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வங்கிக் கணக்கு மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் வங்கிக் கணக்கு என்பனவற்றில் ரொக்கமாக பணத்தை வைப்புச் செய்து அதற்கான பற்றுச்சீட்டை ஆவணமாகப் பெற்றோரிடம் இருந்து பெற்றுக்கொண்டமை தொடர்பாக பல பாடசாலை அதிபர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வகையில் மாணவர் அனுமதிக்கு பணம் பெற்ற பாடசாலைகள் வங்கிக் கணக்குகள் ஊடாக உள்வாங்கப்பட்டிருக்கும் நிதியை அடிப்படையாகக் கொண்டு மேல் விசாரணைகள் தொடரப்படவுள்ளன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும், பழைய மாணவர் சங்கத்தினதும் தலைவர் பதவியை பதவிவழியாக அதிபரே வகிக்கின்றார். இந்த வகையில் குறிப்பிட்ட காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள மற்றும் வங்கிக் கணக்குகளுக்கூடாக கையாளப்பட்டிருக்கும் கணக்குக்கு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் காரணம் கூறவேண்டும்.

மாணவர் அனுமதி தொடர்பான நன்கொடை, அன்பளிப்பு பெறப்பட்டிருக்கும் இடத்து சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டது. (த-11)

## இரசாயனவியல் பாடத்தின் செயன்முறைக்கான போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.13

வடமாகாண பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவர்களின் ஆய்வுகூடத் திறனை விருத்தி செய்வதற்காக இரசாயனவியல் பாடத்திட்டத்தில் உள்ள நியமிப்பு செய்முறைக்கான போட்டியை இலங்கை இரசாயனவியல் நிறுவனம் நடத்தவுள்ளது.

இதுவரை காலமும் கொழும்பில் நடத்தப்பட்டு வந்த இந்தப் போட்டிகளில் வடமாகாண மாணவர்கள் பங்குபற்றுகின்ற எண்ணிக்கை குறைவாக காணப்பட்டதால், வடமாகாண கல்வித் திணைக்களத்தினர் இந்த வருடம் போட்டியை யாழ். பல்கலைக்கழக இரசாயனத் துறை இலங்கை இரசாயனவியல் நிறுவனத்துடன் இணைந்து யாழ்.பல்கலைக்கழக இரசாயனத் துறை மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ளமையால் ஜி.சீ.ஈ. உயர்தர விஞ்ஞானப் பிரிவிலுள்ள பாடசாலைகளில் இருந்து தலா 3 மாணவர்கள் வீதம் பங்குபற்றலாம் எனவும், பங்குபற்றும் மாணவர்களின் விவரத்தை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலையின் பெயர், மாணவரின் பெயர், கற்கும் தரம் ஆகிய விவரங்களுடன் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கும் பங்குபற்றிய மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளார். (த-9)

## வடக்கில் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.13

வடக்கில் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிப்பதற்குக் கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கு வசதியாக கிளிநொச்சி 55 ஆம் கட்டையில் நெக்டா நிறுவனத்தின் உதவியுடன் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு வருகைதரும் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோர் இந்தக் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளனர்.

வடக்கில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தை மேலும் ஊக்குவிப்பதற்குக் கடற்றொழில் அமைச்சு துரிதகதியில் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது என்றும் கூறப்பட்டது. (ம-17)

# வீதி ஒழுங்குமுறைகளைத் தகுந்த முறையில் சாரதிகள் பின்பற்றினால் விபத்தை தவிர்க்கலாம்

### யாழ்.மாவட்ட வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவிப்பு

தென்மராட்சி,பெப்.13

வாகனச் சாரதிகள் வீதி ஒழுங்கு முறைகளை சரியாகக் கையாள்வதன் மூலமே அநாவசியமாக இடம்பெறுகின்ற உயிரிழப்புகளையும், வீதி விபத்துக்களையும் கட்டுப்படுத்த முடியும் என்று யாழ். மாவட்ட வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக போக்குவரத்து பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் வாகனச் சாரதிகள் வீதி ஒழுங்கு முறைகளைச் சரியாகக் கடைப்பிடிப்பதில்லை. அத்துடன் வாகனங்களை உரிய முறையில் கையாள்வது இல்லை. இதனால் வீதி விபத்துக்களை ஏற்படுத்துவதுடன் அநாவசியமான உயிரிழப்புகளையும் சந்திக்கின்றனர்.

அவற்றைக் கட்டுப்படுத்த வாகன சாரதிகள் வீதி ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப வாகனங்களைச் செலுத்த வேண்டும். குறிப்பாக மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் உட்பட மோட்டார் சைக்கிளைச் செலுத்துவோரும் தலைக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதனைவிட சைக்கிளில் பிறேக், பெல் உட்பட லைற் என்பனவும் இருக்க வேண்டும். இதனைப் பின்பற்றி வீதிகளில் சைக்கிளைச் செலுத்த வேண்டும். சிறிய வாகனங்களைச் செலுத்துவோர் விடும் தவறுகளினாலேயே பெரிய வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

மோட்டார்சைக்கிளில் பயணிக்கும் சிறு பிள்ளைகளும் கட்டாயம் தலைக்கவசம் அணிந்திருக்க வேண்டும். ஏனெனில் விபத்துக்கள் ஏற்படுகின்ற போது தலையிலேயே அதிகளவான பாதிப்புக்கள் ஏற்படுவதுடன் எதிர்பாராத உயிரிழப்பையும் சந்திக்க நேரிடும்.

இத்தகைய நடைமுறைகளை எவரும் பின்பற்றுவதில்லை. கடமையில் உள்ள பொலிஸாருக்குப் பயந்து தாம் வீதி ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுவதாக பாவனை செய்கின்றனர். இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் அவர்களுக்கே என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வீதிக் கடமையில் உள்ள பொலிசார், கண்காணிப்பதற்கு ஏற்ப வாகனச் சாரதிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எமது பிரதேச மக்களின் அநாவசிய விபத்துக்களைத் தடுக்க வேண்டும்.

போக்குவரத்தின் போது வீதி ஒழுங்கு முறைகளைச் சரியாகத் தெரிந்த நபர் ஒருவருக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். சரியான பரீட்சார்த்தம் இல்லாத நபர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதால் வீதி விபத்துக்களை அதிகமாகச் சந்திக்க நேரிடுகிறது.

குறிப்பாக வாகனச் சாரதிகளின் அசமந்தப் போக்கினாலே அதிகளவான விபத்துக்கள் யாழ். மாவட்டத்தில் இடம்பெறுகின்றன. இதனால் இளம் சமூகத்தினரும் அநாவசியமான உயிர்ப்புகளைச் சந்தித்து வருகின்றனர்.

எனவே வாகனச் சாரதிகள் வீதிகளில் இடம்பெறுகின்ற விபத்துக்களைத் தடுப்பதற்கு உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். உரிய வேகக் கட்டுப்பாடு, வாகனங்களின் பாவனை, பாதசாரிகளை அவதானித்தல் போன்றவற்றை அவதானிப்பது அவசியமாக்கப்பட்டுள்ளன - என்றார். (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி சந்தைக் கடைகளை கையளிக்கப் பொலிஸார் இடையூறு

## கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் விசனம்



கிளிநொச்சி,பெப்.13

கிளிநொச்சி சந்தைக் கடைகளைக் கையளிக்கும் நிகழ்வை பொலிஸார் குழப்பியமை தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.

நீதிமன்றத்தினால் தடை உத்தரவு நீக்கப்பட்ட நிலையில் பிரதேச சபையின் செயற்பாடுகளில் தலையிட்டிருக்கத் தேவை இல்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசியல் வாதிகள் சிலரின் தலையீடு காரணமாகவே இந்தப் பிரச்சினை எழுந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி நகர் வர்த்தக சந்தைக் கட்டடத்தில் உள்ள கடைத் தொகுதிகளை உரிய வர்த்தகர்களிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் நேற்று முன்தினம் காலை தொடக்கம் இடம்பெற்றன.

புதிய சந்தையின் நிரந்தரக் கடைகளை வர்த்தகர்களிடம் கையளிப்பதற்காக குலுக்கல் மூலம் தெரிவுகள் வர்த்தகர்களின் முன்னிலையில் கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் நா.வை.குகராசா தலைமையில் கரைசசிப் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்று முடிந்தது. அன்றைய தினம் பிற்பகல் 3 மணியளவில் உத்தியோக பூர்வமாக கடைகளை வர்த்தகர்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள் சந்தைக் கட்டடத் தொகுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

அப்போது அங்கு பெரும் எண்ணிக்கையான பொலிஸார் வருகை தந்து மேலிடத்து உத்தரவுக் கமைய சந்தையின் கடைத் தொகுதிகளைப் பிரதேச சபையினர் வர்த்தகர்களிடம் இன்றைய தினம் வழங்க முடியாது என்று கூறினர்.

மேலும் சந்தையின் பிரதான நுழைவாயிலையும் பூட்டியதுடன் உள்ளே எவரும் வரக்கூடாது என்றும் உத்தர விட்டுள்ளனர். இதனால் சந்தைக்குள் சென்ற சில வர்த்தகர்கள் மற்றும் பிரதேச சபையின் தலைவர் நா.வை.குகராசா, உப தலைவர் வ.நகுலேஸ்வரன் உட்பட உறுப்பினர்கள் பலரும் பொலிஸாருடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்தையின் புதிய கட்டடத்தை முறைப்படி கையளிப்பதற்குரிய அனுமதி எமக்கு நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பிரதேச சபைக்குட்பட்ட இந்தச் சந்தையை நாம் தான் உரிய வர்த்தகர்களிடம் கையளிக்க வேண்டும். அதனைத்தான் இன்று செய்கின்றோம் என்று பிரதேச சபையின் சார்பில் கூறப்பட்டது. எனினும் பொலிஸார் அதனை ஏற்கவில்லை. அங்கு எவரும் உட்பிரவேசிக்க முடியாது என்றும் கூறிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. வாசலில் பொலிஸார் தொடர்ந்தும் காவலில் ஈடுபட்டனர்.

(க-426)

# மின்சாரம் இல்லாததால் இயங்காத கணினிகள்

## கிளிநொச்சி மேற்கில் அவல நிலை

**அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் பிரிவால் கணினிகள் பல வழங்கப்பட்டன. ஆனால் அவை இயக்க முடியாத நிலையில் வைக்கப்பட்டுள்ளன.**

கிளிநொச்சி மேற்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படாததால் இங்குள்ள பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள கணினிகளை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அக்கராயன் மருத்துவ மனைக்கு மின்சாரம் வழங்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்கள் கடந்த ஓகஸ்ட் மாதத்தினுள் அக்கராயன் ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான், ஜெயபுரம், வேரவில் ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் எனத் தெரிவித்தனர்.

இதற்கு அமைவாக மேற்குறிப்பிட்ட இடங்களில் மின் கம்பங்கள் நடப்பட்டன. பின்னர் மின்கம்பிகளும் பொருத்தப்பட்டன. ஆனால் மின்சாரம் மட்டும் வழங்கப்படவில்லை. இந்த ஆண்டிலாவது மின்சாரம் வருமா என்று மின்கம்பங்களைப் பார்த்தபடி இங்குள்ள மக்கள் உள்ளனர்.

அக்கராயன் மகாவித்தியாலயம், வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம், ஜெயபுரம் மகாவித்தியாலயம், வேரவில் மகாவித் தியாலயம் உட்பட பல பாடசாலைகளில் கணினிகள் உள்ளன. மின்சாரம் இல்லாத தால் இவை இயங்க முடியாத நிலையில் உள்ளன. அண்மையில் கூட அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு கூட இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் பிரிவால் கணினிகள் பல வழங்கப் பட்டன. ஆனால் அவை இயக்க முடியாத நிலையில் வைக்கப்பட்டுள்ளன. (க-18)

# சேதமுற்ற வீதிகளைப் புனரமைக்க வவுனியா நகரசபை நடவடிக்கை

வவுனியா,பெப்.13

வவுனியா நகரசபையினர் வீதிகளைப் புனரமைப்பதற்கென நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இங்குள்ள மன்னார் வீதி, ராண்ஸ் போமர் வீதி, முனியப்பர் வீதி, கோயில் புதுக்குளம் 9 ஆம் ஒழுங்கை, மன்னார் வீதி 1 ஆம் 3 ஆம் ஒழுங்கை, காளி கோயில் வீதி மற்றும் இரு வீதிகள் என்பனவே புனரமைக்கப்படவுள்ளன.

தற்போது சேதம் அடைந்து காணப்படும் இந்த வீதிகள் ஊடாகப் பயணிப்பதில் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட பலதரப்பட்ட மக்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனையடுத்து இந்த வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கப்படவுள்ளன என்று தெரியவருகின்றது. (க-402)

# முழங்காவிலுக்கு நாமல் எம்.பி. வருகை

**அவருடன் விவசாய அமைச்சர், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி எம்.ஜே.சிசன், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் ஆகியோரும் சென்றிருந்தனர்.**

முழங்காவில்,பெப்.13

கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பகுதிக்கு நேற்று வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இரண்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

முற்பகல் 10 மணியளவில் முழங்காவில் சந்தியில் மின்மாற்றியைத் திறந்து வைத்த அவர் முழங்காவில் நகருக்கான மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

பின்னர் 10.20 மணியளவில் முழங்காவில் மருத்துவ மனைக்குச் சென்ற அவர் அங்கு அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு, ஆண், பெண் விடுதிகள் என்பவற்றைத் திறந்து வைத்தார்.

விவசாய அமைச்சர் விஜிதமுனி சொய்சா இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர் திருமதி எம்.ஜே.சிசன், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோரும் அவருடன் சென்றிருந்தனர்.

(க-18)

# நெல்லை விற்பனை செய்வதில் முசலி விவசாயிகளுக்கு நெருக்கடி

**தனியார் வர்த்தகர்கள் மிகக் குறைந்த விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதால் தாம் நட்டத்தை எதிர் கொள்வதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.**

மன்னார்,பெப்.13

மன்னார் முசலிப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் தாம் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்வதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இந்தப் பகுதிக்கு வரும் தனியார் வர்த்தகர்கள் மிகக் குறைந்த விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதால் தாம் நட்டத்தை எதிர் கொள்வதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.


மன்னார் மாவட்டத்தில் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை இல்லாததன் காரணமாக விவசாயிகள் நெல்லைச் சந்தைப்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்தது. இந்த நிலையில் எஞ்சிய பயிர்கள் பராமரிக்கப்பட்ட நிலையில் தற்போது அறுவடை இடம் பெற்று வருகின்றது.

ஆனால் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை இங்கு கடைப்பிடிக்கப்படாததால் குறைந்த விலைக்கே தனியார் வியாபாரிகள் நெல்லைக் கொள்வனவு செய்து வருகின்றனர். குறிப்பாக முசலி பிரதேசத்தில் நெல்லை சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது பல இடங்களிலும் அறுவடை பூர்த்தியடையாத நிலையில் உள்ளது. தற்போது பெய்து வரும் மழை காரணமாக விவசாயிகள் அசௌகரியங்களையும் எதிர் நோக்கியுள்ளனர்.

(க-12)



நெடுங்கேணி ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 5 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள சரஸ்வதி சிலையின் கவினுறு தோற்றம். (க-435)

# பாடசாலை ஆண்டுவிழா: வவுனியாவில் நடைபவனி

கிளிநொச்சி,பெப்.13

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபவனி ஒன்று இடம்பெற்றுள்ளது.

பாடசாலை அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் உட்பட ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் இந்த நடைபவனியில் கலந்து கொண்டனர்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன்பாகத் திரண்டவர்கள் வவுனியா கண்டி வீதி, பசார் வீதி, பொது வைத்தியசாலை, மன்னார் வீதி ஊடாக நடைபவனியாகச் சென்று நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தைச் சென்றடைந்தனர்.

மேலும் இந்த நடைபவனியில் ஈடுபட்டவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கென உண்டியல் மூலம் நிதி சேகரிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

(க-402)

# கமக்கார அமைப்புக்களை புனரமைக்குமாறு வேண்டுகோள்

கிளிநொச்சி,பெப்.13

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் உள்ள கமக்கார அமைப்புகளை புனரமைப்புச் செய்யுமாறு இப்பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் உள்ள நான்கு உபதிட்டக் குழுக்களான கமக்கார அமைப்புக்களை மீளப்புனரமைப்பு செய்யுமாறும், கடந்த மீள் குடியமர்வின் பின்னர் இவை புனரமைக்கப்படவில்லையெனவும் இப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும் இவற்றைப் புனரமைத்து விவசாய உள்ளீடுகளை உரிய முறையில் விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐவருக்கு அபராதம்

தென்மராட்சி,பெப்.13

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

பொது மக்கள் கொடுத்த இரகசியத் தகவலையடுத்து அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்த சாவகச்சேரி பொலிஸார் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐந்து பேரைக் கைது செய்தனர்.

குறித்த ஐந்து பேரையும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது ஐவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் சூழலை வைத்திருப்போருக்கு உடனடி அபராதம்

### டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ். மாவட்டத்தில் டெங்கு நுளம்பை ஒழிக்கும் திட்டத்தின் கீழ் பரிசோதனைக்குச் செல்லும் வேளையில் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலையில் சூழலை வைத்திருக்கும் குடியிருப்பாளர்களுக்கு உடனடி தண்டம் விதிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டெங்கு நுளம்பு அல்லது டெங்கு நுளம்பின் குடம்பிகள் காணப்படும் இடங்களின் குடியிருப்பாளர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வரை தண்டம் விதிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

டெங்கு நுளம்பை ஒழிக்க பல தடவைகள் டெங்கு வாரம் மூலம் நடவடிக்கைகள் மேற்கொண்டும் யாழ்.மாவட்டத்தில் டெங்கின் தாக்கம் குறையவில்லை. டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான காரணிகளை வைத்துள்ள குடியிருப்பாளர்களுக்கு நீதிமன்றினால் விதிக்கப்படும் தண்டம் குறைவாக உள்ளது. இவ்வாறான காரணங்களால் சம்பவ இடத்திலேயே தண்டம் விதிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுகாதாரத் திணைக்களம், பிரதேச செயலகம், உள்ளூராட்சிச் சபைகள், பொலிஸார் ஆகியோர் இணைந்து ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## வடமராட்சியில் புகையிலை நாற்றுகள் அமைத்தோர் பலத்த ஏமாற்றம்

வடமராட்சி,பெப்.13

பொலிகண்டி,மந்திகை, அல்வாய் போன்ற இடங்களில் புகையிலை நாற்று மேடைகளை அமைத்தோர் இந்தமுறை அதனை சந்தைப் படுத்த முடியாத நிலையில் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

வடமராட்சி பிரதேசத்துக்கு வெளியே வலிகாமம், தீவகம், தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் புகையிலைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பொலி கண்டி, மந்திகை, அல்வாய் போன்ற இடங்களில் இருந்தே புகையிலை நாற்றுக்களைப் பெற்று வருவது வழக்கமாகும்.

இந்தமுறை குறித்த தூரப் பிரதேசங்களில் குறைந்தளவிலேயே புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டதால் புகை யிலை நாற்றுக்களைப் பெற்றுக் கொள்ள விவசாயிகள் அதிக அளவில் முன்வரவில்லை.

அதனால் வடமராட்சிப் பிரதேசத்தில் குறித்த இடங்களில் பெருமளவில் புகையிலை நாற்று மேடைகளை அமைத்தோர் புகையிலை நாற்றுக்களைச் சந்தைப் படுத்த முடியாதநிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-8)

# உறுப்புகள் செயலிழந்த 789 பேருக்குச் சிகிச்சை

### யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த வருடம் மட்டும்

யாழ்ப்பாணம்,பெப்.13

தற்கொலை முயற்சி, விபத்து மற்றும் பிறப்பு போன்ற காரணங்களால் உடல் உறுப்புகள் செயலிழந்த 789 பேர் கடந்த வருடம் யாழ். போதனா வைத்தியசாலையின் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வடமாகாணத்துக்கென ஒரேயொரு சிகிச்சைப் பிரிவாகச் செயற்படும் குறித்த சிகிச்சைப் பிரிவில் நாளாந்தம் 20 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதுடன் அவர்களில் சிலர் கிளினிக் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த வருடம் சிகிச்சை பெற்றவர்களில் அதிகமானோர் 35 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் பிறப்பினால் அங்கங்கள் பலவீனமடைந்த சிறுவர்களும் உள்ளடங்குவர்.

அத்துடன் சிகிச்சை பெற்றவர்களில் குடும்பப் பிரச்சினை, காதல் தோல்வி வேறு பல காரணங்களால் மனவிரக்தியடைந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களே அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்கொலை முயற்சியின் போது மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு மூட்டிக் கொண்டவர்கள் உடல் கருகி காயங்கள் சிதைவடைந்து நீண்ட நாள் கடந்தும் மாறாத நிலையில் உடலில் ஏதாவது ஓர் அங்கம் செயலிழக்கும் நிலையை எதிர்நோக்கி இருந்தனர்.

தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றும் அவர்களின் அங்கங்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வரமுடியாத நிலையில் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடந்த வருடம் தற்கொலை முயற்சியால் மண்ணெண்ணெய் ஊற்றி உடல் கருகி அங்கங்கள் சிதைவடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததுடன் சிகிச்சை பயனின்றி ஒரு சிலர் இறப்பையும் சந்தித்துள்ளனர்.

கடந்த வருட காலப்பகுதியில் மருத்துவப் பிரிவில் 296 பேரும், சத்திரசிகிச்சைப் பிரிவில் 238 பேரும், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் 255 பேரும் என 789 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சிகிச்சை பெற்றவர்களில் பெரும்பாலானோர் கிளினிக் முறையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே அதிகமானோர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சிகிச்சை பெற்ற அவர்களுக்கு உடற்பயிற்சிகள் ஊடாக அங்கங்கள் மீளவும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்றதாக தொடர்ந்தும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (வ-14)

## தொலைபேசிக் கம்பங்கள் நகர்த்தும் பணிகள் பருத்தித்துறை நகரில்

வடமராட்சி,பெப்.13

பருத்தித்துறை நகரப் பகுதியில் வீதி அகலிப்பு நடவடிக்கைகளுக்கு உதவியாக தொலைபேசி தந்திக் கம்பங்களை பின்நோக்கி நகர்த்தும் பணிகள் இடம்பெறுகின்றன.

நகரிலுள்ள ஓராங்கட்டைச்சந்தி தொடக்கம் மத்திய பஸ் நிலையம் வரையான பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் தந்திக் கம்பங்களை, தொலைபேசிச் சேவைக்கு தடங்கல் இல்லாத வகையில் பின்நோக்கி நகர்த்தும் பணிகள் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்றன.

பணிகள் இன்னமும் ஓரிரு தினங்களில் நிறைவு பெற்று விடும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வீதி அகலிப்பையொட்டி ஏற்கனவே மின்கம்பங்கள் பின்நோக்கி நகர்த்தப்பட்டதுடன் வர்த்தக நிலையங்கள் மற்றும் கடைகள் வீடுகளின் சுற்று மதில்கள் என்பனவற்றின் முன் பகுதிகள் இடிக்கப்பட்டு பின்நோக்கி நகர்த்தப்பட்டுள்ளன.

பருத்தித் துறை
யாழ்ப்பாணம்
பிரதான வீதி
அகலிப்புப் பணி
யில் பருத்தித்துறை
நகரத்திலிருந்து
நகரின் நுழைவாயி
லான ஓராங்கட்
டைச் சந்தி வரை
வீதி அகலிப்புப்
பணி இதுவரை
மேற்கொள்ளப்பட
வில்லை

இதேவேளை, பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலிப்புப் பணியில் பருத்தித்துறை நகரத்திலிருந்து நகரின் நுழைவாயிலான ஓராங்கட்டைச் சந்தி வரை வீதி அகலிப்புப் பணி இதுவரை மேற்கொள்ளபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-8)

## காணாமற்போன முதியவர் குறித்த விவரம் தேடும் உறவினர்

முதியவர்களை குடும்பத்தவர்களுடன் மீள் இணைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் காணாமல்போன இரண்டு முதியவர்களை அவர்களது உறவினர்கள் தேடி வருகின்றனர் என்று கைதடி முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் பிறவுண் வீதியைச் சேர்ந்த சின்னம்மா சின்னத்தம்பி (மலேசியா சின்னம்மா) என்ற முதியவர் 1995 காலப் பகுதி யில் இடப்பெயர்வுகளால் பாதிப்படைந்து தொடர்பற்ற நிலையில் உறவுகளால் தேடப்படுகிறார்.

இதே போன்று பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட தம்பு கனகாம்பிகை என்ற முதியவர் விவரத்தையும் அவரது உறவினர்கள் தேடுகின்றனர். தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களினால் குறித்த முதியவர்களது தொடர்புகள் உறவினர்களிடம் துண்டிக்கப்பட்டு விட்டதாகவும், அவர்கள் பற்றிய தகவல்களை அறிய அவர்களது உறவினர்கள் ஆவலாக உள்ளனர் எனவும் கைதடி அரச முதியோர் இல்லத்திக் அத்தியட்சகர்மேலும் தெரிவித்துள்ளார். (வ-51)



2012 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 10 ஆம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரியின் மாணவி நிரோஜினிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். சித்தங்கேணி நாமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை அதிபர் ஜெ.ஜெயராணி, வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ம-14)

## மாநகரப் பகுதியில் கட்டாக்காலி நாய் பிடிக்கும் பணிகள் துரிதம்

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ். மாநகரப் பகுதியில் கட்டாக்காலியாக நடமாடும் நாய்களைப் பிடிக்கும் பணிகள் தற்போது துரிதப் படுத்தப்பட்டுள்ளதாக மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

இந்தவிடயம் குறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

நாய் பிடிக்கும் மேற்படி சபைத் தொழிலாளர்களால் தினமும் 50 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படுகின்றன.

கரையோரப் பகுதிகளில் கட்டாக்காலியாக நடமாடிய அதிகமான நாய்கள் பிடிக்கப்பட்டன.

மாநகரப் பகுதியில் ஒவ்வொரு பிரதேச ரீதியாகவும் கட்டாக்காலி நாய்கள் தொடர்ந்தும் பிடிக்கப்படும். ஆகவே மக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டும்.

இந்த நடவடிக்கையினால் நகரிலும் அதனை அண்டிய புறநகர்ப பகுதியிலும் தற்போது கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றன.-என்றார். (வ-17)

## ‘காப்பெற்’ வீதியாக மாறியது மணிக்கூட்டுக் கோபுர வீதி

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ். மணிக்கூட்டு கோபுர வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவோடு இரவாக குறித்த வீதி காப்பெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மணிக்கூட்டு கோபுரத்தில் கடிகாரமும் கடந்த சில மாதங்களாக இயங்காது செயலற்ற நிலையிலேயே காணப்படுகின்றது.

மேற்படி கடிகாரத்தை மாற்றி புதுக்கடிகாரம் ஒன்றை அமைப்பதற்கு மாநகராட்சி மன்றம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாக மாநகர முதல்வர் மாநகர சபை மாதாந்த கூட்டத்தில் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

எனினும் இது வரைக்கும் குறித்த கடிகாரம் அமைக்கப் படாதது குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர். (வ-17)


## மின்இணைப்பின்றி மருதங்கேணி கால்நடை வைத்திய நிலையம்

வடமராட்சி,பெப்.13

மருதங்கேணி அரசினர் கால்நடை வைத்திய நிலையத்துக்கு இன்னமும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கட்டி முடிக் கப்பட்டு செயற்பட்டு வரும் மேற்படி வைத்திய நிலை யத்துக்கு மின் இணைப்பு இன்மையால் தண்ணீர் வசதி மற்றும் கால்நடைகளுக்கான மருந்து வகைகளைக் குளிரூட்டியில் வைத்து பாதுகாத்தல் போன்ற வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த வைத்திய நிலையத்துக்கு தண்ணீர்க்கிணறு, தண்ணீர்த்தாங்கி மற்றும் குழாய் இணைப்புக்கள் யாவும் ஏற்கனவே பூர்த்தியடைந்த நிலையில் உள்ளன. மின் இணைப்பு இன்மையால் அவை செயற்பட முடியாத நிலை காணப்படுகிறது. (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை மீனாட்சி அம்மன் ஆலய தெற்குவாசல் சந்தனக்கூடு விழாவையொட்டி, நெல்பேட்டையில் இருந்து அலங்கரிக்கப்பட்ட கப்பல் போன்ற அலங்கார அமைப்பை எடுத்து வந்த காட்சி.

# குஜராத் சிறைக்குள் 18 அடி நீளமான சுரங்கம் தோண்டிய கைதிகள்

அகமதாபாத், பெப்.13

குஜராத் மாநிலம் அகமதாபாத் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள குண்டு வெடிப்பு வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் தாம் தங்கிச் செல்வதற்கு சிறைக்குள் 18 அடி நீளத்துக்கு சுரங்கம் தோண்டியிருந்தது தெரியவந்துள்ளது.

**தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் 68 பேரும் சபர்மதி மத்திய சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர்.**

அகமதாபாத்தில் 2008 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் திகதி நகரின் பல்வேறு இடங்களில் தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன. இதில் 57 பேர் உயிரிழந்தனர்.

அந்த தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் 68 பேரும் சபர்மதி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள், பெரிய அறைகளில் 14 பேர் வீதம் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக, நீதிமன்ற உத்தரவுப்படி சிறை வளாகத்துக்குள்ளேயே அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், அறை ஒன்றில் இருந்த குற்றவாளிகள் 14 பேர் சுரங்கம் தோண்டி தப்பிக்க முயன்றது தெரியவந்துள்ளது.

சிறை அதிகாரிகள் தற்செயலாக நான்காம் எண் அறையை சோதனையிட்டுள்ளனர். அப்போது அந்த அறையில் 18 அடி நீளத்துக்கு சுரங்கம் தோண்டப்பட்டிருந்தது தெரியவந்தது.

# எல்லையோர மாநிலங்கள் அதிக விழிப்புடன் இருக்க வேண்டும்

## ஆளுநர் மாட்டில் பிரணாப் கருத்து



டில்லி, பெப்.13

எல்லையோர மாநிலங்கள் பாதுகாப்பு விடயத்தில் அதிக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அறிவுறுத்தியுள்ளார்.

டில்லியில் 44ஆவது ஆளுநர்கள் மாநாடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியது. மாநாட்டின் ஆரம்ப விழாவில், அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2012ஆம் ஆண்டு உள்நாட்டுப் பாதுகாப்பில் நல்ல முன்னேற்றம் இருந்தது. நாட்டின் ஒருமைப்பாட்டை சீர்குலைக்க முயலும் தேச விரோத சக்திகளைத் தடுப்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான கட்டமைப்பை மேலும் பலப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

எல்லையோர மாநிலங்கள் பாதுகாப்பு விடயத்தில் கூடுதல் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

அதிகரித்து வரும் சவால்களுக்கு ஏற்ப, எல்லையோரப் பகுதிகளில் உள் கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண் டும்-என்றார்.

மேற்படி மாநாட்டில் துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி, பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர்கள் மற்றும் மாநில ஆளுநர்கள் கலந்துகொண்டனர்.

# சென்னை ஐ.நா.அலுவலகத்தை நேற்று முற்றுகையிட முயற்சி

## வைகோ, நெடுமாறன் கைது

சென்னை, பெப்.13

சென்னையில் ஐ.நா. அலுவலகத்தின் முன்னால் நேற்று முற்றுகைப் போராட்டம் நடத்திய பழ. நெடுமாறன், வைகோ உட்பட பலர் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டனர்.



**இலங்கையில் மனித உரிமை மீறல்களைத் தடுக்கத் தவறிய ஐ.நா. சபையைக் கண்டித்து முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டது.**

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களைத் தடுக் கக்கோரி சென்னையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தின் முன்பாக தீக்குளித்த முருகதாசனின் நினைவுநாள் நேற்றாகும்.

அதையொட்டி இலங்கையில் மனித உரிமை மீறல்களைத் தடுக்கத் தவறிய ஐ.நா. சபையைக் கண்டித்தும் இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு கான பொதுவாகக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் சென்னை அடையாறில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து சென்னையில் நேற்றுக் காலை பழ. நெடுமாறன், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹி ருல்லா, சட்ட சபை உறுப்பினர்கள் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவுநர் தி.வேல் முருகன் உள்ளிட்ட நூற்றுக் கணக்கானோர் ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட முயன்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

# துபாயிலிருந்த இந்தியர்கள் விடுதலை

துபாயில், பாகிஸ்தானியரைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு தூக்குத் தண்டனை பெற்று, பல் வேறு போராட்டங்களுக்குப் பின் விடுதலை பெற்ற 17 இந்தியர்கள் நேற்று நாடு திரும்பினர்.

துபாயில்பணியாற்றச் சென்ற பஞ்சாபைச் சேர்ந்த 16 பேரும், ஹரியானாவைச் சேர்ந்த ஒருவரும் கொலைக் குற்றத்துக்காக 2010 ஆம் ஆண்டு தூக்குத் தண்டனை பெற்றனர்.

பல்வேறு நீதிப் போராட்டங்களுக்குப் பின்னர், அவர்கள் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்பட்ட நிலையில் நேற்று ஏர் இந்தியா விமானம் மூலம் துபாயில் இருந்து புதுடில்லியைச் சென்றடைந்தனர்

# பலத்த பாதுகாப்பில் சென்னை இலங்கை அலுவலகங்கள்

சென்னை, பெப்.13

சென்னையில் இலங்கை வங்கி மீது நடந்த தாக்குதல் சம்பவத்தை அடுத்து எதிரொலியாக இலங்கை அலுவலகங்களுக்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியா வந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சென்னை எழும்பூரில் உள்ள இலங்கை வங்கி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட 6 பேர் கைது செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை ஏயார் லைன்ஸ் அலுவலகம், எழும்பூரில் உள்ள புத்த துறவிகள் தங்கும் விடுதிகளில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

துப்பாக்கி ஏந்திய பொலிஸாரும் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். அந்த அலுவலகங்களுக்கு செல்பவர்கள் அனைவரும் தீவிர சோதனைகளுக்குப் பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர். அடையாள அட்டை உள்ள ஊழியர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர்

# அப்சல் குருவைத் தூக்கிலிட்டதில் அரசியல் உள்நோக்கம் இல்லை

## உள்துறை அமைச்சர் ஷிண்டே கருத்து



சென்னை,பெப்,13

நாடாளுமன்றத் தாக்குதல் குற்றவாளி அப்சல் குருவைத் தூக்கிலிட்டதில் அரசியல் உள்நோக்கம் இல்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் சுஷீல்குமார் ஷிண்டே விளக்கம் அளித்துள்ளார்.

நாடாளுமன்றத் தாக்குதல் குற்றவாளி அப்சல் குருவின் தூக்குதண்டனை குறித்து காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா சில ஆட் சேபங்களை எழுப்பியிருந் தார்.

இந்தநிலையில், ஒமர் அப்துல்லாவின் ஆட்சேபம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் சுஷீல்குமார் ஷிண்டேவிடம் டில்லியில் செய்தியாளர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்து அவர் கூறியதாவது:-

அப்சல் குருவை கடந்த சனிக்கிழமை தூக்கிலிடப்போவது குறித்து, ஒமர் அப்துல்லாவிடம் கடந்த வெள்ளிக்கிழமை இரவே தகவல் தெரிவித்தேன்.

இந்த விவகாரம் மிகவும் சிக்கலானது என்பதால் இரகசியம் காக்க வேண்டியிருந்தது. அப்சல் குருவைத் தூக்கிலிடுவதற்கு எடுக்கப்பட்ட முடிவு, அரசியல் ரீதியிலானது அல்ல. இதில் அரசியல் உள்நோக்கம் இல்லை.

இந்த நடவடிக்கை சட்ட விதிமுறைப்படியே எடுக்கப்பட்டது. பொதுவாக, கருணை மனுவை நிராகரிக்கும்போது அதை ஜனாதிபதி உள்துறை அமைச்சகத்துக்கு 'நிராகரிக்கப்பட்டது' என்பதைக் குறிப்பிட்டு அனுப்பி வைப்பார்.

உள்துறை அமைச்சகம் அதுதொடர்பான கோப்பை, தண்டனை நிறைவேற்றத்துக்காக அனுப்பி வைக்கும். பேயந்த் சிங் கொலையாளிகளின் வழக்கு உள்ளிட்ட ஏனைய வழக்குகளிலும், சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு கோப்புகள் அனுப்பப்பட்டன. அங்கு, குற்றவாளிகள் மேல் முறையீட்டுக்குச் சென்றனர்.

அப்சல் தூக்கு குறித்து அவரது குடும்பத்தாருக்கு முன் கூட்டியே தெரியப்படுத்தாதது ஏன் என்று கேட்கிறீர்கள்.

சிறை விதிகளின்படி இது குறித்து அவர்களுக்கு சிறை அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும்.


அதன்படி, அவரது குடும்பத்தாருக்கு கடந்த 7 ஆம் ஆம் இரண்டு விரைவுத் தபால்கள் அனுப்பப்பட்டன. கடந்த 9ஆம் திகதி தான் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இது போன்ற சம்பங்களில் இரகசியம் காக்கப்பட வேண்டும். இது அரசியல் முடிவு அல்ல. சட்டப்படி எடுக்கப்பட்ட முடிவு. ராஜீவ் காந்தி கொலை வழக்கு, பஞ்சாப் முன்னாள் முதல்வர் படுகொலை வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ளன. அது குறித்துப் பரிசீலிக்கப்படும்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து

## ரஷ்யாவில் 18 பேர் சாவு



மொஸ்கோ, பெப்.13
ரஷ்ய நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 18 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்யாவின் வடக்குப் பகுதியில் உள்ள கோமி மாகாணத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்திலேயே வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

சுரங்கத்தில் 2600 அடி ஆழத்தில் பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டிருந்த போது மீதேன் வேதிப் பொருள் கசிவால் விபத்து ஏற்பட்டுள்ளது. அதில் 18 பேர் உயிரிழந்தனர்.

மீட்புப் பணியினர் இதுவரை 10 பேரின் உடல்களை மீட்டுள்ளனர். தொடர்ந்தும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாக மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

விபத்து நடைபெற்ற போது 250க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குறித்த சுரங்கத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தனர் என்று கூறப்படுகிறது.

விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், அவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடுகள் உடனடியாக வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ற)

# 'டிஸ்கவரி' படப்பிடிப்பில் ஹெலிகொப்டர் விபத்து

## 3 பேர் சாவு



நியூயோர்க், பெப்.13
தொலைக்காட்சி படப்பிடிப்பில் நிகழ்ந்த ஹெலிகொப்டர் விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

பிரபல தனியார் தொலைக்காட்சி நிறுவனமான 'டிஸ்கவரி', சனலின் படப்பிடிப்பிலேயே விபத்து நிகழ்ந்துள்ளது.

சிறந்த காட்சிகயை தத்ரூபமாக படம்பிடித்து ஒளிபரப்பி வருவதில் டிஸ்கவரி சனல் உலகில் முன்னணி வகிக்கி றது. இராணுவத்தை மையமாக வைத்து ஒரு தொடரை அந்த தொலைக்காட்சி சனல் தயாரித்து வருகிறது. இந்த தொடரின் படப்பிடிப்புக்கு ஹெலிகொப்டரும் பயன் படுத்தப்பட்டு வந்தது. படப்பிடிப்பின் போது ஹெலிகொப்டர் தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது. அந்த ஹெலிகொப்டரில் இருந்த மூன்று பேரும் உயிரிழந்தனர்.

தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர் பிலிப் சொகோலோஸ்கி விபத்துக் குறித்துக் கூறுகையில்-

''படப்பிடிப்புக்கு ஹெலி கொப்டர் பயன்படுத்த முறைப்படி அனுமதி பெற்றிருந்தோம். விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை தகவல் ஏதும் வரவில்லை. எமது தொழில்நுட்பக் குழு தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றது'' - என்றார். (ற)

## சிரிய–துருக்கி எல்லையில் குண்டுவெடிப்பு

### 13 பேர் சாவு

டமாஸ்கஸ், பெப்.13
சிரிய-துருக்கி எல்லையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 13 பேர் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயமடைந்தனர். பொதுமக்கள் பயணித்த பஸ் ஒன்றே குண்டு வெடிப்பில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இது குறித்த மேலதிக தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை. (ற)

# அணு ஆயுத சோதனை?

## வடகொரியா நடத்தியிருப்பதாக தென்கொரியா கூறுகிறது




பியாங்யாங், பெப்.13
வடகொரியா, அணு ஆயுத சோதனை நடத்தியுள்ளது என்று தென்கொரியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள தென்கொரியா, அணு ஆயுத சோதனை நடத்தியதற்கான, அறிகுறி அதாவது எதிர்பார்க் கப்பட்ட பகுதியில் நில அதிர்வுகள் பெருமளவு ஏற்பட்டுள்ளன. அங்கு அசாதாரணமான சூழ்நிலை நிலவி வருகின்றது. அங்குள்ள நிலைமைகளை அவதானிக்கும்போது வடகொரியா அணு ஆயுத சோதனையை மேற்கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த முடிகிறது- என்று தெரி வித்துள்ளது. அமெரிக்க நிலவியல் ஆய்வு நிறுவனமும் அந்தத் தகவலை உறுதி செய்துள்ளது.

ஆயினும் வடகொரியா இதுகுறித்து எந்தவித கருத்துகளையும் வெளியிட வில்லை.

அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வடகொரியாவின் அணு ஆயுத சோதனைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. ஐக்கிய நாடுகள் சபையும் அணு ஆயுத சோதனையைக் கைவிடுமாறு வலியுறுத்தியிருந்தது. எனினும் வடகொரியா அணு ஆயுத சோதனை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருந்தது. (ற)

## தீவுப் பிரச்சினை: பாதுகாப்பை அதிகரிக்கும் ஜப்பான்

டோக்கியோ, பெப்.13
ஜப்பான் - சீனா நாடுகளுக்கிடையே உள்ள தீவு பிரச்சினை விஸ்வரூபம் எடுத்து வரும் நிலையில் ஜப்பான் கடலோரப் பாதுகாப்பை பலப்படுத்தும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளது.

அந்தவகையில் பிலிப்பைன்ஸுக்கு ரோந்துப் படகுகளை வழங்க ஜப்பான் முடிவு செய்துள்ளது. அதற்காக விரைவில் ஜப்பானிய அரசு தாக்கல் செய்ய உள்ள வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதல் நிதி ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சுமார் 11 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பீட்டில் ரோந்துப் படகுகளை பிலிப்பைன்ஸுக்கு வழங்க ஜப்பான் திட்டமிட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற)

# சிரியாவின் மிகப்பெரிய அணைக்கட்டை தம்வசப்படுத்தினர் புரட்சிப் படையினர்

டமாஸ்கஸ், பெப்.13
சிரியாவின் மிகப் பெரிய அணைக்கட்டை புரட்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

ரக்கா மாகாணத்தில், யூப்ரடீஸ் நதியின் மீது கட்டப்பட்டுள்ள மிகப் பெரிய அணைக்கட்டையே புரட்சியாளர்கள் தங்கள் வசப் படுத்தியுள்ளனர்.

4.5 கிலோமீற்றர் நீளமும், 512 மீற்றர் அகலமும் கொண்ட அந்த அணைக் கட்டுப் பகுதியில் 880 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. அணையின் பிரதான கட்டுப்பாட்டு அறையை புரட்சியாளர்கள் நேற்றுமுன்தினம் கைப் பற்றியுள்ளனர் என்று கூறப் படுகிறது.

அதேவேளை, அணைக்கட்டு புரட்சியாளர்கள் வசமாகியுள்ளதால் அந்தப் பகுதியில் சிரிய இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொள்ளலாம் என்று அஞ்சப்படுகிறது. அணைக்கட்டு மீது தாக்குதல் நடத்தப்பட்டால் ஏராளமான கிராமங்கள் முற்றாக நீரில் முழ்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு எதிராக 22 மாதங்களாகப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. அதில் 60 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர். ஏழு லட்சம் பேர் அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# ஜேர்மனியை சைவ நாடாக மாற்ற விரும்பிய ஹிட்லர்



பெர்லின், பெப்.13
இரண்டாம் உலகப் போரில் வெற்றிபெற்றால் ஜேர்மனியை சைவ நாடாக மாற்ற ஹிட்லர் விரும்பியிருந்தார் என்று தற்போது தகவல் வெளியாகியுள்ளது. ஹிட்லரின் உணவை பரிசோதித்து வழங்கும் குழுவில் பணி புரிந்த மாகோட் வோயெல்க் என்ற 95 வயதுப் பெண்ணே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் சைவ உணவு பழக்கம் கொண்டவர். அவருடைய உணவில் விஷம் கலக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய, அந்த உணவை முதலில் சுவை பார்க்கத் தனியாக ஆள்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அந்தக் குழுவில் அப்போது நானும் பணியாற்றினேன். ஹிட்லர் எப்போதும் சைவ உணவுகளையே விரும்பி உண்பார்.

ஹிட்லருக்காகத் தயாரிக்கப்படும் உணவு வகைகள், தினமும் எங்கள் குழுவால் சுவை பார்க்கப்பட்டு உணவில் விஷம் கலக்கப் படவில்லை என்று தெரிய வந்தபின் அவருக்கு பரிமாறப்படும். சோறு மற்றும் பச்சை காய்கறிகளுடன் சாப்பிடுவதையே ஹிட்லர் பெரிதும் விரும்பினார். அசைவ உணவுகள் எதையும் ஹிட்லர் சாப்பிட்டதாக எனக்கு நினைவில்லை. இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்றால், ஜேர்மனியை சைவ நாடாக மாற்றப் போவதாக அடிக்கடி ஹிட்லர் எங்களிடம் கூறுவார்- என்றார். (ற)

## வீரிய மாத்திரைக்கு தலிபான்கள் தடை

இஸ்லாமாபாத், பெப்.13
பாகிஸ்தானில் வீரிய மாத்திரைகள் மற்றும் ஆபாசப் படங்கள் விற்பனைக்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.


இதுகுறித்து தலிபான்கள் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆபாச படங்கள் மற்றும் வீரிய மருந்துகள் போன்றவற்றை விற்பனை செய்வது இஸ்லாமிய சட்டத்துக்கு விரோதமானவை. அவ்வாறான பொருள்களை விற்பனை செய்வதை வியாபாரிகள் நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் மோசமான விளைவுகளை ச்சந்திக்க வேண்டியிருக்கும்- என்றுள்ளது.

கடந்த வாரம் இறுவட்டுகள் விற்பனை நிலையம் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 10 பேர் உயிரிழந்துடன் 26 பேர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

### அணுகுண்டை சுமந்து செல்லும்

# 'ஹத்ப் - 9' ஏவுகணை பாக். சோதனை வெற்றி



இஸ்லாமாபாத், பெப்.13
அணுகுண்டை சுமந்து செல்லும் திறன் பெற்ற ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக நேற்றுமுன் தினம் சோதனை செய்துள்ளது.

பெயர் குறிப்பிடப்படாத தளத்தில் இருந்து 'ஹத்ப்-9' எனும் அந்த ஏவுகணை பரிசோதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சோதனை வெற்றிகரமாக முடிந்தது என்றும் கூறப்பட்டுள்ளது.

'ஹத்ப்-9' அல்லது 'நசர்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ஏவுகணை, அணுகுண்டை சுமந்து சென்று 60 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் திறன்கொண்டதாகும்.(ற)

# காஷ்மீரில் பொதுமக்கள் மீது இந்திய அரசு அடக்குமுறை

## குற்றஞ்சாட்டுகிறது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், பெப்.13
காஷ்மீர் மக்கள் மீது இந்திய அரசு அடக்கு முறையை கட்டவிழ்த்து விடுவது கவலையளிக்கிறது என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மௌஸம் காசிம் தெரிவித்ததாவது:-

காஷ்மீர் மக்கள் மீது இந்திய அரசு அடக்குமுறையைப் பிரயோகித்து வருகிறது. இது கவலையளிக்கும் விடயமாகும். அப்சல் குருவின் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் ஊடகங்களும், மனித உரிமை அமைப்புகளும் விவாதம் நடத்தி வருகின்றன. அது விடயத்தில் விரிவாக பேச நாம் விரும்பவில்லை. எனினும், ஜம்மு காஷ்மீர் மக்களின் ஒற்றுமைக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதில் பாகிஸ்தான் உறுதியாக உள்ளது.

காஷ்மீரில் ஊரடங்கு உத்தரவு, செய்தி வெளியிடத் தடை, ஹுரியத் தலைவர்கள் கைது என்று காஷ்மீர் மக்கள் மீது அடக்குமுறையைக் கையாள்வது கவலையளிக்கிறது. இதுபோன்ற நடவடிக்கைகளைக் கைவிட்டு கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும்- என்றார்.

-2001ஆம் ஆண்டு நிகழ்ந்த நாடாளுமன்றத் தாக்குதலில் தொடர்புடையவர் என்று விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்த அப்சல் குரு, கடந்த சனிக்கிழமை திகார் சிறையில் தூக்கிலிடப்பட்டார். அவரது உடல் சிறை வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. அதையடுத்து காஷ்மீரில் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ( வரையறுக்கப்பட்டது )

## கிளைக்குழுத் தெரிவிற்கான அறிவித்தல் – 16.02.2013 – சனிக்கிழமை

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்" இதற்கமைய யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய குமாரசிங்கம் அருந்தவநாதன் ஆகிய நான் 2009.04.08 ஆம் திகதிய 1596/17 இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி பிரிவு 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் 2013.02.16 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பின்வரும் அட்டவணைப்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்

**கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்**

| தொ இல | கிளைகளின் பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபை கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | ஊரதீவு | 01 | திரு. க. கமலநாதன் | புங்குடுதீவு கமலாம்பிகை மகா வித்தியாலயம் |
| 2 | மடத்துவெளி | 02 | திரு. பா. வாகீசன் | புங்குடுதீவு கமலாம்பிகை மகா வித்தியாலயம் |
| 3 | மாவுதிடல் | 03 | திரு. இ. தயாகரன் | புங்குடுதீவு கணேசா மகா வித்தியாலயம் |
| 4 | தல்லைப்பற்று | 05 | திரு. நா. குமணதாசன் | புங்குடுதீவு கணேசா மகா வித்தியாலயம் |
| 5 | தல்லைப்பற்று தெற்கு | 06 | திரு. வை. சரவணன் | புங்குடுதீவு கணேசா மகா வித்தியாலயம் |
| 6 | மண்காடு | 07 | திரு. வி. ஜெயந்தன் | புங்குடுதீவு மகா வித்தியாலயம் |
| 7 | புங்குடுதீவு மத்தி | 09 | திரு. நா. ஜெயவதனன் | புங்குடுதீவு மகா வித்தியாலயம் |
| 8 | பெருங்காடு | 10 | திரு. வே. பிரதீஸ்குமரன் | புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் |
| 9 | பெருங்காடு தெற்கு | 12 | திரு. க. நிமலன் | புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் |
| 10 | குறி. கட்டுவான் | 13 | திரு. அ. விமல்ராஜ் | சங்கத் தலைமை அலுவலகம் |
| 11 | கணேசா | 14 | திரு. க. சுரேஸ்பாபா | புங்குடுதீவு சிவலப்பிட்டி சனசமூக நிலையம் |
| 12 | இறுப்பிட்டி | 15 | திரு. த. கண்ணதாசன் | புங்குடுதீவு சித்திவிநாயகர் மகா வித்தியாலயம் |
| 13 | அரியநாயகம்புலம் | 16 | திரு. க. திசாகரன் | புங்குடுதீவு சித்திவிநாயகர் மகா வித்தியாலயம் |
| 14 | நயினாதீவு தெற்கு | 19 | திரு. கு. நிசாந்தன் | நயினாதீவு கணேசா மகா வித்தியாலயம் |
| 15 | நயினாதீவு வடக்கு | 20 | திரு. ம. கபிலன் | நயினாதீவு மகா வித்தியாலயம் |

இந்த அறிவித்தல் தொடர்பாக ஒவ்வொரு கிளையின் பொதுச் சபைக்கு வந்து வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் அநேகமான அங்கத்தவர்கள் இடப்பெயர்வு காரணமாக வேறு இடங்களில் வசிப்பதால் இந்த அறிவித்தலை தமக்கு வழங்கப்பட்ட தனித்தனி அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்குச் சமூகமளித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**திகதி: 13.02.2013** (C/6374)(2.6.7)

V. K. அருந்தவநாதன்.
கூ. அ. உ. ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## வேலை வாய்ப்பு

**வாகன ஓட்டுநர்**

சிறந்த அனுபவம் உள்ள வாகன ஓட்டுநர் தேவை. என்.ஜி.ஓ அல்லது தனியார் நிறுவனங்களில் முன் அநுபவம் விரும்பத்தக்கது. ப்ராடோ மற்றும் புதிய ரக வான் வாகனங்களை செலுத்தக்கூடியதாயிருத்தல் அவசியம் ஆங்கிலம் பேசும் ஆற்றல் விரும்பத்தக்கது விருப்பமுள்ளோர் 077 - 376 1359 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும். தகுதியான விண்ணப்பதாரிகள் பெப்ரவரி 17ம் திகதி நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

**நிறுவனம் ஒன்றின் விருந்தினர் இல்லக் காப்பளர்/ பராமரிப்பாளர்**

நிறுவனம் ஒன்றின் விருந்தினர் விடுதிபொன்றின் பராமரிப்பாளர் பதவிக்கு என்.ஜி.ஓ களில் அல்லது ஏனைய நிறுவனங்களின் விடுதிகளில் பணியாற்றிய பராமரிப்பாளர் தேவை. தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிகளை விளங்கிக்கொள்ளும் ஆற்றல் அவசியமானது. விருப்பமுள்ளோர் 077 - 376 1359 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும். தகுதியான விண்ணப்பதாரிகள் பெப்ரவரி 17ம் திகதி நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

## Vacancies

**Technical Officers and Draftspersons**

We seek experienced Technical Officers with National Diploma or equivalent and Draftspersons with National Certification for a major water supply and sewerage project consultancy in Jaffna. Both position needs experience of at least three years in water supply and sewerage related works. Interested candidates may send detailed CVs with expected monthly fee to **hr@gtc.** lk.Fee and experience will determine the selection.

(29482)(5-6-7)

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

உபயோகித்த திருத்த மீள்சுழற்சி

உங்கள் வீடுகளில் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றிலிருந்து மீண்டும் புதிய பொருள்கள் செய்து தரப்படும்.
உடைந்த கழிவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படும்.
இல. 06, டயானா லேன், ...
Tel: 021 222 8680, 0775925088, 0750407430 (8/6183)(2.6)

## விற்பனைக்கு

எமது சொந்தப் பாவனையிலுள்ள MD 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 042 2624
(28474)(5-6-7)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

நல்லூர் மூத்த விநாயகர் வீதி 133ஆம் இலக்கத்தில் (பழைய வளவு) 05 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:077 832 3526,021 300 7562
(29294)(5-6-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் அருணாசலம் வெற்றிவேலாயுதம் (அண்ணாவி)

மலர்வு 06.11.1946 உதிர்வு 14.01.2013

கடந்த 14.01.2013 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிரியைகளும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (13.02.2013) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மூன்று கோயிலடி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். - **குடும்பத்தினர்.** (C/6365)(2.6.7)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வீதியில் இருந்து 100m இற்குள் (பாடசாலை வீதியில்) 5பரப்பும் 1குளியும் உடைய காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. சகல வசதிகளுடனும்
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 257 5500
(29472)(5-6-7)

## TV கள் மலிவு விற்பனை

மிக மிக மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"-13000/=, 29"-16000/= ,பைனியர் அம்பிளிபயர், Box வகைகள் ,DVD என்பன
தொடர்பு:0770440570 (அப்பளம்)
சோனி ரேடர் சென்ரர் (கொமசல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம்.
(28388) (2.6.7)

## வேலையாள்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஹொட்டல் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
(தங்குமிட வசதி உண்டு)
தொடர்பு: 077 979 0899
கே.கே.எஸ். வீதி,தாவடி.
(29467)(5-6-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வலயக்கல்வி அலுவலகத்தில் சித்திர பாடசேவைக்கால ஆசிரிய ஆலோசகராக் கடமையாற்றிய

**தருமலிங்கம் மயூரன்**

(S.L.E.A.S. III, B.FA, Dip.in.Edu.)

அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றமையை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற்று கல்விப் பணியாற்ற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

Best Wishes

ஆசிரிய ஆலோசகர்நண்பர்கள்
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.
(ஜ 6366) (45.6.7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சின்னத்துரை பாக்கியம்**

திதி: சதுர்த்தி - 13.02.2013 புதன்கிழமை

மலர்வு 12.08.1937

உதிர்வு 26.02.2012

வாழ்க்கை என்னும் பாதையிலே
நீ காட்டிய பாசமெல்லாம்
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டானதோ
உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்

ஆசாரி ஒழுங்கை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(29369) (45.6.7)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை கிழக்கு, அளவெட்டி, குருக்கள் கிணற்றடி பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக 17 பரப்பு வீடு கட்டுவதற்குரிய காணி விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:077 379 5291,077 958 2268
(29391)(5-6-7)

## அறைகள் வாடகைக்கு

பல்கலைக்கழகத்துக்கு அருகில் அறைகள் வாடகைக்கு உண்டு.
(பெண்களுக்கு மட்டும்)
தொடர்பு:077 051 7355,075 555 0107
(29471)(5-6-7)

## மென்பந்து கிரிக்கெட்

கொடிகாமம் மின்ஒளி நடத்தும் 7 பேர் 6 பந்து பரிமாற்றம் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி.
இடம்: [illegible]
காலம்: 17.02.2013 ஞாயிற்றுக்கிழமை
தொடர்பு: 077 711 1790
(ஒ/6375)(5-6-7)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11.07.1950

மறைவு 10.02.2008

திதி:- சதுர்த்தி

**அரியரத்தினம் பிரபாகரன்**

எத்தனை உறவுகள் எம்முடன் இருந்தாலும்
எம் தெய்வமே உங்களுக்கு இணையாகுமா?
வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி வகுத்த எம் அன்புத் தெய்வமே
என்றும் உங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்காது

விமானநிலைய வீதி, பத்தமேனி,
அச்சுவேலி

– **குடும்பத்தினர்.** (29480)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ சிலமணி

# எட்டிப் பார்க்க 3 கோடி!

கடந்த ஆறு மாத காலமாக திறக்கப்படாதிருந்த யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஒருவாறாக விடிவு கிடைக்கின்றது. அத்தியாவசிய தேவைகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள வைத்தியசாலையைக் கூட, ஜனாதிபதி திறந்து வைக்க வேண்டும் என்பதற்காக மூடப்பட்டிருந்ததும் ஆசியாவின் அதிசயங்களில் ஒன்றுதான்.

இந்த வைத்தியசாலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைக்க வராமலிருந்திருந்தால், கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து வைத்தியசாலை இயங்கத் தொடங்கியிருக்கும். அத்துடன் நாட்டு மக்களின் முதுகில் மேலும் வரிச்சுமை அதிகரித்திருக்காது.

ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்வதால் சில வேலைகள் நடக்கின்றன. அவர் பயணிக்கும் வீதிகள் இரவோடு இரவாக காபெற்றாகின்றன. வாய்க்கால்கள் புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றன. அத்துடன் அதிகாரிகள் இரவு பகல் பாராமல் வேலை செய்கின்றனர். இவ்வளவும் ஆட்சியாளரைத் திருப்திப்படுத்துவதற்கே. மக்கள் நலனில் அக்கறையிருந்தால் இவற்றை அவர்கள் எப்போதோ செய்திருப்பார்கள்.

ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வருவதால் இந்த வேலைகள் நடந்தாலும், அவர் ஒரு முறை இங்கு வந்து செல்வதற்கு ஒரு கோடி செலவாகிறது. மஹிந்த வால் விழுங்கப்படும் பணம், மக்கள் வரிகளிலிருந்தே கறக்கப்படுகின்றது.

வட மாகாணத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதாக உலகுக் காட்டப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் வரவு செலவுத்திட்டத்தில் வடக்கில் தமிழர்கள் வாழ்கின்ற பிரதேசங்களுக்கே அதிகளவான நிதியை மத்திய அரசு ஒதுக்குவதாகச் சொல்கின்றார்.

அவர்கள் அந்த நிதியை வட மாகாண சபைக்கு ஒதுக்கி விட்டுப் பின்னர், வட மாகாண சபையின் நிதியில் மத்திய அமைச்சின் ஜனாதிபதியே இங்கு வந்து ஒதுக்கிய பணத்தில் செலவு செய்து செல்கின்றார்.

**மத்திய அரசின் யுக்தி**

மொத்தத்தில் தெற்கிலிருந்து மத்திய அரசிலிருந்து ஒதுக்கப்படும் வட மாகாண சபைக்கான நிதி மத்திய அரசாலேயே செலவு செய்து முடிக்கப்படுகின்றது. இதனால் வட மாகாண மக்களுக்கு ஒதுக்கப்படும் நிதிகள் கிடைப்பதில்லை. இந்த யுக்தியையே மத்திய அரசாக பதவி வகிக்கின்ற மஹிந்த அரசு செய்து வருகின்றது.

கடந்த வருடம் பெப்ரவரி 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார் ஜனாதிபதி. இதற்காக அவர் பெயரில் விழுங்கப்பட்ட தொகை 140 இலட்சங்கள். இந்தப் பணமே எங்களின் வரி அதிகரிப்பாக முதுகில் சுமையாக விழுந்திருக்கின்றது. இது ஜனாதிபதியின் தனிப்பட்ட செலவு மாத்திரமே, அவருக்கு குடைபிடித்து கூட வந்த அமைச்சர்களின் செலவுகளையும் சேர்த்துக் கொண்டால் 180 இலட்சத்தை தாண்டும் என்கின்றனர் அதிகாரிகள்.

சாவகச்சேரி வைத்தியசாலையைத் திறப்பதற்கான (திறந்து வைத்த கட்டடத்தை திறந்தது அது வேறு கதை) ஒரு மணி நேர நிகழ்வுக்காக யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் செலவு செய்த தொகை 80 லட்சம்.

வட மாகாண சபையில் எல்லோரையும் ஆட்டிப்படைத்து, தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ள இராணுவ அதிகாரியின் கட்டளைப்படியே கடந்த ஆண்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் எந்தவொரு வேலையும் கேள்விகோரல் இன்றியே மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலான வேலைகள் முடிக்கப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டு அனுப்பப்பட கேள்வி எதுவுமின்றி பணம் இறைக்கப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் மஹிந்த உரையாற்றுவதற்காக இடம் தயாரிக்கப்பட்டது. அதற்காக வைத்தியசாலையினுள் இருந்த பல பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டே அரங்கு தயார்படுத்தப்பட்டது. மேலும் மேடு பள்ளமாக இருந்த குறித்த அரங்கை புனரமைக்க 15 இலட்சம் வரையில் செலவு செய்யப்பட்டது.

அத்துடன் வைத்தியசாலையில் வர்ணம் பூசுவதற்கும், அழகுபடுத்துவதற்கும் 14 இலட்சத்து 50 ஆயிரம் வரையில் செலவு செய்யப்பட்டது. வர்ணம்பூசும் வேலை, அலங்கார வேலைகள், மின் வேலைகள் அனைத்தும் இராணுவத்தாலேயே மேற்கொள்ளப்பட்டன. இராணுவத்தினர் கேட்கக் கேட்க பொருள்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுக் கொண்டேயிருந்தன. அதில் எந்தவித கணக்கு வழக்குகளும் பார்க்கப்படவில்லை.



**செலவுகளால் பின்னர் திண்டாட்டம்**

மேலும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் ஒரு வாரமாக ஹோட்டலில் தங்கியிருந்த செலவு, சாப்பாட்டுச் செலவு என்று 8 இலட்சம் ரூபா பணம் செலவழிக்கப்பட்டுள்ளது.

இவற்றை விட மேடைக்கு மாத்திரம் 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது என்றால் பாருங்களேன். அத்துடன் 40 X 40 அளவில் ஜனாதிபதியின் படம் பொறிக்கப்பட்ட பனர் கொழும்பிலிருந்து செய்து கொண்டு வரப்பட்டது. மேடையின் பின்பாக வைத்துக் கட்டும் போது ஜனாதிபதியின் தலை வெட்டப்படுவதன் காரணமாக உடனடியாக இரவோடு இரவாக 10 X 10 அளவில் புதிய பனர் செய்யப்பட்டது. மேலும் வைத்தியசாலையினுள் பனர்கள் மட்டும் அமைப்பதற்காக 4 இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டது.

இவை அனைத்தும் பிராந்திய சுகாதார சேவை நிலையத்தினால் 2012 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலேயே செய்து முடிக்கப்பட்டன. இவ்வாறு சுகாதார சேவை நிலையத்தினால் செலவு செய்யப்பட்டதால், கடந்த ஆண்டு மாகாண அமைச்சின் கீழான வைத்தியசாலைகளுக்கான சிறிய புனரமைப்பு வேலைகளுக்கும் நிதியில்லாமல் திண்டாட்டம் நிலவியுள்ளது.

மேலும் மாவட்டச் செயலகத்தில் கடந்த ஆண்டு நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்காக 800 உணவுப் பார்சல்கள் 800 ரூபா வீதம் பெறப்பட்டுள்ளன. இரண்டு உணவகங்களிலிருந்து 400 பார்சல் வீதம் அவை பெறப்பட்டுள்ளன. இதனை அமைச்சர் ஒருவரது சகோதரரே நேரடியாகச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஒருவருக்கு 800 ரூபா செலவில் உணவு விநியோகம் செய்யப்பட்ட சந்தர்ப்பம் இதுவாகத்தான் இருக்கும்.

மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை திறந்து வைப்பதற்கான நிகழ்வு ஏற்பாட்டுக்கு மாத்திரம் 50 இலட்சம் வரையில் கல்வித் திணைக்களத்தின் நிதி செலவு செய்யப்பட்டது.

வழமையாக ஒரு நிகழ்வினை ஒழுங்கமைத்து அறிவிப்பு மேற்கொள்பவருக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு 800 ரூபாவே வழங்கப்பட வேண்டும் என்று அரச சுற்றறிக்கை கட்டளையிட்டுள்ளது. ஆயினும் ஜனாதிபதியின் வருகைகளின் போது அறிவிப்பாளருக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருவதற்கான விமானச் செலவு, பாதுகாப்புப் பிரிவினர் பயணிக்கும் உலங்குவானூர்திச் செலவு என்று அடுக்கிக் கொண்டே போனால் கிட்டத்தட்ட ஒருமுறை அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்து போக 3கோடி ரூபாவுக்கு மேல் விரயமாகிறது.

இவ்வாறு கடந்த வருடம் ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு ஒரு நாள் வந்து சென்றதற்கு ஒரு கோடி ரூபாவுக்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வளவு செலவுகளையும் செய்து ஓர் அரச தலைவர் வரத்தான் வேண்டுமா ? மக்கள் ஏற்கனவே வாழ்க்கைச் சுமையினால் துவண்டு கொண்டிருக்கையில் இவ்வாறான ஆடம்பரக் கொண்டாட்டங்களுடன் திறப்பு விழாக்கள் தேவையா ? அதுவும் ஜனாதிபதி திறக்க வேண்டும் என்பதற்காக அவசர சேவையான வைத்திய சாலையை 5 மாதங்கள் மூடி வைத்திருந்தது நியாயமானதா?

திருகோணமலையில் புல்மோட்டையில் இல்மனைட் அகழ்வதற்கு ஜப்பானிய அரசுக்கு இடமளித்ததற்கு நன்றிக் கடனாகவே யாழ். போதனா வைத்தியசாலை அமைத்துக் கொடுக்கப்பட்டதாகவும் அரசல்புரசலாகப் பேசப்படுகிறது.

ஜப்பான் நிதியில் மஹிந்த ராஜபக்ஷ வைத்தியசாலையை திறந்து வைக்கிறார். ஆனால் யாழ்ப்பாணத்தின் சுகாதாரத்துறையோ திண்டாட்டத்தில் இருக்கின்றது.

**கிராம வைத்தியசாலைகள் வசதிகள் அற்ற நிலையில் இருக்கும்போது இத்தனை செலவுகள்**

யாழ்ப்பாணத்தின் கிராமிய வைத்தியசாலைகளில் இன்னமும் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவிக் கொண்டேயிருக்கின்றது. சில கிராமிய வைத்தியசாலைகளுக்கு வைத்தியர்கள் நியமிக்கப்படவே இல்லை. அத்துடன் தாதிய உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடமும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன.

இதனைவிட பிராந்திய சுகாதார வைத்தியர் (எம்.ஓ.எச்) மற்றும் சிற்றூழியர்கள் என்று சகல இடங்களிலும் அவற்றுக்கான வெற்றிடங்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இவை இன்னமும் நிரப்பப்படாததானால் மக்கள் தங்களது சேவைகளை உரிய முறையில் பெறமுடியாமல் தவிக்கின்றனர்.

மேலும் சில இடங்களில் அரசியல்வாதிகள் தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு நியமனங்கள் பெற்றுக் கொடுக்கின்றனர். இதனால் பல இடங்களில் தகுதியற்றவர்களும் மருத்துவ சுகாதாரத் துறையினுள் உள்வாங்கப்படுகின்றனர். இவர்கள் இவ்வாறு அரசியல் பரிந்துரைகளினால் உள்வாங்கப்படுவதால் அவர்களது தகுதி பற்றி யாரும் கவனிப்பதில்லை. இதனால் மக்களுக்கு தவறான வைத்திய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

மேலும் யாழ். நகரிலேயே எத்தனையோ மருந்தகங்கள் அனுமதியில்லாமல் செயற்பட்டு வருகின்றன. அத்துடன் தனியார் வைத்தியசாலைகள் பல சேவைக்குரிய தகுதிகளை கொண்டிருக்காமலும் இயங்குகின்றன. ஆனால் இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

இதனைப் போலவே யாழ். போதனா வைத்தியசாலையினுள்ளும் சுகாதாரச் சீர்கேடான நிலைமைகளே காணப்படுகின்றன. அங்குள்ள பழைய கட்டடங்களுக்குப் பக்கத்தில் காணப்படுகின்ற வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாமல் இருக்கின்றன.

வைத்தியசாலைக்கு தேவையான மருந்துகள், அரசினால் உரிய காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவதில்லை. அத்துடன் கேட்கப்பட்ட அளவை விடக் குறைந்தளவே அனுப்பப்படுகின்றன. மேலும் பல அத்தியாவசிய மருந்துகள், விலை கூடிய மருந்துகளை எல்லாம் நோயாளர்கள் தனியார் மருந்தகங்களிலேயே வாங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தின் சுகாதாரத்துறையில் சீர்செய்யப்பட வேண்டிய நிறைய விடயங்கள் உள்ள போதும், அவை எதுவுமே நிவர்த்தி செய்யப்படவில்லை. மறுபுறம் புதிய வைத்தியசாலையை மாத்திரம் திறந்து வைத்தால் போதாது. அதனைச் சுற்றி அலங்கார வர்ணம் பூச யாழ்ப்பாணத்தின் சுகாதாரத் துறையின் உண்மை நிலையை ஒருபோதும் சொல்லமாட்டார்கள்.

கடந்த ஆண்டு மஹிந்த யாழ்ப்பாணம் வரும் போது சாவகச்சேரி வைத்தியசாலையில் பனடோல் இல்லாமல் மக்கள் திருப்பி அனுப்பப்பட்டதை ஊடகங்கள் கட்டிக்காட்டியிருந்தன. அதனை ஜனாதிபதி நேரடியாக சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் கேட்ட போது, அப்படியொரு பிரச்சினையும் இல்லை என்று மூடி மறைக்கப்பட்டது.

இதற்கு வக்காலத்து வாங்கும் வகையில் ஊடகங்களைப் போட்டுக் கொடுக்கும் ஆட்சியாளரின் பக்கம் நிற்கும் அமைச்சரும் உள்ளதால், அவர்களுக்குச் சார்பாக இருப்பதால் சுகாதாரத்துறையின் சீர்கேடுகள் சீர்செய்யப்படப் போவதில்லை.

யாழ். மாவட்டம் வாழ் பிரஜைகளின் வரிப்பணம் வேண்டாத செலவுகளுக்கு விரயமாவதைத் தவிர்த்து, யாழ்ப்பாணத்தின் சுகாதாரத்துறை, மக்கள் நலனுக்குப் பயன்பட வழிகாட்டிச் செல்வாரா ஜனாதிபதி? யாழ்ப்பாணத்தின் சுகாதாரத்துறையை சீரமைத்துச் செல்வாரா ஜனாதிபதி ?

★

**குடாநாட்டு மக்களின் வரிப்பணம் அவர்தம் சுகாதார நலனுக்குப் பயன்பட வழிகாட்டிச் செல்வாரா ஜனாதிபதி ?**

### நல்(?)வரவு

இடிந்த மனைகள் எழுந்ததில்லை
இழந்த பொருள்கள் திரும்பவில்லை
வழிந்த கண்ணீர் உலர்ந்ததில்லை
குனிந்த தலைகள் நிமிர்ந்ததில்லை
பிரிந்த உறவு பொருந்தவில்லை
அறுந்த இழைகள் [illegible]
விழுந்த மனிதர் எழுந்ததில்லை
நினைந்தததுவும் நடந்ததில்லை

யாதுகண்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை முன்னெடுக்கும் போராட்டத்தின் ஆரம்பம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமானது. கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, நவ சம சமாஜக் கட்சி உட்பட 11 கட்சிகள் கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

# மனித உரிமைகளை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்கப்படும்

## ரணில் சொல்கிறார்



கொழும்பு,பெப்.13

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பால் மனித உரிமை பாதுகாப்புத் தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

மனித உரிமைகளை மேம்படுத்த எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்கும்.

கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதனால் இலவசக் கல்வி மற்றும் சுகாதார சேவைகளுக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

அரசு வெளிநாடுகளில் கடன் பெற்றுக்கொண்டு எதிர்காலத் தலைமுறையினரை கடனாளியாக்கியுள்ளது.

தற்போது அடைந்துள்ள நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு சகல தரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியம்.-என்றார். (ச)

# கொழும்பு மெனிங் சந்தை பேலியகொடைக்கு மாற்றம்

## பஸில் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.13

கொழும்பு, புறக்கோட்டையில் அமைந்துள்ள மெனிங் சந்தை, பேலியகொடைக்கு இடமாற்றப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பேலியகொடையில் அமைந்துள்ள மீன் சந்தைக்கு அருகில் 25 ஏக்கர் காணியில் மெனிங் சந்தை நிர்மாணிக்கப்படும்.

சகல வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்படவுள்ள இந்தச் சந்தைக் கட்டடத் தொகுதியில், 120 சதுர அடிகளைக் கொண்ட 400 மொத்த வியாபார கடைகளும், 662 சில்லறை வியாபாரக் கடைகளும் அமைக்கப்படும்.

இந்தக் சந்தைக் கட்டடத் தொகுதியில் மரக்கறி மற்றும் பழவகைகளை ஏற்றுமதி செய்வதற்காக தயார் படுத்துவதற்கான இடம், ஊழியர்களுக்கான ஓய்வு விடுதி, சிற்றுண்டிச்சாலைகள் , 135 லொறிகளை நிறுத்துவதற்கான இரண்டு தரிப்பிடங்கள், 200 மோட்டார் வாகனங்கள் நிறுத்துவதற்கான தரிப்பிடம் என்பனவும் உள்ளடக்கப்படும். அவற்றை அமைக்க அரசு 135 கோடி 700 லட்சம் ரூபாவை செலவிடும்.

இதேவேளை, புறக்கோட்டையில் தற்போதைய மெனிங் சந்தை அமைந்துள்ள இடத்தில் சகல வசதிகளையும் உள்ளடக்கிய பஸ் தரிப்பிடம் மற்றும் நடைபாதை வியாபாரிகளுக்கான கடைத் தொகுதி ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளன- என்றார்.

இந்தக் கூட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபை, கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தகம் தொடர்பான அமைச்சு, துறைமுக ,நெடுஞ்சாலைகள் அமைச்சு, கொழும்பு மாநகர சபை ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச)

# சர்வதேசத்தின் அழுத்தத்துக்கு அரசு அடிபணிந்து செயற்படாது

## இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் அரசு பேணிவரும் நட்புறவைக் குலைக்க சிலர் முயற்சி என்கிறார் கெஹலிய



**இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அணிசேரா தன்மையைக் கொண்டது. அதனால் இந்தி யாவைப் போன்றே சீனாவுட னும் சிறந்த உறவுகள் பேணப்படும்.**

கொழும்பு,பெப்.13

சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கு அரசு அடிபணிந்து செயற்படத் தயாரில்லை என்று ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மாநில அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்த வேண்டிய அவசியம் இலங்கைக்கு இல்லை.

இந்தியாவுடன், இலங்கை அரசு இராஜதந்திர ரீதியிலான உறவுகளைப் பேணி வருகின்றது.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையானது அணிசேரா தன்மையைக் கொண்டது. அதனால் இந்தியாவைப் போன்றே சீனாவுடனும் சிறந்த உறவுகள் பேணப்படும். பயங்கரவாத நடவடிக்கைகளுக்குசிலர் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். இந்தியா, சீனா போன்ற நாடுகளுடன் அரசு பேணி வரும் நட்புறவை சீர்குலைக்கசிலர் முயற்சிக்கின்றனர்.

மக்களின் ஆணையை பெற்றுக்கொள்ள முடியாத சில அரசியல்வாதிகள் தங்களது குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். -என்றார். (ச)

# போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை தவறாகப் பயன்படுத்தினால் நடவடிக்கை

## அனுமதிப் பத்திரமும் ரத்து என்கிறது தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

கொழும்பு,பெப்.13

போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை தவறாகப் பயன்படுத்தும் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சட்டவிரோதமாக சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் பஸ் அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்படும் என்று அதிகாரசபைத் தலைவர் ரொசான் குணவர்தன கூறினார்.

தூர சேவையில் ஈடுபடும் பஸ்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலையில் தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் புதிய நடைமுறை ஒன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கொழும்பு-யாழ்ப்பாணம் பஸ் சேவை ஆரம்பிக்கப்படும் வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை பஸ் தரிப்பிடங்களில் முறையற்ற விதத்தில் ஆசனம் ஒதுக்கப்படுவது தொடர்பிலும் ஆராயப்பட்டது. (ச)

# இனவாதம் குறித்த முறைப்பாடுகளை விசாரணைசெய்ய புதிய பொலிஸ் பிரிவு

கொழும்பு,பெப்.13

இனங்களின் பெயரால் இடம்பெறும் துன்புறுத்தல் தொடர்பாக விசாரிப்பதற்கென பொலிஸ் தலைமையகத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் புதிய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவில் ஏதாவது ஒரு மதத்தை விமர்சிப்பது, மதத்தலைவர்களை அசௌகரியத்துக்கு உட்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்து கொள்ளமுடியும்.

முறைப்பாடுகள் குறித்து 011 3182904 ,011 3188753 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலமும் தெரிவிக்க முடியும் என்று பொலிஸ் தலைமையகத்தின் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். இந்தத் தொலைபேசி இலக்கங்கள் 24 மணி நேரமும் செயற்படும் என்று அவர் மேலும் கூறினார்.(ச)

# சர்வதேச கடல் எல்லைகளை மீறும் இலங்கை மீனவர்களுக்கு அபராதம்

## சட்டத்திலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்கிறார் கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர்

கொழும்பு,பெப்.13

சர்வதேச கடல் எல்லைகளை மீறும் இலங்கை மீனவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். அதற்கமைய கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்திச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது

இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நிமல் ஹெட்டிஆராச்சி தெரிவித்தார்.

உத்தேச திருத்தத்துக்கு அமைய சர்வதேச கடல் எல்லைகளை மீறும் இலங்கை மீனவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா வரை அபராதம் விதிக்க வகை செய்யப்படும் என்று அவர் கூறினார்.

இலங்கை மீனவர்களுக்குச் சொந்தமான சில மீன்பிடிப் படகுகள் நாட்டுக்குச் சொந்தமான கடல் எல்லைகளை மீறி வேறு நாட்டுக்குச் சொந்தமான கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கின்றமை தெரியவந்துள்ளது. அதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் மீனவர்கள், அழிவடையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள அரியவகை மீனினங்களைப் பிடிக்கின்றமை தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளது என்று அவர் கூறினார்.


புதிதாக மேற்கொள்ளப்படவுள்ள சட்ட திருத்தத்தின் போது இந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான சரத்துக்களும் உள்ளடக்கப்படவுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தத் திருத்த சட்ட வரைவுக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று கடற்றொழில் அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் காற்றால் முறிந்தன மரங்கள்



ஏறாவூர்,பெப்.13

ஏறாவூரில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை மாலை வீசிய கடும் காற்றால் பல சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஏறாவூர் ரயில் நிலையத் தைச் சூழ இருந்த மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. ரயில் நிலைய மேடையின் கூரை காற்றினால் வீசப்பட் டுள் ளது.

மின்சாரம் துண்டிக்கப் பட்ட நிலையில் ஏறாவூர் ரயில் நிலையம் இருளில் மூழ்கியுள்ளது. புன்னைக் குடா வீதியில் இருந்த இரண்டு அரிசி ஆலைகளின் கூரை களும் கழற்றி வீசப்பட்டுள்ளன. அதனால் அந்த அரிசி ஆலை களிலிருந்த அரிசி, நெல் என் பன மழை நீரில் நனைந்து நாசமாகின. (ச)

# அம்பாறையில் அடை மழை

# அறுவடையான நெல் வீதியோரங்களில் குவிப்பு

அம்பாறை,பெப்.13

அம்பாறை மாவட் டத்தில் நேற்றுமுன்தினம் முதல் பெய்த கடும் மழை யால், வயலில் அறுவடை செய்த நெல்லை வீடு கொண்டு செல்ல முடியாத விவசாயிகள், அவற்றை வீதியோரங்களில் குவித்து மூடிவிட்டுச் சென்றுள்ளனர்.

அதனால் அறுவடை செய்யப்பட்ட அதிகளவு நெல் மழையில் நனையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரி வித்தனர்.

வயல்களில் நீர் தேங்கி யுள்ளமையால் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் நடந்துவந்த அறுவடை நட வடிக்கைகள் நிறுத்தப்பட் டுள்ளன.

ஈரலிப்பான நெல்லை விவசாயிகளிடமிருந்து தனி யார் நெல் கொள்வனவாளர் கள் 1,300 ரூபாவிலும் குறைந்த விலைக்கே பெறு கின்றனர்.

அரசின் சார்பில் நெல் சந்தைப்படுத்தும் சபையினர்



ஈரப்பதன் அகற்றப்பட்ட நெல்லையே விவசாயிகளிட மிருந்து கோருவதால், மழை யில் நனைந்த நெல்லை நெல் சந்தைப்படுத்தும் சபையினருக்கு தமது நெல்லை விற்பனை செய்ய முடியா துள்ளது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

அரசு, நாடு முழுவதும் நெல் சந்தைப்படுத்தும் சபையினூடாக விவசாயி களிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதாகக் கூறிவருகின்ற போதிலும், அட்டாளைச்சேனை பிர தேசத்தில் நெல் கொள்வ னவு செய்யும் நடவடிக்கை கள் எவையும் இதுவரை இடம்பெறவில்லை.

அம்பாறை மாவட்டத் தில் அதிகளவு நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட பகுதி களில் அட்டாளைச்சேனை பிரதேசமும் ஒன்றாகும் என் பது குறிப்பிடத்தக்கது. (ச-30)

# பொல்ஹேன கடற்கரை பிரதேசம் சுற்றுலா வலயமாக அபிவிருத்தி

மாத்தறை,பெப்.13

மாத்தறை,பொல்ஹேன கடற்கரைப் பிரதேசத்தை சுற்றுலா வலயமாக அபிவி ருத்தி செய்ய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நட வடிக்கை எடுத்துள்ளது.

அதற்குத் தேவையான காணிகளை சுவீகரிப்ப தற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட் டுள்ளன. மீன்பிடிப் பட குகள் தரிப்பு இடத்தையும் அகற்றுவதற்கும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொல்ஹேனையிலுள்ள சுண்ணாம்புப் படிமங்களைப் பாதுகாக்கும் விதத்தில் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். உயிர் பாதுகாப்புப் பிரிவொன்றும் ஏற்படுத்தப்படும்.

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான சகல வசதி களும் இந்தச் சுற்றுலா வல யத்தில் மேற்கொள்ளப்பட வுள்ளன. இந்தத்திட்டம் நகர அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் மேற்கொள்ளப் படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)

# புதையல் தோண்டிய 8 பேர் மாட்டினர்

கண்டி,பெப்.13

கண்டி, தெல்தெனிய பிரதேசத்தில் புதையல் தோண் டிய குற்றச்சாட்டில் எட்டு பேரை தெல்தெனிய பொலி ஸார் நேற்றுமுன்தினம் திங் கட்கிழமை கைது செய்துள் ளனர்.

கிணறு வெட்டுவதாகக் கூறி அவர்கள் புதையல் தோண்டுவதில் ஈடுபட் டிருந்தனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

கற்பாறைகளை அகற்று வதற்குத் தேவைப்படும் பல இயந்திரங்கள் மற்றும் உப கரணங்களையும் அவர்களி டமிருந்து பொலிஸார் கைப் பற்றியுள்ளனர். (ச)

# ரூ.30 லட்சம் பெறுமதியான நகைகள் நேற்றுமுன்தினம் திருட்டு

## கட்டுகஸ்தோட்டையில் சம்பவம்

கண்டி,பெப்.13

கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேச வீடொன்றிலிருந்து சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு திருடப்பட்டுள்ளன என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் புகுந்த திருடர்கள், வீட்டிலிருந்த சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். நகைகளைத் திருடிய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக மூன்று பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

# சுகவீனமுற்ற மாணவிகள் அருந்த வாங்கிய பானமும் காலாவதியானது

## சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் விசாரணை

காத்தான்குடி,பெப்.13

உணவு நஞ்சானதால் சுகவீனமுற்று வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்ட மாணவிகள் அருந்து வதற்கென, கடையொன் றில் கொள்வனவு செய்யப்பட்ட பானம் காலாவதியானது என்று கண்டறியப்பட்டுள்ளது.

உணவு நஞ்சானதால் திடீர் சுகவீனமுற்ற நிலையில் காத்தான்குடி மில்லத் மகளிர் வித்தியாலய மாணவிகள்நேற்று முன்தினம் திங்கட்கிழமை வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டனர்.

காத்தான்குடி வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்ட மாணவிகள் அருந்து வதற்கென கடையொன்றில் இருந்து பானங்கள் கொள் வனவு செய்யப்பட்டுள்ளன.


இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட குறித்த பானங்கள் காலாவதியா னவை என்று கண்டுபிடிக் கப்பட்டது என்று காத்தான் குடி பிரதேச சுகாதார வைத் திய அதிகாரி யூ.எல். எம்.நசிர்தீன் தெரிவித்தார்.

காத்தான்குடி, கடற்கரை வீதியிலுள்ள கடையொன்றி லேயே குறித்த பானங்கள் கொள்வனவு செய்யப்பட் டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து கடை உரிமையாளரிடம் வினவியபோது:-

சம்பவம் நடந்தவேளை, எனது தம்பியே கடையில் இருந் துள்ளார். காலாவதியான தால் திருப்பி அனுப்புவதற்காக வைக்கப்பட்ட பானத்தை தவறுதலாக அவர் வழங் கியுள்ளார் என்று கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர் பாக மேலதிக விசாரணை களை காத்தான்குடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. (ச)



யாழ்ப்பாணம் - கண்டி ஏ-9 வீதியின் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில், சுமார் 60அடி நீளம்கொண்ட பாதையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை சரிவு ஏற்பட்டு அது கீழ் இறங்கியுள்ளது.

# யானைத் தொல்லையில் இருந்து எம்மைப் பாதுகாக்க முடியவில்லை

## வாகரைப் பிரதேச மக்கள் கவலை

மட்டக்களப்பு,பெப்.13

மட்டக்களப்பு, வாகரை பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட கிராமங்களில் காட்டு யானைகளின் தொல் லைகளிலிருந்து தம்மைப் பாதுகாக்க முடியவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கட்டுமுறிவு, ஆண்டான் குளம் ஆகிய கிராமங்களில் ஆங்காங்கே காணப்படும் சூரிய சக்தியில் இயங்கும் மின்குமிழ்கள் நீண்ட கால மாகப் பழுதடைந்து காணப் படுகின்றன. அதனால் காட்டு யானைகளின் அட்ட காசத்தால் பல அசௌகரி யங்களை எதிர்கொள்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரி விக்கின்றனர்.

இதுவரையில் மின்சாரம் இன்றி வாழும் தமக்கு சூரிய ஒளியில் இயங்கக் கூடிய மின்குமிழ்களையாவது சீராக இயங்கச் செய்ய சம்பந்தப் பட்டவர்கள் உடன் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என் றும் அந்தப் பகுதி பொது மக்கள் வேண்டுகோள் விடுக் கின்றனர். (ச)

**காட்டு யானைக ளின் அட்ட காசத் தால் பல அசௌ கரியங்களை எதிர் கொள்வதாக அந் தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.**

# இரத்தினபுரியில் மூளைக் காய்ச்சல் பரவுகிறது

இரத்தினபுரி,பெப்.13

இரத்தினபுரி மாவட்டத் தில் மூளைக் காய்ச்சல் நோயால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பரவிவரும் மூளைக் காய்ச் சல் நோயை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

பிள்ளைகளுக்குக் காய்ச் சல் ஏற்படுமாயின் உடனடி யாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களை அறிவுறுத்தி யுள்ளது.

மூளைக்காய்ச்சல் காரணமாக இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இரத்தினபுரி மாவட்ட சுகா தாரப் பணியகம் தெரிவித் துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக் குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள்.

**இடபம்:** முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**மிதுனம்:** மனதில் பட்டதை பளிச் சென்றுபேசி அனைவரையும் ஆச்சரியப் படுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய பொருள்களை புதிய யுக்தியால் விற்றுத்தீர்ப் பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**கடகம்:** ஒரே நாளில் முக்கியமான வேலைகளை பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். சிலர் உங்களை தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுக்க வேண்டாம்.

**சிங்கம்:** பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**கன்னி:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

## நாளை

மாசி- 02 வியாழக்கிழமை 14.02.2013
திதி: சதுர்த்தி மு.ப.11.33 வரை
நட்சத்திரம்: ரேவதி முழுவதும்
சுபநேரம்: 08.03- 09.33 வரை
இராகுகாலம்: 02.03- 03.33 வரை

**துலாம்:** உங்களின் குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல் வாதிகளின் சந்திப்பு கிடைக்கும். விருந்தி னர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் ஏற்படும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடி வந்து சிலர் உதவி கேட்பார்கள். உத்தியோகத்தில் மதிக் கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** அதிகாரப்பூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**மகரம்:** பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழி யர்களின் ஆதரவு கிடைக்கும். முக்கியமான சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனு கூலமான நிலைக் காணப்படும். தாய்வழி உறவினர்களால் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும்.

**கும்பம்:** ஒரு விடயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். மற்றவர்கள் பிரச்சினையில் தலையிடுவதால் வீண் பழிச்சொல் ஏற்படக்கூடும். உத்தி யோகத்தில் மற்றவர்களின் வேலையையும் இழுத்துப் போட்டு செய்வீர்கள்.

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர் களிடம் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வரக்கூடும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | | 9 | 7 | |
| 6 | 4 | | 7 | | | 1 | | 8 |
| | 1 | 7 | | 3 | | | | |
| 1 | | 9 | 2 | | 3 | | 4 | |
| | 2 | 4 | | | | 5 | 1 | |
| | 3 | | 8 | | 1 | 6 | | 9 |
| | | | | 8 | | 4 | 5 | |
| 4 | | 6 | | | 9 | | 8 | 2 |
| | 8 | 3 | | | 4 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 6 | 3 | 2 | 8 | 4 | 9 | 7 |
| 8 | 9 | 7 | 4 | 1 | 6 | 3 | 2 | 5 |
| 4 | 2 | 3 | 7 | 9 | 5 | 8 | 1 | 6 |
| 2 | 3 | 9 | 5 | 8 | 4 | 6 | 7 | 1 |
| 6 | 1 | 4 | 2 | 7 | 3 | 9 | 5 | 8 |
| 7 | 8 | 5 | 9 | 6 | 1 | 2 | 3 | 4 |
| 9 | 4 | 8 | 1 | 3 | 7 | 5 | 6 | 2 |
| 3 | 6 | 1 | 8 | 5 | 2 | 7 | 4 | 9 |
| 5 | 7 | 2 | 6 | 4 | 9 | 1 | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
18.08.1952

உதிர்வு
08.03.2011

திதி: சதுர்த்தி
(13-02-2013)

## அமரர் லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா

எங்கள் அன்புக்குரியவரே!
அன்பை, பரிவை, ஆதரவை, நல்வழியை
பண்பை, பொறுமையை, பாசத்தை உங்களிடம் பெற்றோம்
எதை நீங்கள் எங்களிடம் பெற்றீர்கள்?
வற்றாத ஊற்றாய் வழித்துணையாய் என்றைக்கும்
உற்றவராய் எங்கட்(கு) ஒளிவிளக்காய்க் கூடவர
வேண்டுகிறோம் வேறெந்த வேண்டுதலும் இல்லை ஐயா!

என்றும் உங்கள் நினைவுகளுடன்

லவ்லேன், உடுவில்,
சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், போத்தி.

(C/6290)(2.6.7)

# 34 ஆவது பிறந்தநாள் நினைவும் 6ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

மலர்வு
13.02.1979

உதிர்வு
05.01.2007



நீ வருவாயா
பூவாய் மலர்ந்து எம் கருவிழிக்குள் புதைந்து
இதயத்தைக் கொள்ளையடித்து வெண்நிலவாய்
இன்ப துன்பத்திலும் எம்மோடு கலந்து
காற்றில் உள்ள சுவாசமாய்
மண்ணில் உள்ள தாதுப் பொருளாய்
பூவில் உள்ள தேனாய்
என்றும் எம்மோடு இருந்த ராஜயே
காலத்தின் மாற்றத்தால்
வந்த கலக்கம் அது சொல்ல வார்த்தை இல்லை
இன்று நீல நிறவானிலே
வெண் மேகமாய் எம்மை அலையவிட்டு
இறைவனின் பாதத்தை நீ நோக்கிச் சென்றது ஏன்
காலங்கள் ஓடிச் சென்றாலும் உன் நினைவில்
புதைந்துள்ள எம்மைக் காண நீ வருவாயா?

அமரர்
## நவரெட்ணம் மனோராஜ்
(ராஜ்)

38, அம்மன் கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(29466)(5.6.7)

உன் நினைவுகளோடு
உன் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன் கூடிய காலநிலை நிலவும்.

## திருநீற்றுப் புதன்

கொழும்புத்துறை, பெப்.13

கிறிஸ்தவர்கள் வருடாந் தம் அனுசரிக்கும் தவக் காலத் தின் தொடக்க நாளான திரு நீற்றுப் புதன் இன்று புதன் கிழமை ஆரம்பமாகிறது.

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை நினைவு கூர்ந்து மனமாற்றம் பெற்று புதிய வாழ்வுக்குள் நுழையும் ஆரம்பநாளான இன்றைய தினம் அனைத்து கத்தோலிக்க, கிறிஸ்தவ ஆல யங்களிலும் விசேட வழிபாடுகள் இடம் பெறும். சென்ற ஆண்டு ஆசீர் வதித்து வழங்கப்பட்ட குருத் தோலைகளை எரித்துப் பெறப்பட்ட சாம்பலை நெற்றி யில் பூசும் விசேட சடங்கு வழிபாடுகளை நிறைவேற்றி திருப்பலிகளும் இடம் பெறும். (3-135)

## மெய்வன்மைப் போட்டிகள்

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய இல்ல மெய் வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் த.அம் பலவாணர் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக மக்கள் வங்கியின் சாவகச் சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ் சுந்தராசாவும் கலந்துகொள்வர். (3-9)

★ ★ ★

கரணவாய் வேதாரணி யேஸ்வர வித்தியாலய மெய் வன்மைப் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். அதிபர் த.பால குமார் தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ.ஸ்ரீகரனும், சிறப்பு விருந் தினராக கரணவாய் கிராம அலுவலர் த.புவனேந்திரனும் கலந்து கொள்வர். (3-253)

★ ★ ★

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் ஐம்பதாவது இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை யின் ஜின்னா மைதானத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முப ராக் தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு யாழ். கல்வி வலய நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.வரத ராஜமூர்த்தியும் கலந்துகொள் வார். சிறப்பு விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம் பிள்ளையும்கலந்துகொள்வர்.

★ ★ ★

சண்டிலிப்பாய் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய் வன்மைப்போட்டி இன்று பிற் பகல் 1.30 மணிக்கு பாட சாலை மைதானத்தில் அதிபர் சி.தவநாயகம் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிர தம விருந்தினராக வலி காமம் கல்வி வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல் விப் பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்துகொள்வர். (3)

## அமரர் சிவபாதசுந்தரத்துக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப்.13

வட்டூர் வள்ளுவர் அறக் கொடை நிதியத்தின் ஸ்தாப கர் ஆசிரியர் கு.சிவபாதசுந் தரத்தின் நினைவு அஞ்சலி நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி சிந்துபுரம் காந்திஜி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

வட்டு. சிந்துபுரம் வாழ் மக்கள், நாட்டுக்கூத்து அபி விருத்திக் குழுவினர், காந் திஜி சனசமூக நிலையம், வட்டுக்கோட்டை விளை யாட்டுக்கழகம், சிந்துபுரம் கலை, கலாசார மன்றம், வள்ளுவர் அறக்கொடை நிதியம், சிந்துபுரம் கிராமி யக் கலைக்குழு ஆகிய வற்றின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

முன்னாள் அதிபர் வ.யோகானந்தசிவம் நிகழ்வுக்கு தலைமை வகித்தார். நிகழ்வில் அஞ்சலியுரைகளும், நினை வுப் பேருரைகளும் இடம் பெற்றன. (3-14)

## உயர்தர பெறுபேறுகள் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.13

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத் துள்ள பெறுபேற்று விவரம் வருமாறு:-

**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

**கலைப்பிரிவு**

ஜெ.கோபிகா -2ஏபி, நா.சுஜீவன்-ஏ2பி, கா.சுகேசன்-ஏ2பி, நி.அபிநயா- ஏபிசி, ச.தபுலா சினி-ஏ2சி, கு.பாலினி-ஏபிசி, த.அஞ்சயா-ஏ2சி, பா.கிரிஷா-2பிசி, ச.சுதர்சன்-பி2சி, த.பிர தீபன்-பி2சி

**வர்த்தகம்**

க.கஸிந்தினி-ஏபிசி, பு.நிடோஜினி-ஏபிசி, இ.கௌதமன்-ஏ2சி, க.கலீபன்-ஏபிஎஸ்

**இளவாலை இந்துக் கல்லூரி**

**கலைப்பிரிவு**

வ.துவாரகன்- ஏ2பி, த.சுகிர்தா-ஏபிசி, க.ரபிதா-ஏசிஎஸ், சு.சுகிர்தனா-ஏசிஎஸ், கு.மதிவாணி-ஏ2எஸ், த.தனுஜா-பிசிஎஸ், இ.தரணிவாசன்-பிசிஎஸ். (3-9)

## துர்க்கை அம்மன் ஆலயத்தில் மாசிமக இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், பெப்.13

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தின் வரு டாந்த மாசிமக இலட்சார்ச் சனை நாளைமறுதினம் வெள் ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

இலட்சார்ச்சனை பூசை கள் காலை 8 மணிக்கு சந் திப் பூசையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து சங்கற்பம், நியா ஸம், தீபாராதனை, அர்ச் சனை, ஹோமம், உச்சிக் காலப் பூசை, சாயரட்சைப் பூசை, சதுர்ஷ்டி உபசாரம், அர்த்த சாமப் பூசை ஆகியன இரவு 7 மணிவரை இடம் பெறும்.

மாசி மக விசேட உற் சவப் பூசைகள் அதிகாலை 5.30 மணிக்கு உஷாக்காலப் பூசையுடன் ஆரம்பமாகி மாசிமகத் தீர்த்தம், காலை சந்திப் பூசை, கும்ப பூசை, திரவியாபிஷேகம், அபி ஷேகம் போன்றன நண்பகல் 12 மணிவரை இடம்பெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இலட்சார்ச்சனை இடம் பெற்று மறுநாள் திங்கட் கிழமை எண்பத்தொரு கலச அபிஷேகம், ஸ்வர்ண பத்ம புஸ்பார்ச்சனை, உள் வீதியுலா என்பன இடம் பெறும். (3-14)

## மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.13

வீதி அகலிப்பு பணி களுக்காகவும் மின் மார்க்கங் களின் புனரமைப்பு பணிகளுக் காகவும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக் கும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் குஞ் சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட் டித்துறை, தொண்டமானாறு, உடுப்பிட்டி, கற்கோவளம், புனிதநகர், நெல்லண்டைப் பிரதேசங்கள் ஆகிய இடங் களிலும்-

நாளை வியாழன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் பருத்தித் துறை சிவன் கோயிலுக்கும் சிவப்பிரகாசம் பாடசாலைக் கும் இடைப்பட்ட பிரதேசங் கள், கோண்டாவில் ஸ்ரேசன் வீதியில் கே.கே.எஸ் வீதி சந்திக்கும், கோண்டாவில் உணவுக் களஞ்சியத்துக்கும் இடைப்பட்ட பிரதேசங்கள், அல்வாய், திக்கம் பிரதேசங் கள், சாமியன் அரசடி, சம்பந் தர் கடைப் பிரதேசங்கள், யாழ். நகரில் முத்திரைச் சந்திப் பிரதேசம், வைமன் வீதி பிரதேசம், நல்லூர் கோயில் ஆகிய இடங்களி லும்-

மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று யாழ். பிர தேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (3)

கண்ணீர் அஞ்சலி

சாமிநாதன் செல்வராஜா

(சிரேஷ்ட தேர்வுநடுவர் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்)



அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் சிரேஷ்ட தேர்வுநடுவரும் இசையாசிரியருமான சாமிநாதன் செல்வராஜா அவர்களின் பிரிவுத்துயர் அறிந்து எமது நிறுவகம் ஆழ்ந்த துயருறுகின்றது.

ஈடில்லா இழப்பு இறைவனின் விருப்பாய்ப்போனது இசையுலகின் துர்ப்பாக் கியமே. அன்னார் இசையே மூச்சாய் இன்தமிழே பேச்சாய் வாழ்ந்தவர். சிரித்தமுகமும் சீரியசிந்தனையும் கொண்டவர் அவர். அமைதியும் ஆழ்ந்த சிந்தனையுமே அவரது ஆளுமையின் வெளிப்பாடு.

நுண்மதிபடைத்த நுண்கலையாளன்

அமரர் சாமிநாதன் செல்வராஜா அவர்கள்

யாழ்-ஈச்சமோட்டை எமக்களித்த இசைப்பொக்கிஷம்.

புலம்பெயர் தேசத்தில் அவரது இசைப்பணி காத்திரமானது. எமது தமிழ்க்கலை நிறுவகத்தின் பணிகளில் தூங்கா விழியாய் துணைநின்றவர். அன்னாரின் தடம் பதிந்ததே அதன் வளர்ச்சிப்பாதை என்பதை துயருடன் நினைவுகூரும் இவ்வேளை அவரின் ஆத்மசாந்திக்காகவும் அன்னாரின் பிரிவாற் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் மனவல்லமையைக் கொடுக்கவேண்டியும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அமரர் சாமிநாதன் செல்வராஜா அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று(13.02.2013) புதன்கிழமை முற்பகல் 10:00 மணியிலிருந்து நண்பகல் 12:00 மணிவரை Hauptfriedhof am Gottesacker 25, 44143 Dortmund எனும் இடத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து தமிழ்க்கலை ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

International Institute of Tamil Arts
Postfach 6711,CH – 8050 Zuerich.
0041 44 440 20 58 e.mail:iita@hotmail.ch

(29476) (2-6.7)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
19.04.1924

இறப்பு:
24.02.2012

## அமரர் வேலுப்பிள்ளை அருமைத்துரை

நிலையான வாழ்வினிலே நிலைத்து நின்ற எங்கள் அப்பா
நினைவுகளைக் கனவாக்கி ஓராண்டு தூரம் சென்றதென்ன
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
ஆறுமோ எம் துயரம் அகிலமதில் வாழும்வரை
இமயமாய் நின்றெம்மை உயரத்தில் ஏற்றி வைத்து
இமைப் பொழுதினில் சென்றீரோ எமைப்பிரிந்து
மரணங்கள் நொடிப்பொழுதில் மானிடத்தை வென்றுவிடும்
வேண்டும் அப்பா உம் உறவு எமக்கு மீண்டும்
ஆண்டுகள் பல சென்றாலும் உம் பிரிவை ஏற்கமாட்டோம்
நூற்றாண்டு கடந்தாலும் உம் பிரிவை மறக்கமாட்டோம்

உங்கள் இனிய நினைவுகளுடன்.

வி.எம்.றோட்,
பருத்தித்துறை. மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/6370)(2.6.7)

# நன்றி நவிலல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 22 | 07 |
| 04 | 02 |
| 1922 | 2013 |

அமரர்

## மரியானாப்பிள்ளை செபமாலை

கடந்த 07.02.2013 இல் இறைபதமடைந்த அமரர் ஞானமுத்து செபமாலையின் பாசமிகு மனைவி மரியானாப்பிள்ளையின் (முன்னாள், முல்லைத்தீவு, இராயப்பர் தேவாலய மூப்பர், பிரபல வர்த்தகர், சமாதான நீதிவான்) பூதவுடலை தரிசித்து வேண்டுதல் செய்தவர்களுக்கும், இரங்கல் பலியில் கலந்து கொண்டவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து எமக்கு ஆறுதலும் ஆதரவும் அளித்தவர்களுக்கும், பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், விசேடவிதமாக கார்மேல் சபை அருட் சகோதரிகளுக்கும், ஏனைய அருட் சகோதரிகள், அருட் தந்தையர்களுக்கும் சிறப்பாக கொழும்பில் இருந்து வருகை தந்தவர்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி 09.03.2013 அன்று அவரது இல்லத்தில் (31 கண்டி வீதி, யாழ்ப்பாணம்) மு.ப. 11 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

31, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்:
அருட் சகோதரி றோஸ்மலர் (அ.கா),
மேரிறோசா எலியாஸ்,
செபமாலை யேசுறாஜா (கனடா),
மேரிறொசாலியா மகேந்திரன் (கனடா),
மரியகொறற்றி ஜோசப் (நோர்வே),
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(29473) (10,6,7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## மணமகள் தேவை

55வயதுள்ள G.C.E(O/L) வரை கல்வி கற்ற, சுயதொழில் செய்கின்ற, மண மகனுக்கு மணமகள் தேவை,10வயதில் பெண் பிள்ளை ஒருவர் உள்ளார். 55 வயதுக்கு உட்பட்டவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளலாம். சாதி, சமயம், நிறம் கவனிக்கப்படமாட்டாது. விதவைகளும் அனாதைகளும் தொடர்புகொள்ளலாம்.

**T.P-: 0750526849** (26343) (3.6.7)

## Danish Refugee Council (DRC)

Rehabilitation and Capacity Building Program in Sri Lanka

**AMENDMENT OF TENDER Ref. No. DRC/VA5113, VA5114/OLT/01/08022013**
**(SUPPLY OF GI PIPES)**

Reference is made to the advertisement notice for the Open Local Tender, Tender Ref. No.: DRC/VA5113, VA5114/OLT/01/08022013 (Supply of GI Pipes) which was advertised on Sunday Uthayan (Page No.15), 10th February 2013.

You are hereby informed that DRC have made some amendments to the advertisement notice and the new advertisement should read as follows:

| Lot | Item Description | Other Details | Unit | Quantity |
|---|---|---|---|---|
| 01 | G.I Pipe 1 1/4" Ø - 30 mm Ø. (min. 2.00 mm thick, Pakistan No-1 quality, heavy duty) | 5.8 m length | Bars | 2,100 |
| 02 | G.I Pipe1" Ø - 28 mm Ø (min. 2.00 mm thick, Pakistan No-1 quality, heavy duty) | 5.8 m length | Bars | 2,856 |
| 03 | G.I Pipe 3/4" Ø - 20 mm Ø (min. 1.8 mm thick, Pakistan No-1 quality, heavy duty) | 5.8 m length | Bars | 3,780 |
| 04 | G.I Pipe1/2" Ø - 15 mm Ø (min. 1.8 mm thick, Pakistan No-1 quality, heavy duty) | 5.8 m length | Bars | 4,536 |

Other Information, terms and conditions remain same. (C/6368)(5.6.7)

# பகிரங்க ஏல விற்பனை

**நிறுவனம்** : கிளி. மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் (வ/து) பதிவு இல. K/86

**இடம்** : கோணாவில் வீதி, செல்வாநகர்,கிளிநொச்சி.

**காலம்** : 21.02.2013 முற்பகல் 10.00 மணிக்கு.

**பொருள் விபரம்:**

1) கூரைத்தகடு (கல்நார்த்தகடு-யானைச் சின்னம் 10' - 20 தனி.)
2) கூரைத்தகடு (கல்நார்த்தகடு -யானைச் சின்னம் 12' - 35 தனி)
3) ஓடு - 5000 தனி
4) கனதியான இரும்பு வகைகள்

**அறிவுறுத்தலும் நிபந்தனைகளும்:**

1) மேற்படி பொருள்களை அலுவலக நேரத்தில்14.02.2013 தொடக்கம் 20.02.2013ஆம் திகதி வரை நேரடியாகப் பார்வையிடலாம்.
2) ஏலத்தில் பெறப்படும் பொருள்களுக்கு முழுமையாகப் பணஞ்செலுத்தி அன்றே எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

தலைவர்,
கிளி.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின்
ஒன்றியம், கிளிநொச்சி.

(C/6371)(5.6.7)

# மரண அறிவித்தல்

## பொன்னையா கந்தையா (பிறைசூடி)

(இளைப்பாறிய சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர்)



கதிரிப்பாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கந்தையா திங்கட்கிழமை (11.02.2013) காலமானார்.

அன்னார் நவரத்தினம்மா (இளைப்பாறிய கணித ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், வசந்தா (ஆஸ்திரேலியா), வனஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிசங்கர், திருக்குமரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், துவாரகா, ஆஷா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா (முன்னாள் ப.நோ.கூ.ச. முகாமையாளர்), செல்லத்துரை (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கதிரிப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,பிள்ளைகள்
(077 116 8428)

கதிரிப்பாய்,
அச்சுவேலி.

(29312)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌள உபநயன ப்ரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு



"நித்திய சுத்த புத்தபோத நிர்விகார நிர்மலம் அத்தியணுப்ரமான திவ்ய தேஹதீப்தமவ்யயம் ஞான சாட்சி ரூபஹேது சாட்சி சாதனாத் பரம் ஆதி தேவ மூல வேத ஸாரமேவ சிந்தயேத்"

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வ மங்களகரமான நந்தன வருஷம் மாசித்திங்கள் 2 ஆம் நாள் (14.02.2013) வியாழக்கிழமை ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 8.31 மணிக்கு மேல் 10.01 மணிக்குள் வரும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் மற்றும் இஷ்ட குல தெய்வங்கள் கருணையினாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும் ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் தேவஸ்தான முன்னாள் பிரதமகுரு பிரம்மஸ்ரீ பொன்.சோமசுந்தரக்குருக்கள் நாகரத்தினம் அம்மா தம்பதிகளின் பௌத்திரனும் எமது செல்வக்குமாரனும் ஆகிய

**சிரஞ்சீவி சி.மயூரசர்மா** அவர்களுக்கு

சௌள உபநயன ப்ரம்மோபதேசம் நடைபெற திருவருளும் குருவருளும் கை கூட்டியுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து வைபவத்தைச் சிறப்பித்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உபநயன ப்ரம்மோபதேச குரு "சிவாகம ஞானபாஸ்கரன்" சிவஸ்ரீ.தானு.மஹாதேவக்குருக்கள் (தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)

இடம்: கரைப்பிரான் ஆதிவிநாயகர் திருமண மண்டபம், ஆனைக்கோட்டை.

சுபம்.

வரவேற்பாளர்கள்

பிரம்மஸ்ரீ சோ.சிவசுப்பிரமணிய ஐயர் சௌந்தர நாயகி தம்பதிகள் (கொழும்பு)
பிரம்மஸ்ரீ கை.கோவர்த்தனக் குருக்கள் இந்துஷா தம்பதிகள் (கொழும்பு)
பிரம்மஸ்ரீ இ.அரவிந்தசர்மா பாரதி தம்பதிகள் (கொழும்பு)
பிரம்மஸ்ரீ. இ.ஐங்கரசர்மா (லண்டன்). பிரம்மஸ்ரீ.இ.ஆனந்தபாபு சர்மா (லண்டன்)

தங்கள் நல்வரவை நாடும்:-
சோம.சிவகுமாரக்குருக்கள் சுதாமதி தம்பதிகள்
செல்வி சி.மயூரிக்கா
தொ.பே.021 321 8255







advt@uthayan.com
0215671111


## சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

### பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

காலம் : 03.03.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப 09.30 மணி

இடம் : பாடசாலை அருணாசலம் மண்டபம்

- கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் இருப்பின் 28.02.2013 ஆம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பி வைக்கவும்
- புதிய அங்கத்தவர்களாக இணைய விரும்புவோர் பாடசாலை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**அங்கத்தவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

அ.கயிலாயபிள்ளை
தலைவர்.

யோ.ஜெயக்குமார்
செயலாளர்.


## SPOKEN ENGLISH

### யாருக்காக ?

- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-16.02.2013

1) காலை 8.00-10.00 2) மு.ப 10.00-12.00
3) பி.ப 1.00-3.00 4) மாலை 3.00-5.00

குறிப்பு: எமது பயிற்சியில் இணைந்து எவராவது 3 மாதமுடிவில் ஆங்கிலத்தில் ஏனையவர்களுடன் சரளமாகப் பேச முடியாதிருந்தால் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

அனுமதி, புத்தகம், சான்றிதழ் இலவசம்

**SAAMSON** 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
TEL.0776214567


## கண்ணீர் அஞ்சலி



அல்வ சத்திரலேன், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், இல.313, ஜெயந்தி நகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட, எமது நிறுவனத்தின் உரிமையாளரும், ஓட்டுநரும், சிறந்த பொறியியலாளரு மான

**சோமசுந்தரம் ஜெகதீஸ்வரன்**

(பீப்பா ராசன்னா)

அவர்கள் நேற்று முன்தினம் 11.02.2013 திங்கட் கிழமை இறைபதம் அடைந்ததனையிட்டு, அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதுடன், இத்துயரில் நாமும் பங்கு கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர், உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள், பணியாளர்கள் தனியார் பேருந்து உரிமையாளரின் (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட நிறுவனம், கிளிநொச்சி மாவட்டம்.

## மரண அறிவித்தல்

### நாகமுத்து கந்தையா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கந்தையா நேற்று (12.02.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.02. 2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
குமாரராஜா-ரஞ்சினி குடும்பம் (டென்மார்க்)
T.P: 004527841577

யதீஸ் (பேரன்)
யதீஸ் ரவல்ஸ்-அளவெட்டி.
T.P: 0777174162.

(29485)(10-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மட்ட சுதந்திரதின மேசைப்பந்து

# மூன்று பிரிவுகளிலும் சிந்துஜா சம்பியன்



சிந்துஜா



சுஜீவன்



ஸ்ரெலோன்

யாழ்ப்பாணம், பெப்.13

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு இலங்கை மேசைப் பந்தாட்ட சங்கம் நடத்திய தேசியமட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 18 வயது , 21 வயதுப் பிரிவுகளிலும் மற்றும் திறந்த பிரிவு போட்டியிலும் பங்குபற்றி மூன்று பிரிவுகளிலும் முதலிடத்தைப் பெற்றுச் சிறந்த வீராங்கனையாகி சாதனைபடைத்துள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவி ஸ்ரீஸ்கந்தராஜா சிந்துஜா

18 வயதுப் பிரிவில் கண்டி ஹில்வூட் கல்லூரி வீரங்கனையான அஷன் ஷானி பொத்துவிலவை எதிர்கொண்டார் சிந்துஜா . அவரின் அபார ஆட்டத்துக்கு முன்னால் எதிரணி வீராங்கனையால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இதனால் 12:10, 11:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் கண்டி ஹில்வூட் கல்லூரி வீராங்கனையை வீழ்த்தி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவி சிந்துஜா வெற்றிபெற்று சம்பியனானார்.

21வயதுப் பிரிவிலும் சிந்துஜா போட்டியிட்டார். இந்தப் பிரிவில் அவர், வவுனியா சுந்தரபுரம் மகளிர் தமிழ்ப் பாடசாலையச் சேர்ந்த நிஷாந்தினியுடன் மோதிக்கொண்டார். தன்னைவிட வயது கூடிய எதிராளியை சந்தித்தால் முதல் சுற்றில் சிந்துஜா தடுமாறினார். இதனால் முதல் சுற்றை சுந்தரபுரம் மகளிர் தமிழ் பாடசாலையைச் சேர்ந்த நிஷாந்தினி 11:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார்.

ஆயினும் முதல் சுற்றில் விட்ட தவறுகளை இனங்கண்டு கொண்ட சிந்துஜா, அடுத்த சுற்றுகளில் எழுச்சி கண்டார். புயல் வேகத்தில் ஆடினார். இதனால் எதிரணி வீராங்கனை புள்ளிகளை பெறமுடியாது தவித்தார். இறுதியில் இரண்டாவது மற்றும் மூன்றாவது சுற்றுக்களில் முறையே 11:4, 11:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டு சிந்துஜா 21 வயதுப் பிரிவிலும் சம்பியனானார்.

தொடர்ந்து திறந்த வயதுப் பிரிவு போட்டியிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வீராங்கனை சிந்துஜா பங்கேற்றார். இந்தப் பிரிவில் அவர், கொழும்பு மியூஸியஸ் கல்லூரி வீராங்கனை டிலன்யா முனசிங்கவை எதிர் கொண்டார்.

இதில் முதல் சுற்றை 11:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் சிந்துஜா எளிதாகக் கைப்பற்றினார். ஆனால் இரண்டாவது சுற்றில் மியூஸியஸ் கல்லூரி வீராங்கனை சிந்துஜாவுக்கு கடும் சவாலை வழங்கினார். நீண்டநேரப் போராட்டத்துக்குப் பின்னர் இரண்டாவது சுற்றையும் 17:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கி சம்பியன் வென்றார் சிந்துஜா.

தான் பங்குகொண்ட மூன்று பிரிவுகளிலும் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டி சம்பியனான தெல்லிப்பழை யூனியன்கல்லூரி வீராங்கனை சிந்துஜா, இந்தத் தொடரில் சிறப்பான பெறுபேறை வெளிப்படுத்திய சிறந்த வீராங்கனையாகத் தெரிவானார்.

இதேவேளை, 15 வயது பிரிவுக்கு உட்பட்ட ஆண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி வீரர் ஜே.ஸ்ரெலோன் சம்பியனானார்.

ஆண்களுக்கான திறத்த போட்டியில் யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். சகாயராஜ் சுஜீவன் இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

(ங-23)

## இன்றைய ஆட்டங்கள்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:

பி.ப.3 மணி

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்

எதிர்

மனோகரா விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

பாடசாலைகளில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையே கீர்த்திகன் ஞாபகார்த்தவெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள அரையிறுதியாட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

பி.ப. 3 மணி (ஆண்கள் பிரிவு)

யாழ். மத்திய கல்லூரி எதிர் யாழ்.இந்துக் கல்லூரி

பி.ப.4.30 மணி (பெண்கள் பிரிவு)

இராமநாதன் மகளிர் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்றைய ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழகம்

எதிர்

மயிலிட்டி கண்ணகை விளையாட்டுக்கழகம்.

(ங-23)

## காரைநகரில் கரப்பந்து

யாழ்ப்பாணம், பெப். 13

காரைநகர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை வியாழக்கிழமை யாழ்ற்ரன் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ங-23)

## ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம்,பெப்.13

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுகழகம் நடத்திவரும் யாழ். மாவட்ட ரீதியான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் லீக் முறையிலான ஆட்டம் ஒன்று சமநிலையில் முடிவடைந்தது.

வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இரு அணியினரும் சமபலத்தோடு மோதினர். ஆட்ட நேர நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றன. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ங-23)

# சென்.ஜோன்ஸ் நீச்சலில் வென்றோர்





சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டியை முன்னிட்டு இல்லங்களுக்கு இடையே முதன் முறையாக நடத்தப்பட்ட நீச்சல் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு:-

13 வயதுப் பிரிவு- 1 ஆம் இடம் - ஜி.கஜனிஸ் (பீற்றோ இல்லம்), 2ஆம் இடம் - ஆர்.ராஜ்நாராயணா (தொம்சன் இல்லம்), 3 ஆம் இடம்- ஜே.ஞானசீலன் (ஜோன்சன் இல்லம்)

15 வயதுப் பிரிவு

1ஆம் இடம் - டி. விதுசன் (தொம்சன் இல்லம்),

2ஆம் இடம் - ஜீ.லினேஸ் (பீற்றோ இல்லம்),

17 வயதுப் பிரிவு- 1 ஆம் இடம் ஆர். குருபரன் (பீற்றோ இல்லம்) , 2 ஆம் இடம்- பி. றுசான் ( பாச்சிற்றர் இல்லம்), 3ஆம் இடம்- ஜே.டிதுஷண் (ஹன்டி இல்லம்)

19 வயதுப் பிரிவு

1ஆம் இடம் - யோகனஸ் (யோன்சன் இல்லம்), 2 ஆம் இடம்- விதுஷன் (தொம்சன் இல்லம்), 3 ஆம் இடம்- ப.சாமுவேல் (பீற்றோ இல்லம்) (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகள் சூடின வாகை




நியூசிலாந்துக்கெதிரான மகளிர் உலகக் கிண்ண 'சுப்பர்-6' போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

10 ஆவது மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் மும்பையில் நடந்த சுப்பர்-6 சுற்றுப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தொடக்க வீராங்கனைகளாகக் களமிறங்கிய நைட் 15 ஓட்டங்களும், நடாசா 4 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.





பின்பு களமிறங்கிய டாட்டின் 27 ஓட்டங்களும், டேலி 37 ஓட்டங்களும், ஸ்டெபானி டெய்லர் 49 ஓட்டங்களும் எடுத்தனர். கடைசி நேரத்தில் அனீசா ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்கள் எடுத்து கைகொடுக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 207 ஓட்டங்கள் எடுத்தது.

கடின இலக்கைத் துரத்திய நியூசிலாந்து அணி 44.3 பந்துப்பரிமாற்றங்களில் 159 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

அணித்தலைவி பேட்ஸ் 30 ஓட்டங்களும், பிரீஸ்ட் 36 ஓட்டங்களும் எடுத்தனர். இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. (நி)

# இந்திய அணி 'நம்பர் 1'

சர்வதேச ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) டுபாயில் வெளியிட்டுள்ளது. இதில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் தலா 119 புள்ளிகளுடன் உள்ளன. எனினும் தசம புள்ளி வித்தியாசத்தில், இந்தியா முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டது. இங்கிலாந்து அணி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை முழுமையாக வென்ற ஆஸ்திரேலிய அணி, 116 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்தில் நீடிக்கிறது. அடுத்த மூன்று இடங்களில் தென்னாபிரிக்கா (112 புள்ளி), இலங்கை (110 புள்ளி), பாகிஸ்தான் (107 புள்ளி) அணிகள் உள்ளன. மேற்கிந்தியத்தீவுகள் அணி 84 புள்ளிகளுடன் 7 ஆவது இடத்தில் உள்ளது.

**வொட்சன் முன்னேற்றம்:**

ஒருநாள் போட்டி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் விராட் ஹோக்லி 3 ஆவது இடத்தில் நீடிக்கிறார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக அபாரமாக ஆடிய ஆஸ்திரேலியாவின் ஷேன் வொட்சன், 6 இடங்கள் முன்னேறி, 8 ஆவது இடத்தைப் பிடித்தார். தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா, டீ வில்லியர்ஸ் முதலிரண்டு இடங்களில் தொடர்கின்றனர்.

**நரைன் 'நம்பர் 3':**

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக சுழலில் அசத்திய மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர் சுனில் நரைன், பந்துவீச்சாளர்கள் பட்டியலில், ஒரு இடம் முன்னேறி, முதன்முறையாக மூன்றாவது இடம் பிடித்தார். ஆஸ்திரேலியாவின் மக்கே, 7 இடங்கள் முன்னேறி, முதன்முறையாக 7 ஆவது இடம் பிடித்து, 'ரொப்-10' பட்டியலில் இணைந்தார். மற்றொரு ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் மிட்சல் ஜோன்சன், 5 இடங்கள் முன்னேறி 14 ஆவது இடத்தை இந்திய சுழற்பந்துவீச்சாளர் அஸ்வினுடன் பகிர்ந்து கொண்டார். இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 9 ஆவது இடத்தில் உள்ளார். பந்துவீச்சாளர் பட்டியலில் முதலிரண்டு இடங்களில் பாகிஸ்தானின் சயீத் அஜ்மல், முகமது ஹபீஸ் உள்ளனர்.

சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில், இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா, 5 ஆவது இடத்தில் உள்ளார். முதல் மூன்று இடங்களில் பாகிஸ்தானின் ஹபீஸ், பங்களாதேஷின் சகிப் அல் ஹசன், ஆஸ்திரேலியாவின் வொட்சன் உள்ளனர். (நி)

# 'பூஸ்ட்' புதிய நட்சத்திரம்

சச்சின், ஷேவாக், டோனியின் காலம் மலையேறி, இது இளைஞர்களின் காலம் என்பதை நிரூபிப்பது போல 'பூஸ்ட்' நிறுவனம் தனது அடுத்த விளம்பர ஸ்டாராக விராட் ஹோக்லியை ஒப்பந்தம் செய்துள்ளது.

இனி 'பூஸ்ட்' விளம்பரங்களை விராட் தான் அலங்கரிக்கப்போகிறார். இந்த ஆண்டு ஹோக்லிக்கு உண்மையிலேயே 'பூஸ்ட்டான' ஆண்டுதான்.

மிகப் பெரிய அங்கீகாரமாக அவருக்கு 'பூஸ்ட்' நிறுவன விளம்பரப் பிரதிநிதி என்ற பொறுப்பு வந்து சேர்ந்துள்ளது.




ஒரு காலத்தில் "பூஸ்ட் இஸ் தி சீக்ரெட் ஆப் மை எனர்ஜி" என்றார் கபில்தேவ். பின்னர் "அவர் எனர்ஜி" என்று சச்சினும் அவருடன் இணைந்தார். அதற்குப் பின் ஷேவாக், கடைசியாக வந்தவர் டோனி. இப்போது ஹோக்லி புகுந்துள்ளார்.

இவர்களில் சச்சின்தான் நீண்ட காலமாக 'பூஸ்ட்' விளம்பரத்தில் இருந்து வந்தவர்.

விராட் ஹோக்லியை 'பூஸ்ட்' நிறுவனம் தமது அடுத்த கிரிக்கெட் நட்சத்திரமாக அறிவித்துள்ளது. ஹோக்லியை 'பூஸ்ட்' நிறுவனம் நாடு முழுவதும் மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தித் தெரிவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# நியூசிலாந்து பதிலடி

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், நியூசிலாந்து அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட 20/20 சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.



ஹமில்டனில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 192 ஓட்டங்களைக் குவித்தது. முதலாவது இலக்குக்காக 8.2 பந்துப்பரிமாற்றங்களில் 75 ஓட்டங்களைப் பெற்ற நியூசிலாந்து அணி, இறுதி 3 பந்துப்பரிமாற்றங்களில் 38 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக பிரெண்டன் மக்கலம் 38 பந்துகளில் 74 ஓட்டங்களையும், மார்டின் குப்ரில் 31 பந்துகளில் 47 ஓட்டங்களையும், கொலின் முன்றோ 27 பந்துகளில் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேட் டேர்ண்பக் 3 இலக்குகளையும், லூக் ரைட் 2 இலக்குகளையும், ஜேம்ஸ் ட்ரெட்வெல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

193 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 19.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று 55 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது, இரண்டாவது இலக்குகளை 9 ஓட்டங்களுக்கு இழந்த இங்கிலாந்து, அதன் பின்னரும் தொடர்ச்சியாக சரிவைச் சந்தித்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொஸ் பட்லர் 30 பந்துகளில் 54 ஓட்டங்களையும், ஜேம்ஸ் ட்ரெட்வெல் 11 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் ஃபிராங்ளின் 4 இலக்குகளையும், மிற்சல் மக்லநகன், இயன் பட்லர் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், நதன் மக்கலம் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.



[illegible] நியூசிலாந் [illegible] நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்ட தீர்ப்பால் கலவரம்

கெய்ரோ: எகிப்தில் உதைபந்துப் போட்டி மோதல் வழக்கில் 21 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிராக நடந்த கலவரத்தில் 30 பேர் வரை பலியாகி உள்ளனர்.

எகிப்தில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் உள்ளூர் அணிகளுக்கு இடையே உதைபந்துப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியின்போது இரு அணி ரசிகர்களிடையே மோதல் வெடித்தது. இந்த மோதலில் 74 பேர் உயிரிழந்திருந்தனர். இது தொடர்பான வழக்கில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

இந்த விசாரணையில் 21 பேருக்கு நேற்றுமுன்தினம் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஏனையவர்களுக்குப் பின்னர் தீர்ப்பு வழங்கப்படும் என்று கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து போர்ட் சேட் நகரில் வன்முறை வெடித்தது. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அந்த நகரச் சிறைச்சாலை முன்பாக ஒன்றுகூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் பொலிஸாருடன் மோதல் வெடித்தது. இந்த மோதலில் இதுவரை சுமார் 30 பேர் உயிரிழந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அங்கு இராணுவம் குவிக்கப்பட்டு வன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவருகிறது. (நு)


**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம்-2013**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 16.02.2013 சனிக்கிழமை மு.ப 11.30 மணிக்கு இல.43, 3ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும் என்பதனை கட்சியின் சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகிறோம்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைவர்.
செ.கஜேந்திரன் பொதுச் செயலாளர்.
(29475)(3.6.7)

**50 வயதிலும் டுபாயில் ஹொட்டேல் முகாமைத்துவம் படித்துக்கொண்டே உழைக்கலாம்**

★ O/L போதும்
★ 2 வருடக் கற்கைநெறி
★ படித்துக்கொண்டே மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்
★ ஒரு வாரத்தில் விசா பெற ஆலோசனை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(29478)(10.6.7)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு: advt@uthayan.com 0215671111

**German Language Academy**

German Swiss பொன்சர் மூலம் செல்பவர்களுக்கும், A1 பரீட்சைக்கு தோற்றவுள்ளோர்களுக்கும் எமது நிறுவனத்தினூடாக விசேட பயிற்சிகள் பெற்று ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தும் பரீட்சையில் பங்குபற்றலாம்.
★ கடந்த 12.12.2012 அன்று நடந்த பரீட்சையில் 9 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.
★ எமது நிறுவனத்தில் படிக்கும் மாணவர்களுக்கு இலவச புத்தகங்கள் வழங்கப்படும்.

Sun British College
Station Road, Vavuniya.
Mr. S. Kones
(29463) (10.6.7)

German Language Academy
23, Palaly Road, Jaffna.
தொடர்புக்கு: 0779707322.

**மணல் விற்பனைக்குண்டு**

கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்துக்கே கொண்டு வந்து தரப்படும்.

4 டிரக்டர் - 21,000/=

தொடர்புகளுக்கு:-
தீபன் T.P.0722694462

**வெளிவந்துவிட்டது**

திரு.சு.சுரேஸ்குமார் ஆசிரியரின் A/L கைத்தொழில் இரசாயனம் (Industrial Chemistry) அனைத்து மாவட்ட பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கின்றது.
T.P: 0775559028

**கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி**

மாதம் 150000/=க்கு மேல் சம்பாதிக்க சிறந்த தருணம் இதுவே....
Mobile Phone Repairing Course
நீங்கள் பாடசாலையை விட்டு இடைநிறுத்தியவரா? தொழில் செய்து கொண்டு பகுதி நேரமாக மேலதிகமாக வருமானம் பெற வேண்டுமா?
Just 4 Days
ஆரம்பம்- Feb:15,16, 17,18 ஆகிய நாள்களில்
4 நாட்களில் இத்தொழிலை பழகி 5ஆவது நாளே நீங்களே சொந்தமாக இத்தொழிலை ஆரம்பிக்க முடியும். 100% உத்தரவாதம்.
பதிவுகளுக்கு விரையுங்கள்
கட்டணம் 9500/=
Sun British College, No.26 Station Road, Vavuniya. T.P- 0777929475

**ஆஸ்திரேலியா விசா ஆலோசனை (தனியாளுக்கு)**

இலகுவாக, சட்டரீதியாக, குறைந்த கட்டணத்தில் செல்லலாம்
★ குடும்ப விசா ஆலோசனைகள் மறு அறிவித்தல் வரை வழங்கப்படமாட்டா.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016

**AFTER A/L STUDY IN UK**

உங்கள் UK செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

நீங்கள் ஏன் EXPONET ஐ தெரிவு செய்யவேண்டும்
- 2012 A/L எடுத்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள்
- இலவச IELTS or City & Guilds வகுப்புக்கள்
- மிகக்குறைந்த கல்லூரிக் கட்டணங்கள்
- மிகச்சிறந்த UK பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் அனுமதி பெற்றுத் தரப்படும் (HTS College)

யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்.

UKல் உயர்கல்வி, உயர்கல்வியுடன் இணைந்த வேலை வாய்ப்புப்பற்றி தெளிவான ஆதாரபூர்வமான ஆலோசனைகளை பெற எமது கருத்தரங்கில் இணைந்து கொள்ளுங்கள்

**SPOT ADMISSION**

எமது நிறுவனத்தின் அதிபர் யாழில் மாணவர்களை சந்தித்து உடனடி அனுமதிகள் வழங்க இருப்பதால் உங்கள் அனுமதிக்கு முந்துங்கள்.

| | |
|---|---|
| Date | : 16/02/2013 |
| Venue | : Gnanams Hotel-Clock Tower Road, Jaffna |
| Time | : 10.00 am- 3.00 pm |

எமது நிறுவனத்தின் மூலம் பயணமான யாழ் மாணவர்களில் சிலர்




EXPONET Overseas Consultants

Head Office : 379-1/2, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197, Arasady Road, Jaffna. (Between Kantharmadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.

**Hotline - 021 7538395 / 021 2227230**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மனநிறைவு
இயற்கையான
செல்வம்.ஆடம்பரம்
செயற்கையான
வறுமை.
-சோக்ரடீஸ்-

# புதன் பொய்கை

A

உதயன் பெப்ரவரி 13 2013 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

# விதமிழர் பண்பாட்டு விளையாட்டுக்கள்

■ வி. ரமேஷ்குமார்

(சென்றவாரத் தொடர்ச்சி....)




**தட்டாங்கள்:** ஒரு கல்லை மேலே தூக்கிப் போட்டு அதனைக் கீழே விழாமல் தரையினைத் தட்டிப் பிடிக்கும் விளையாட்டைத் தட்டாங்கள் விளையாட்டு என்பர். இலக்கியங்களில் காணப்படும் கழங்காடுதலுக்கும் இதற்கும் தொடர்பு உண்டென்பர்.

**சிறுவர் சிறுமியர் விளையாட்டு:-**

**கண்ணாம்பூச்சி** சிறுவர், சிறுமியர் கண்ணை மூடிக் கொண்டு விளையாடும் விளையாட்டிற்குக் கண்ணாம்பூச்சி என்று பெயர். இது ஓடி ஒளிந்து இருப்பவர்களைக் கண்டு பிடிக்கும் விளையாட்டாகும்.

**நொண்டி விளையாட்டு:** ஒரு காலினைப் பயன்படுத்தி ஆடும் ஆட்டம் நொண்டி விளையாட்டாகும். ஒருவர் நொண்டியடித்துக் கொண்டு மற்றவர்களை தொடும் விளையாட்டு.

**கிட்டிப்புள்:** இரு சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு. நீளக்குச்சி, கிட்டி என இரண்டு வகை வைத்திருப்பர். நிலத்தில் சிறிது பள்ளம் தோண்டி அவற்றில் கிட்டியை வைத்து நீளக் கோலால் அடிப்பர். எதிரே உள்ளவன் பிடித்து விட்டால், அடித்தவன் காயாகி விடுவான். இவ்வாறு இருவரும் மாறி மாறி விளையாடுவர்.

**பம்பரம்:** பம்பரம் என்னும் விளையாட்டுப் பொருளைக் கொண்டு ஆடும் ஆட்டத்திற்குப் பம்பர ஆட்டம் என்று பெயர். வட்டமிட்டு அதனுள் ஒரு பம்பரத்தை வைத்து வெளியேற்றுவர். வெளியேற்றியவன் அனைவரும் சாட்டையால் பம்பரத்தைச் சுற்றிக் கையால் எடுக்க வேண்டும்.

**குண்டு விளையாட்டு:** சிறுவர்கள் விளையாடும் இவ்விளையாட்டினைக் குண்டு விளையாட்டு என்றும் கோலி விளையாட்டு என்றும் கூறுவர். நிலத்தில் குழிதோண்டி அதனை நோக்கிக் குண்டை அடித்து அதில் விழச் செய்யவேண்டும். கிராமத்துச் சிறுவர்களிடையே, இவ்விளையாட்டினைக் காணலாம்.

**பட்டம் விடுதல்:** கிராமங்களில் மட்டுமன்றி நகரங்களிலும் காற்றுக்காலத்தில் பட்டம் விடுவது சிறுவர்களுக்குப் பொழுதுப் போக்கான விளையாட்டாகும்.

**கரகரவண்டி:** சிறுமியர்கள் பலர் நின்று கொண்டு சுற்றிக்கொண்டேயிருப்பர். யார் கடைசி வரையில் சுற்றுகிறார்களோ? அவரே வென்றவராவார். கரகரவண்டி காமாட்சி வண்டி எனப் பாடிக் கொண்டே விளையாடுவர்.



**குழந்தை பாடல்கள் குழந்தை விளையாட்டுகள்:-**

குழந்தை விளையாட்டுகளைப் பல விதமாகப் பிரிக்கலாம். அவற்றுள் ஆண்குழந்தை, பெண் குழந்தை விளையாடுவதாகவும் இருவரும் இணைந்து விளையாடுவதாகவும், இருவருள் ஒருவர் மட்டும் விளையாடுவதாகவும் நான்காகப் பகுப்பர்

*ஓடி விளையாடு பாப்பா - நீ*
*ஓய்ந்திருக்க லாகாது பாப்பா*
*கூடி விளையாடு பாப்பா - ஒரு*
*குழந்தையை வையாதே பாப்பா*

என்று பாடினார் பாரதி, இவர் கூறிய விளையாட்டு மனிதனின் சுவாசப் பயிற்சிக்கும் உகந்த விளையாட்டான சடுகுடு கிராமப்புறங்களில் காணப்படும் ஒன்றாகும்.

*நான்தான் வீரன்*
*நல்லமுத்துப் பேரன்*
*வெள்ளிப் பிரம்பு எடுத்து*
*விளையாட வாரேண்டா*
*தங்கப் பிரம்பு எடுத்து தாலிகட்ட*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரும்பாலான நகர மக்கள் நாட்டுப்புற விளையாட்டுகளை மறந்தும், துறந்தும் மேல் நாட்டு விளையாட்டுகளில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் கிராமிய மக்களிடத்தும் திராவிடர்களின் மரபு விளையாட்டுகள் மறைந்து வருகின்றன.**

*வாரேண்டா வாரேண்டா*

என்பது குழந்தைகளின் விளையாட்டுப் பாடல்கள்.

**விளையாட்டு பற்றிய திரையிசைப் பாடல்கள்:**

ஆண், பெண் என்ற வேறுபாடு எதுவும் இல்லாமல் எல்லோரும் இணைந்து விளையாடும் போது,

*குலை குலையா முந்திரிக்கா*
*நரியே நரியே ஓடிவா*


என்ற வரிகள் நாட்டுப்புறப்பாடல் வரிகள், திரைப்படப் பாடலில் இடம் பெற்றிருக்கக் காண்கின்றோம்.

*என் சோட்டு பிள்ளைகளா*
*இள வாழைத் தண்டுகளோ*
*வாழைக் குருத்துகளா*
*வாருங்கோ விளையாட*


என்ற விளையாட்டுப் பாடல் வரிகள், திரை இசையில் காணப்படுகின்றன.

திராவிட மக்களின் விளையாட்டுக்கள் பல தரப்பட்டவை. செழுமையானவை. சில வெளிநாட்டுப் பண்பாடுகளோடு தொடர்புடையவை. வேளாண்மையையும் கால்நடை வளர்ப்பும் கொண்ட கிராமமக்கள் சிக்கலான போட்டி அமைப்புகளையும், பலநுவான விளையாட்டுகளையும் கொண்டுள்ளனர்.

பெரும்பாலான நகர மக்கள் நாட்டுப்புற விளையாட்டுகளை மறந்தும், துறந்தும் மேல் நாட்டு விளையாட்டுகளில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் கிராமிய மக்களிடத்தும் திராவிடர்களின் மரபு விளையாட்டுகள் மறைந்து வருகின்றன. ★



# சப்பாத்துக்குள் தொலைபேசி...!




**கா**லில் அணியும் சப்பாத்துக்குள் அனைத்து வசதிகளைக் கொண்டு செயற்படும் தொலை பேசிகளை உருவாக்கி யுள்ளனர். இந்தத் தொலை பேசிகளை தண்ணீர் உட்புகாத வண்ணம் அமைத்துள் ளனர்.

சப்பாத்துக்குள் தொலைபேசி...!

# போத்தல்களினால் கட்டப்பட்ட வீடு

**தெ**ன் அமெரிக்க நாடான பொலிவியா இயற்கை வளங்களைக் கொண்ட நாடாகும். ஆயினும் பொலிவியாவின் மக்கள் தொகையில் 50 வீதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றனர். ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பது என்பது அங்கு மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது.

இந்தநிலையில், பொலிவியாவின் சான்டா குரூஸ் நகரில் வசித்து வந்த இன்கிரிட் வாகா டியாஸ் என்ற பெண் அதிகரித்து வரும் ஏழ்மையைக் கண்டு வருந்தினார். தன்னைச் சுற்றியுள்ள ஏழை மக்கள் வீடில்லாமல் கஷ்டப்படுவதை உணர்ந்த அவர், அவர்களுக்கு குறைந்த செலவில் வீடுகளை கட்டித்தர விரும்பினார். அப்போது, வீணாக தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருள்களை உபயோகப் படுத்தி வீடு கட்ட முடிவு செய்தார்.



அதற்கமைய வெற்றுப் பிளாஸ்டிக் போத்தல்களில் மணலை நிரப்பி அதனை செங்கல்லாகப் பயன்படுத்தும் முறையைக் கண்டு பிடித்தார். அவற்றைக் கொண்டு இதுவரை 10 வீடுகளை கட்டிக் கொடுத்துள்ளார்.

# வெற்றிக்கு



**வாழ வேண்டும்**
**என முடிவு செய்யும்**
**பலர்**
**தோற்றுவிடுவது**
**உண்டு**
**தோல்வி தான்**
**வெற்றிக்கு முதல் நிலை**
**தூக்கி விடுபவர்களை**
**விட**
**தள்ளி விட**
**நினைப்பவர்களே**
**நம்மில் அதிகம்**

சா.ஜிந்துஜா, கோண்டாவில்

# சிறுவனுக்குப் பாதுகாப்பு மலைப்பாம்பு

[illegible]ம்பைக் கண்டால் படையே நடுங்கும் என்று கூறுவார்கள். ஆனால் சீனாவிலுள்ள டோங்குயன் என்ற ஊரில் உள்ள ஒருவர் தன்னுடைய 13 வயது மகன் அஸ்ஹி லியூவை பாதுகாக்க மலைப்பாம்பை வளர்த்து வருகிறார்.

இந்தப் பாம்பு உருவத்தில் சிறிது என நினைத்துவிடாதீர்கள். அது 15 அடி நீளம் கொண்ட ராட்சத பாம்பு ஆகும்.

சிறுவனின் பெற்றோர் வேலை நிமித்தம் தினமும் வெளியே செல்ல வேண்டிய நிலை உள்ளது.


அதனால் மகனை வீட்டில் தனியாக விட்டுச் செல்ல முடியாததால், குழந்தை 6 வயதாக இருக்கும் போது தந்தை மலைப் பாம்பு முட்டையை வாங்கி வந்து பொரிக்கச் செய்தார். அந்தப் பாம்பு குட்டிப் பருவத்தில் இருந்தே சிறுவனோடு நெருங்கிப் பழகி நண்பனாகி விட்டது.

தற்போது சிறுவனை பாதுகாக்கும் செவிலித்தாய் போல் இந்த மலைப்பாம்பு செயற்பட்டு வருகிறது. பெற்றோர் வெளியே சென்றதும் அவன் பாம்பின் அருகில் தலையணையை போட்டு படுத்துக் கொள்வான். ஒரே அறையில் தங்கி விளையாடி மகிழ்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை



ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணர்ந்தால் எமக்குள் சண்டை வரவே வராது. ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதை பெரியோர்களும் கவிஞர்களும் காலம் காலமாக வலியுறுத்தி வருகின்றனர். உதாரணத்திற்கு பின்வரும் கூற்றை நாம் கேள்விப்பட்டிருப்போம். நான், நீ என்று சொன்னால் உதடுகள் ஒட்டாது. நாம் என்று சொன்னால்தான் உதடுகள் ஒட்டும்.

எமது உடல் உறுப்புகளே நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

தனிமரம் தோப்பாகாது. பல மரங்கள் ஒன்று சேர்ந்தது தான் தோப்பு. அது போல தனி ஒரு மனிதனே எல்லா செயல்களையும் வெற்றிகரமாக செய்து விட முடியாது. மற்றவர்களது உதவி அவசியம். அதற்கு எங்களுக்குள் ஒற்றுமை மிக முக்கியம்.

இலங்கை ஒரு வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு. இருப்பினும் அன்று நாம் பிற நாட்டவர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்ததற்கான காரணம் நாம் ஒற்றுமையாக இல்லாதிருந்ததே. பின்வரும் கதைகள் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

**முட்டாள் பூனைகள்**

இரண்டு பூனைகள் ஒரு வீட்டிலிருந்து சிரமப்பட்டு ஒரே ஒரு பணியாரத்தை திருடி வந்தன. வெளியில் வந்து பங்கு பிரிக்கும் போது பூனைகளுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. ''நான்தான் உள்ளே சென்று எடுத்து வந்தேன். நீ வெளியில் தானே இருந்தாய். எனக்குத்தான் அதிகமாக பங்கு வேண்டும் என்றது கறுப்புப் பூனை. ''நான்தான் வெளியில் இருந்து உன்னை எச்சரித்தேன். இல்லையென்றால் நீ வீட்டுக்காரரிடம் அடி வாங்கியிருப்பாய், இந்த பணியாரமும் கிடைத்திருக்காது. அதனால் எனக்குத்தான் அதிக பங்கு வேண்டும்'' என்றது வெள்ளைப் பூனை.

''சரி, இருவரும் சமமான வேலைகளை செய்திருக்கிறோம். அதனால் இதை சரி பாதியாக பிரித்துக்கொள்வோம். நானே பிரித்துத்தருகிறேன்.'' என்றது கறுப்புப் பூனை. உன் மீது எனக்கு நம்பிக்கை இல்லை.'' என்னிடம் கொடு. நான் பிரிக்கிறேன்'' அது முடியாது. உன் மீதும் எனக்கு நம்பிக்கை இல்லை. என்றது கறுப்புப் பூனை. இப்படியாக சண்டை முற்றிக் கொண்டே போனது. அந்த வழியாக ஒரு குரங்கு வந்தது. அது பிரச்சினையைப் பற்றி விசாரித்தது. ''என்ன இங்கு பிரச்சினை?'' பூனைகள் நடந்தவற்றை கூறின. குரங்கு கேட்டது, ''உங்களுக்கு என்ன, இதை சரிபாதியாக பிரிக்க வேண்டும் அவ்வளவுதானே?'' என்று.

ஆமாம் குரங்கண்ணே! நீங்களே இதை பிரித்துக் கொடுத்து விடுங்கள் என்று பூனைகள் கூற, குரங்கு தராசை எடுத்து பணியாரத்தை இரண்டு துண்டுகளாக பிட்டு இரண்டு பக்கமும் வைத்து எடை போட்டது. ஆனால் ஒருபக்கம் மட்டும் அதிகமாக இருந்தது. ''பூனைகளே, இந்த பக்கம் சிறிது அதிகமாக இருக்கிறது. அதை மட்டும் நான் சாப்பிட்டுக் கொள்ளட்டுமா? ஏனென்றால் அந்த சிறிய துண்டை உங்களுக்கு சரி பாதியாக பிரிப்பது கடினம்'' என்றது குரங்கு சரி, அண்ணே. நீங்கள் எங்களுக்கு பிரித்து கொடுக்கிறீர்கள்.

> “ தனிமரம் தோப்பாகாது. பல மரங்கள் ஒன்று சேர்ந்ததுதான் தோப்பு. அது போல தனி ஒரு மனிதனே எல்லா செயல்களையும் வெற்றிகரமாக செய்து விட முடியாது. ”

அதற்கு கூலியாக அதை சாப்பிட்டுக் கொள்ளுங்கள் என்றன. பூனைகள் அதை குரங்கு சாப்பிட்ட பின் மீண்டும் தராசை வைத்து எடை போட்டது. இப்பொழுது மற்றொரு பக்கம் அதிகமாக இருந்தது. இப்போ இந்த பக்கம் அதிகமாக இருக்கிறது. இந்த அதிகமாக இருக்கும் சிறிய துண்டை நான் பிட்டு சாப்பிட்டு விடுகிறேன்... என்று கூறிய குரங்கு இந்த முறை அவர்களது பதிலை எதிர்பார்க்காமலேயே தின்றது.

பூனைகளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. குரங்கு பெரியவர் என்பதால் அமைதியாக இருந்தன. ஆனால் குரங்கு எடை போடும் போதெல்லாம் ஏதேனும் ஒரு பக்கம் அதிகமாகவே இருந்தது. அதனால் அதிகமாக இருக்கும் பக்கங்களில் இருந்து சிறிய துண்டை எடுத்து சாப்பிட்டுக்கொண்டே இருந்தது.

[வளரும்]

## காகிதச் சிங்கம் பாருங்கோ...!

எங்கட நாட்டில அரசியல் செய்யிற கனபேர் வெறும் காகிதப் புலிகளாகத்தான் இருக்கினம். அவை வெறும் வீராப்பு வசனங்களை மாத்திரம் பேசிவிட்டு போவினம். ஆனா செயல்ல ஒண்டும் இருக்காது.

இது எங்கட தியேட்டர்காரருக்கு நூற்றுக்கு நூறுவீதம் பொருந்தும். அவர் தான் எல்லாம் செய்யிறமாதிரி படம் காட்டினாலும், அவரும் வெறும் காகித சிங்கம்தான் (புலியெண்டா அவருக்கு கோபம் வரும்).

வலி.வடக்கில சனம் சிறுகச் சிறுகச் சேமிச்சு கட்டின வீட்டை இரண்டு மணித்தியாலத்தில ஆமிக்காரர் தரை மட்டமாக்கிப் போட்டினம். இது யாழ்ப்பாணத்தில இருக்கிற எல்லாருக்கும் தெரியும். கூட்டமைப்புக்காரர் இதற்கு எதிராகக் குரல் கொடுக்க எங்கட தியேட்டர்காரர் வழமையான பாணியில அரசியலைத் தொடங்கிட்டார்.

தன்ர சனத்தின்ர வீட்டையே, ஆமி இடிச்சது சரியெண்டு சொல்லுறார். அதாவது அவை தங்கட பாதுகாப்புத் தேவைக்காக இடிச்சவையெண்டும், தான் பலாலியில இருக்கிற பெரியதுரையோட கதைச்சு அதை நிப்பாட்டிப் போட்டன் என்றும் சொன்னவர். இதை அவரின் பேப்பரும் கொட்டை எழுத்தில பெரிசாப் போட்டதோட அரசின் ஊதுகுழல் ஊடகங்களும் பெரிதாகப் பிரசாரப்படுத்தின.




இந்த நிலையில, படம்காட்டுறத்துக்காக கொல்லன்கலட்டிப் பக்கம் தியேட்டர்காரர் போயிருக்கிறார். அப்ப அங்க நிண்ட சனம், ஆமிக்காரன் எங்கட வீடுகளை இடிக்கிறான் எண்டு சொல்ல உடனேயே தியேட்டர்காரர், முதல் இடிச்சவை நான் இப்ப ஆமிட்டச் சொல்லி நிற்பாட்டிப் போட்டன் என்றார். சனம் ''இல்லை இடிக்கிறான்'' என்று சொல்ல, தன்ர ஆளணி சேனைகளுடன் வீடுகளை இடிக்கிறதாய் சொல்லுற இடத்துக்குப் போனார்.

அங்க தியேட்டர்காரரர்ர கண்ணுக்கு முன்னாலேயே ஆமி வீட்டை இடிச்சுக் கொண்டு நின்றிருக்கிறான். இதை அங்கே போன சில பேப்பர்காரரும் படம் எடுத்திட்டினை. உடனேயே தியேட்டர்காரர், அங்க நிண்ட எல்லோருக்கும் சொன்னாராம், இந்த விசயம் வெளியில வரக்கூடாது என்று.

தியேட்டர்காரரர்ர மக்கள் நேயம் எப்படிப்பட்டதென்று 2006 இலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை பார்த்தனாங்கள்தானே. அதால அவையும் அதைப் பேசாம விட்டினமாம். ஆனாலும் உண்மை உறங்காது பாருங்கோ! அது தன்னால வெளியில வரும். இப்ப சொல்லுங்கோ அவரைக் காகிதச சிங்கம் என்று சொன்னால் தகுமல்லே...!

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

உதயன் வாசகரில் நானும் ஒருவன் என்று சொல்வதில் பெருமை கொள்கிறேன். உதயனை தவறாமல் பார்த்து வருகிறேன். தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கக் கூடிய தளமாகவும் உதயனைப் பார்க்கிறேன்.

எனவே உதயன் மேன்மேலும் வளர்ச்சி காண வேண்டும். அதற்கு என் போன்ற வாசகர்கள் உறுதுணையாக நிற்கிறோம். உதயனில் பல கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனால் எமது பிரச்சினை சம்பந்தமான கட்டுரைகளை விரும்பிப் படிப்பேன். அண்மைய நாள்களில் தமிழர் பிரச்சினை சம்பந்தமான கட்டுரைகள் குறைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. தமிழர் பிரச்சினை சம்பந்தமான கட்டுரைகள் வரவேற்பைப் பெறும் என்பது எனது கருத்து மட்டுமல்ல எல்லோரினது கருத்தும். எனவே இந்த வகையான கட்டுரைகளை பிரசுரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**கரன், நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்**

★ ★ ★

யாழ். குடாநாட்டில் வெளிவரும் பத்திரிகைகளில் உதயன் முதல் இடத்தில் நிற்கிறான் என்பது தப்பன்று.

விமர்சனம் ஒரு படைப்பாளியை திறமையுள்ளவனாக மாற்றும் என்பதால் உதயனை விமர்சிக்க வேண்டும்.

உதயனில் செய்தி தலைப்புக்களில் தவறு இருப்பதாக உணர்கிறேன். அண்மையில் யாழ்.குடாநாட்டில் வெளிவரும் பத்திரிகை ஒன்று பத்திரிகை விநியோகத்தில் ஈடுபடும் போது இனந் தெரியாதோரால் வீதியில் வழிமறித்து எரிக்கப்பட்டது. இந்த செய்தியை உதயன் வெளியிட்ட போது ''தப்பியது உதயன் சிக்கியது தினக்குரல்'' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தது.

இந்தத் தலைப்பைப் பார்க்கின்ற போது நகைச்சுவையாக இருக்கிறது. அதன் ஆபத்து தெரியவில்லை. முக்கியமான செய்திகளை வெளியிடும் போது அந்தச் செய்தியின் தலைப்பில் கவனம் இருக்க வேண்டும். அப்பொழுது தான் அந்தச் செய்தி மீண்டும் ஏற்படாத நிலைமையை உருவாக்கும்.

ஏனைய முக்கியமான செய்திகளில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் செய்தி எனது பார்வைக்கு மட்டுமல்ல பலரது பார்வைக்கும் உட்பட்டிருக்கிறது. ஆகவே பலரது கருத்தாக இதனைக் கேட்கிறேன்.

பரந்தாமன்,
**யாழ்.பல்கலைக்கழக மாணவன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலர் தினம்

## பெப்ரவரி 14

## காதல்

## காதல் பயணம்

★ அன்பே
உன் பார்வைதான்
என் காதல் பயணத்தின்
முதல் தொடக்கம்!

★ எந்த பக்கம்
பார்த்தாலும்
என் மீதான
உன் காதலின்
அறிகுறிகள்
ஆதலால்,
நீ வரும் பாதை பார்த்து
தொடங்கி விட்டேன்
என் காதல்
பயணத்தை!

★ வழியில்
பல விசித்திர மனிதர்கள்
பார்வைகள் கேள்விகள் எனினும்,
தொடங்கிய பயணத்தை
பாதியில் நிறுத்த முடியாது
இது நமக்கான
காதல் பயணம் மட்டுமல்ல
வாழ்க்கைப் பயணமும் கூட!

★ தொலைதூர பயணம் தான்
இருந்தும் பரவாயில்லை
தூரம் தெரியாது காரணம்,
உன் நினைவுகள் துணை வருவதால்!

★ எங்கும் நிற்காது செல்லும்
இந்த காதல் பயணம்!

★ இனி, உன்னோடு சேர்ந்து
நானும் வாழ்நாள் முழுவதும்
பயணித்துக் கொண்டே இருப்பேன்!

★ ஏனெனில்,
வாழ்ந்தாக வேண்டுமே
எனக்கான வாழ்க்கையை
உன்னோடு நான்!

எம்.கார்த்திக்



---

*புன்னகை சந்தோஷத்தின்*
*ரகசியம்*
*காதல் அன்பின் சுவாசம்*

*காதலில் விழுந்தேன்*
*விதையாய்*
*சந்தோஷத்தைத் தந்தாய்*
*மழையாய்*
*வளர்ந்தேன் அன்புத் துளியால்*
*உறவானேன் மண்ணுக்கு*
*உயிரானேன் உனக்கு*

*மனதோடு மழைக் காலமாய்*
*என் மனதுக்குள் நீ வந்தாய்*
*அவ் நொடியே விழிகளே*
*பேசியது*
*மொழியாய்...*

*ஓர் இரு வார்த்தைகள் பேசடி*
*என்றாய் ஒரு வார்த்தை*
*கூடப் பேச முடிய வில்லை...*
*உன் அருகில்*
*நான் இருந்த போது...!*

*மௌனத்தைத் தவிர வேறு*
*மொழிகள்*
*தெரியவில்லை*
*உன் விழிகள் பேசியதால்.*

கோ.கிருத்திகா, யாழ்ப்பாணம்.

---

# தெய்வீகக் காதலே வாழ்வில் மலர்ந்திருக்கிறது....



ஒவ்வொரு மனிதனின் தனது வாழ்வில் காதல் இல்லாது விடின் கடல் கூட அடிக்காது பூக்கள் கூட மலராது. நிலவு கூட வானிலே பூக்காது. வண்டு யாழ்.மீட்காது. புனித அன்புள்ளம் கொண்ட உள்ளம் எல்லாம் குரோதங்களுக்கும், வெறிகளுக்கும் ஆட்படாமல் போய்விடும். எனவே காதல் இந்தப் பூமியில் இருந்தால்தான் ஒவ்வொருவனையும் நல் வழிப்படுத்த முடியும்.

காதல் ஒவ்வொரு மனிதனுக்குள்ளே உறையும் போதுதான் அதன் ஆழம், அர்த்தம் புரியும். எடுத்த உடனேயே காதலினை புரிந்து கொள்ள முடியாது. இன்றைய காலகட்டத் தில் பார்வைகள் பலவிதம் ஒவ் வொன்றும் ஒரு விதமாய் அமை கிறது. பார் வைகளின் அர்த்தம் புரிந்து கொள்ள முடியாமலே சில பேரின் காதல் மாண்டு போகிறது. சங்க காலத்தில் இருந்து இற்றை வரை காதல் எனும் அம்சம் இடம் பிடிக்காத இடம் ஒன்று இல்லை. என்பதை நூல்களில் குறிப்பிட்ட விடயங் கள் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது.

சாதி, மத, இன பேதமின்றி முதன்மையாக முன்பே காலடி எடுத்து வைக்கும் இந்தக் காதலை ஏற்றுக் கொள்வது அவசியமே. சாதாரணமாக பிறந்த ஒருவனை கவிஞனாக மாற்றும் காதலால் எத்தனை கவிதைகள் இந்த புவியிலே படைக்கப்படுகிறது. கண்டவுடன் காதல் வளர்வது அவ்வளவு வளர்ச்சியைக் காட்டாது. காதல் காலம் காலமாய் தொடர வேண்டுமாயின் காத்திருப்புக்கள் அவசியமே. காத்திருப்பும் ஓர் சுகம் என்பதை காதல் தானே பிறப்பித்து நிற்கிறது. இறைவனுக்குள்ளே காதல் பிறந்தமையால்தான் அது மனித மனதுக்குள்ளே கடத்தப்பட்டதாகவும் அறிய முடிகிறது. ஆரம்பத்தில் அவதரித்த பெருமைகொண்ட ஆதாம், ஏவாளுக்கு இடையே காதல் இல்லாது விடின் மனித சந்ததிகளே இந்த உலகில் தோன்றி இருக்க முடியாது.

கவிஞர் வைரமுத்து தனது கவிதையில் ஓர் அடியில் சொல்லுவார். "இவ்வுலகம் காற்றால் நிரம்பியிருக்கவில்லை. காதலால் நிரம்பியிருக்கிறது" என்பார். அது உண்மைதான் என்பதை அறிய முடிகிறது. சிலபேர் காதலை காதலும் கத்தரிக்காயும் என திட்டுவர். அந்தக் கத்தரிக்காயும் சந்தைக்கு வருவதற்கான காரணம் கத்தரிச் செடிக ளுக்கிடையே காதல் மலர்ந்தமையை புரிந்து கொள்ள மாட்டாதவர்களாக இருக்கிறார்கள்.

காதல் இல்லாது விடின் இருவர் அணைப்பு இருக்காது. உலக உயிர்கள் தோன்றாது. பரமசிவன், பார்வதி மேல் கொண்ட காதலால் தான் தன் இடத்திலே பாதி இடம் பெண்மைக்கு ஒதுக்கி அர்த்தம் நாரீசுவரராய் தோற்றம் கொண்டார். தெய்வயானையை அருகே வைத்துக் கொண்டும் கூட முருகனவன் வள்ளியை மணம் முடித்தமைக்கான காரணம் என்ன? முருகனின் மனதிலே வள்ளியும், வள்ளியின் மனதிலே முருகனும் நீங்காது இடம் வகித்தமையால் காதலாக மலர்ந்து கல்யாணத்தில் முடிந்து உலகுக்கு எடுத்துக் காட்டாய் அமைந்தது. தன் மனதிலே நினைத்தவருடன்தான் காலம் பூராகவும் வாழ்வேன் எனும் எண்ணத்துடன் எத்தனையோ சோதனைகளைத் தாண்டி சாதனை படைத்து காத்தான் அரியப்பூமாலையை கைப்பிடிக்கிறான். காத்தான் நாடகமே ஒரு காதல் காவியம் ஆகும். இறைவனுக்குள்ளே இப்படிப்பட்ட காதல் அமையும் போது அவனால் படைக்கப்பட்ட உயிர்களிடத்திலே காதல் இருந்தே தீரும்.

காதல் இல்லாது விடின் ஒரு துரும்பு கூட அசையாது. வாழ்வில் காதல் இல்லாது விடின் அவன் வாழ்வு மலராது. திருமணத்துக்கு முன்பு வரும் காதல் பல எதிர்பார்ப்புக் களையும் எதிர்ப்புக்களையும் சந்திப்பது வழமையே. காதலை பற்றி எழுதும் போது வெள்ளம் கரை புரண்டு ஓடுவது போல் சொற்பதங்கள் குவியலாக வந்து சேர்வதற்கான காரணம். எமது வாழ்விலே ஆழமான காதல் மலர்ந்திருக்கின்றது.


எவன் காதலை இரசிக்கின்றானோ அவனது காதல் வாழும் போது மாய்வதில்லை. மாய்ந்த பின்பும் வாழ்கிறது. பத்திரிகையில் கூட காதல் கவிதைகளே ஆக்கிரமிப்பு செய்கிறது. வெள்ளை உள்ளங்களில் பதிந்த காதல் மரணங்களைத் தாண்டி வாழ்கிறது. எந்தவொரு கணவனும் மனைவியின் முந்தானையிலே இரவு, பகலாய் நிலவை காண்பதற்கான காரணம் காதல் குடும்ப வாழ்விலே மலர்ந்திருக்கிறது. காதல் இல்லாது விடின் நான் இல்லை. நீங்கள் இல்லை. ஒட்டுமொத்தமாய் சொன்னால் இந்த பிரபஞ்சமே இல்லை. இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்து ஆழமாக சிந்திக்கும் போது நிறைவான காதல் வாழ்விலே புகுந்திருக்கின்றது என்பதே உண்மையாகும். காதலே வாழ்வை சீர்ப்படுத்துகிறது. வாழ்வுதனை சீர்ப்படுத்தும் காதல் என்றும் வாழும்.

காதலின் இலக்கணத்துக்கு உதாரணமாக லைலா- மயினு, சாஜகான்-மும்தாஜ், தேவதாஸ்-பார்வதி, அனார்கலி-சலீம், அம்பிகாவதி-அமராவதியை குறிப்பிடுவர். எமது சந்ததிகளிலே அப்பப்பாவின் அப்பாவின் பெயரை கேட்டாலே தெரியாது இருக்கும் போது நாங்கள் எங்கேயோ பிறந்து எங்கேயோ வாழ்ந்து எங்கேயோ உயிர்விட்ட உறவுகளை நினைக்கிறோம் என்றால் காதல் மனதிலே ஆழமாக பதிந்திருக்கின்றது என்பதே உண்மையாகும்.

வாழ்க்கைதனை சீராக்கும் காதலே நிறைவாக நிறைந்திருக்கிறது. என்பதை உணர்ந்த உமக்குள்ளே காதலிக்கணும் என்ற உணர்வு உருவாகும். அப்படி உரு வாகும் காதலை தேர்ந்தெடுக்க வேண்டியது. உங்களுடைய விருப்பம் இறுதிவரை உங்களின் வாழ்விலே நிலைக்க வேண்டுமாயின் அதற்கேற்ற விதத்தில் காதல் செய்ய வேண்டியது அவசியமே. எந்தத்தருணத்திலும் உயிரை விட துணியக் கூடாது. அதற்கேற்ற நிலையில் நாயகனையோ, நாயகியையோ காதல் செய்து வாழும் வாழ்விலே கவலைகளை மறந்து சந்தோஷ வானிலே சிறகடித்து பறவுங்கள்.

வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணிபூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ரஜி

# நத்தைகள் மூலம் வானிலை நிலவரத்தை அறியலாம்

வானிலை நிலவரத்தை முன்கூட்டியே தெரிவிப்பதில், நத்தைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று லண்டன் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். லண்டனின், யார்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் ஆன்ட்ரி கர்லோ இதுகுறித்து கூறியதாவது:

ஒரு தாவரத்தையோ அல்லது கற்பத்தையோ நோக்கி நத்தை நகருகிறது என்றால், நிச்சயமாக மழை வரப்போகிறது என்று கருதலாம். வானிலையில் ஏற்படும் மாறுபாடுகளைத் தெரிவிப்பதில் நத்தைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மத்திய தரைக் கடல் நாடுகளின் பகுதிகளில் உள்ள குகைகளில் கண்டறியப்பட்ட நத்தைகளின் ஓடுகளைப் பரிசோதனைக்கு எடுத்துக் கொண்டதில், அவை பல்வேறு காலகட்டத்தில், ஈரப்பதத்துடன் இருந்தது தெரியவந்தது.

இத்தாலி மற்றும் ஸ்பெயின் நாடுகளில், விவசாயிகள் முதன் முறையாக கால் பதித்தபோது, அங்கு, தற்போது உள்ளது போல், அவ்வளவு வெப்பம் மிகுந்த பகுதிகளாக இல்லை. மாறாக, மிதமான சூழல்தான் நிலவிவந்தது. மத்திய தரைக் கடல் நாடுகளின் பெரும்பாலான பகுதிகளில், நத்தைகளின் ஓடுகளைக் காண முடிந்தது. நிலத்தில் வாழும் நத்தைகள், மனிதர்களின் குணாதிசயங்களை தெரிவிப்பவையாகவும் உள்ளன

ஸ்பெயின் மற்றும் இத்தாலியில், நத்தைகளை பல்வேறு காலகட்டங்களில் ஆய்வு செய்ததில், அவை வெவ்வேறு விதமான வானிலை நிலவரத்தை தெரிவிப்பவையாக இருந்தன. இந்தச் சோதனையின் மூலம், ஒவ்வொரு பகுதியிலும் ஏற்படும் வானிலை மாறுபாடுகளையும் நத்தைகளால் தெரிவிக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தோம். இவ்வாறு ஆன்ட்ரி கர்லோ கூறினார். ★

ஸ்பெயின் மற்றும் இத்தாலியில், நத்தைகளை பல்வேறு காலகட்டங்களில் ஆய்வு செய்ததில், அவை வெவ்வேறு விதமான வானிலை நிலவரத்தை தெரிவிப்பவையாக இருந்தன. இந்த சோதனையின் மூலம், ஒவ்வொரு பகுதியிலும் ஏற்படும் வானிலை மாறுபாடுகளையும் நத்தைகளால் தெரிவிக்க முடியும்

# நான்கு புறமும் திரும்பும் ஆந்தையின் கழுத்தின் ரகசியம்

ஆந்தை தன் கழுத்தை நாலாபுறமும் எப்படித் திருப்புகிறது எப்படி என்ற கேள்விக்கு, அமெரிக்க விஞ்ஞானிகள் விடை கண்டுள்ளனர்.

இரவில் வேட்டையாடும் பறவையான ஆந்தை, தன் கழுத்தை, 270 டிகிரி வரை திருப்பும் அபூர்வமான திறமை கொண்டது. இதே அளவுக்கு மனிதன் தன் கழுத்தைத் திருப்பினால், குருதி நாளங்களில் பாதிப்பு ஏற்பட்டு ஆபத்தான நிலை ஏற்படும். இதுதொடர்பாக ஆராய்ச்சி செய்த அமெரிக்காவின், 'ஜான்ஸ் ஹாப்கின்' பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், ஆந்தையின் அபூர்வ சக்தி பற்றிய இரகசியத்தை கண்டறிந்துள்ளனர்.


இறந்த ஆந்தைகளைப் பரிசோதனைக்கு எடுத்துக் கொண்ட ஆராய்ச்சியாளர்கள், ஆந்தையின் தலையை கைகளால் நன்கு திருப்பி சோதனை செய்தபோது, அதன் தலையின் அடியில், தாடை எலும்புக்கு சற்றுக் கீழே உள்ள குருதி நாளங்கள் விரிவடைவது தெரிய வந்தது. இதன்மூலம் ஆந்தைகளின் கழுத்து அதிகபட்சம் திரும்புவதால், அவற்றின் குருதி நாளங்களில் பாதிப்பு ஏற்படுவதில்லை என்பதுடன், அதிகளவில் நாளங்களில் தேங்கும் இரத்தம், அளவில் பெரிதான அவற்றின் மூளை மற்றும் கண்களின் செயற்பாட்டுக்கு பெரியளவில் உதவுவது தெரிய வந்துள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பு மூலம், விபத்துகளில் சிக்கி கழுத்து முறிவு போன்ற பாதிப்புகளை எதிர் கொள்ளும் மனிதர்களுக்கு, சிகிச்சை அளிப்பதில் முன்னேற்றம் ஏற்படும் என, ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். ★

- மபூ



# கிரையோஜெனிக் ரொக்கட் இயந்திரம் குறித்து அறிந்து கொள்ளுங்கள்



வலையவன்

ரொக்கெட்டும் ஒரு வாகனமே. அது செயற்கைக் கோளை சுமந்து உயரே கொண்டு செல்கிறது. எனவே செயற்கைக் கோளைச் செலுத்தும் ரொக்கெட்டுகளுக்கு செயற்கைக்கோள் செலுத்தும் வாகனம் என்ற பொதுப் பெயர் உண்டு. ரொக்கெட்டுக்குள் வைக்கப்படுகின்ற எரிபொருள் உச்ச வேகத்தில் பின்புறம் வழியே தீப்பிழம்பை பீச்சிடுவதால் முன் நோக்கி அதாவது உயரே பாய்கிறது. எந்த எரிபொருளானாலும் அது எரிவதற்கு ஒட்சிசன் தேவை. கார், லொறி போன்று தரையில் செல்கின்ற வாகனங்களுக்கும் சரி, வானில் செல்லும் விமானங்களுக்கும் சரி, காற்று மண்டலத்திலிருந்து ஒட்சிசன் இயற்கையாகக் கிடைக்கிறது. ஆனால் ரொக்கெட்டானது மிக உயரே செல்வதாகும். அந்த உயரத்தில் காற்று (ஒட்சிசன்) அதிகமாக இருக்காது.

எனவே ரொக்கெட்டில் உள்ள எரிபொருள் எரிவதற்கு உதவக்கூடிய ஒட்சிசன் அடங்கிய பொருளையும் சேர்த்து ரொக்கெட்டில் வைக்க வேண்டியுள்ளது. பல வேதியல் பொருள்கள் இவ்விதம் ஒட்சிசனை அளிக்கக்கூடியவை. செயற்கைக்கோளைச் செலுத்துகின்ற ரொக்கெட்டில் ஒட்சிசனும் அடங்கிய திட எரிபொருளை மட்டும் வைக்கலாம். அல்லது திரவ எரிபொருளையும் அது எரிவதற்கு உதவும் ஒட்சிசன் அடங்கிய பொருளையும் வைக்கலாம்.

ஹைதரசன் வாயுவையும், ஒட்சிசன் வாயுவையும் பயன்படுத்துகின்ற ரொக்கெட்டாக இருந்தால் அது அதிக உந்து விசையை அளிக்கும். எனவே அதிக எடை கொண்ட செயற்கைக்கோளை சுமந்து செல்ல முடியும். ஆனால் ரொக்கெட்டில் தனித்தனி டாங்கிகளில் ஹைதரசன் வாயுவையும் ஒட்சிசன் வாயுவையும் எடுத்துச் செல்வதானால் பெரிய பெரிய டாங்கிகள் தேவைப்படும். அப்படியான டாங்கிகளைக் கொண்ட ரொக்கெட்டை உயரே கிளம்பச் செய்வதே கடினம்.

எனினும் ஹைதரசன் வாயுவை மைனஸ் 253 டிகிரி செல்சியஸ் அளவுக்குக் குளிர்வித்தால் அது திரவமாகி விடும். அதே போல ஒட்சிசன் வாயுவை மைனஸ் 184 டிகிரி செல்சியஸ் அளவுக்குக் குளிர்வித்தால் அதுவும் திரவமாகி விடும். ரொக்கெட்டின் முன்புறத்தில் தனித்தனி டாங்கிகளில் இந்தத் திரவங்களைச் சேமித்து வைக்க முடியும். ரொக்கெட் உயரே செல்கையில் இந்த இரண்டும் ரொக்கெட்டின் கீழ்ப்புறமுள்ள இஞ்சின் அறையில் வாயுவாக மாறி ஒன்று சேர்ந்து எரிந்து நல்ல உந்து விசையை அளிக்கும்.

கடும் குளிர் நிலையில் உள்ள திரவங்களைப் பயன்படுத்தும் துறைக்கு கிரையோஜெனிக் என்று பெயர்.

இது கிரேக்க மொழிச் சொல். எனவே இவ்விதமான குளிர் நிலை திரவங்களைப் பயன்படுத்தும் ரொக்கெட் எஞ்சினுக்கு கிரையோஜெனிக் ரொக்கெட் எஞ்சின் என்று பெயர். ★

எந்த எரிபொருளானாலும் அது எரிவதற்கு ஒட்சிசன் தேவை. கார், லொறி போன்று தரையில் செல்கின்ற வாகனங்களுக்கும் சரி, வானில் செல்லும் விமானங்களுக்கும் சரி, காற்று மண்டலத்திலிருந்து ஒட்சிசன் இயற்கையாகக் கிடைக்கிறது. ஆனால் ரொக்கெட்டானது மிக உயரே செல்வதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய் நன்மையும் தீமையும் செய்யும்



சிறியோர் முதல் பெரியோர் வரை பொய்களைக் கூறுகின்றனர். பிள்ளைகள்- பெற்றோர்கள், கணவன்- மனைவி, மாணவன்- ஆசிரியர், மேலதிகாரி- ஊழியர் எனப் பலதரப்பட்டவர்களும் சந்தர்ப்பம் வரும்போது பொய்களைக் கூறுகின்றனர். மனதுக்கு எது உண்மையோ அதற்கு மாறாக இருப்பது பொய்யாகும். பொய்கள் நன்மையையும் செய்யும். தீமையையும் செய்யும். இரண்டையும் செய்யக்கூடுமாயின் சந்தர்ப்பத்தைப் பொறுத்து நன்மை, தீமை கணிக் கப்படும்.

பொய்யாக இருந்தாலும் பொய் சொல்லுகின்ற வேளை சிலர் தேவைக்கேற்ப முன்னரே தம்மைத் தயார்படுத்திக் கூறுவார்கள். சிலர் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஆயத்தமற்ற நிலையில் பொய் கூறுவார்கள்.

பொய் ஒருவரைத் தப்பவும் வைக்கும். ஆபத்திலும் சிக்க வைக்கும் பொய்களைக் கூறும்போது மனதிற்கு குழப்பமாக பயமாக இருக்கும். கூறிய பின்னரும் பொய் கண்டுபிடிக்கப்பட்டால் என எண்ணும்போது மன உளைச்சல், நித்திரையின்மை, பசியின்மை, தனிமை ஒரே பக்க யோசனை ஏற்படும். பொய் சொல்பவர்களுடன் சேர்பவர்களும் பொய் சொல்லப் பழகுவார்கள். தீய நடத்தைகளுக்கான ஒரு தூண்டியாகவும் இது அமையும்.

> மனதுக்கு எது உண்மையோ அதற்கு மாறாக இருப்பது பொய்யாகும். பொய்கள் நன்மையையும் செய்யும். தீமையையும் செய்யும். இரண்டையும் செய்யக்கூடுமாயினும் சந்தர்ப்பத்தைப் பொறுத்து நன்மை, தீமை கணிக்கப்படும்.

ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணத்தை ஒப்பேற்றுவர். ஆயிரத்தில் ஒரு பொய்தானும் வெளிச்சத்துக்கு வருமாயின் திருமணம் மணமுறிவடையும் சந்தரப்பம் ஏற்படும். உதாரணமாக இளவட்டங்களில் ஒருவன் தனது நண்பனைப் பார்த்து அவள் உன்னைத் தான் பார்க்கிறாள் என ஒரு பொய்யைக் கூறினால், அவன் அன்றுமுதல் அவளின் சம்பளமற்ற பாதுகாவலனாக மாறுகின்றான்.

அது மட்டுமல்ல பொய்களால் பெரும் பிரச்சினைகள் குடும்பத்தில், வேலைத்தளங் களில், பொதுவிடயங்களில், பாடசாலை களில் தோன்றுகின்றன. பொய்யை மறைத்து வைப்பது கடினம். இதனை வள்ளுவர்

***''முகத்தின் முதுக் குறைந்தது உண்டோ உவப்பினும் காயினும் தான் முந்துறும்''***

அதாவது முகத்தைக் காட்டிலும் அறிவால் மிக்கது வேறு யாதும் உண்டோ? உள்ளம் மகிழ்ந்தாலும், சினந்தாலும், தான் முந்திக் கொண்டு அதனை வெளியே காட்டி விடும்.

பொய்கள் தற்காலிக சுகத்தை மட்டும் தரும். உண்மைதான் நிரந்தரமானது. பொய்கள் சுமையானது, சுவையானதாகக் கருதக் கூடாது. நிரந்தரமான சுகத்தைத் தரும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

அதேவேளை பொய்கள் இன்பம் தரக் கூடியவை. சுகம் தான் வாழ்க்கைக்குத் தேவையானது. இதைத்தான் மக்கள் தொலைத்து விட்டு தேடுகின்றனர். பல உண்மைகளை மறைப்பதால் தான் உறவுகள் பலப்படுத்தப்படுகின்றன. பாதிப்பில்லாத வகையில் சில காரியங்கள் நிறைவேறுகின்றன. பாதிப்பற்ற வகையில் மனதில் நிம்மதி தோன்று கின்றது.

நல்லதுக்குப் பொய் கூறலாம். இதனை வள்ளுவர்,

***''பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்''***

என்றார். அதாவது குற்றமே இல்லாத நன்மையைத் தருவது என்றால் பொய்யான சொற்களும் கூட வாய்மையின் இடத்தில் வைத்து சிறப்பாகக் கருதத் தகுந்தவை ஆகும்.

**சி.நற்குணலிங்கம்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர், கரவெட்டி.**

# புத்தகசாலை

## நூல்: "காத்திருப்பு"




''காத்திருப்பு'' எனும் நாடகத் தொகுப்பு நூல் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலத் துறையில் இரண்டாம் வருடம் முகிழ் நிலை ஆசிரிய மாணவியான கு.துஷாந்தினியால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது.

எமது சமூகத்தில் நாடகக் கலை பெரும் பங்கை வகிக்கிறது. திரைப்படங்கள் வருவதற்கு முன்னர் நாடகங்கள் எமது மண்ணில் பிரசித்தி பெற்றிருந்தன. நாடகக் கலை தான் திரைப் படங்கள் வெளிவருவதற்கு முதற் காரணமாக இருந்தது. அந்த வகையில் நாடகக் கலைக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு.


அந்த வகையில் இந்த நாடகத் தொகுப்பில் சமூகத்தில் நிலவும் சில முக்கிய பிரச்சினை களை துஷாந்தினி உள்வாங்கி இருக்கிறாள்.

அதாவது எமது நாட்டில் நிலவும் சிறுவர் துஷ்பிரயோகம், மனித நேயம், போரின் தாக்கம் என்பவற்றைக் கருவாகக் கொண்டு எழுதியுள்ளார்.

இந்நூல் நாடகத்துறை சாய்ந்த அறிவை மட்டுமன்றி மொழியை கையாளும் ஆற்றலையும் புலப்படுத்தி நிற்கிறது.

*பிறைவாணன்*

## நூல்: "திரிகோண கணிதம்"




கணித உசாத்துணை நூலான ''திரிகோண கணிதம்'' இலங்கையில் புகழ் பெற்ற கணித உசாத்துணை நூலாசிரியரும் கணிதப் பாட வளவாளருமான எஸ்.நஸீரினால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. கல்வி அமைச்சினதும், தேசிய கல்வி நிறுவனத்தினதும் அனுசரணையுடன் மறு சீரமைக்கப்பட்ட புதிய பாடத் திட்டத்தின் கீழ் முதல் நூலாக இந்த நூல் இடம் பிடித்துள்ளது.

இணைந்த கணிதம் I,II ஆகிய பரந்த பாடத்திட்டத்திலே 70% ஆளுமை செலுத்தும் ஒரே பாட விடயமானது திரிகோண கணிதமே. இதற்கிணங்க இந்த நூலில் ஒவ்வொரு தலைப்பு விடயமும் மிக நுட்பமாக ஆராயப்பட்டுள்ளது.

உதாரணங்களுடனும் விளங்கங்களுடனும், பயிற்சிகள், ஆய்வுகள், கணிப்பீட்டுப் படிவங்கள், பரீட்சை வினாக்கள், விடைகள் என்று ஆராயப்பட்டு 265 பக்கங்களைக் கொண்டுள்ளது.

*கேதுஜன்*

## நூல்: உற்பத்தி செலவுக் கோட்பாடுகள்




நிறுவனங்களின் அளவு அல்லது அவர்கள் எதை உற்பத்தி செய்கிறார்கள் என்பது முக்கியமல்ல. எவ்வளவு உற்பத்தி செய்வது? அதனை எப்படி உற்பத்தி செய்வது? என்பதை எல்லா நிறுவனங்களும் கட்டாயம் தீர்மானிக்க வேண்டும்.

இந்தத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக உற்பத்திச் செலவு பற்றிய அறிவு அவசியமாகிறது. இதனை மையமாகக் கொண்டு 'உற்பத்திச் செலவுக் கோட்பாடுகள்' எனும் தலைப்பில் ஆசிரியர் வே.கருணாகரன் இந்நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

சாதாரண உயர்தர பொருளியல் பாடக் கட்டமைப்பு வினாக்களிலும், பல்தேர்வு வினாக்களிலும் அண்மைய ஆண்டுகளில் முக்கியத்துவம் பெற்றுள்ள பகுதி உற்பத்தி மற்றும் செலவுக் கோட்பாடுகளாகும்.

2012 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத் திட்டத்துக்கு அமைய இந்த நூல் உற்பத்திக் கோட்பாடு, செலவுக் கோட்பாடு ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கேற்ப அட்டவணைகள், விளக்கப்படங்கள், சுருக்கக் குறியீடுகள், கணிப்புகள், வேறுபாடுகள், வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

மீட்டல் மற்றும் பரீட்சைக்கு தயார்ப்படுத்தல் என்பவற்றுக்காக விடயரீதியில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு வினாக்கள் மற்றும் MCQ அதன் விடைகள் என்பன இறுதியில் சேர்க்கப்பட்டு இந்நூல் வெளிவந்திருக்கிறது.

*செல்வா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிக்குப் பழி

பழிக்குப் பழி!

இரத்தத்துக்கு இரத்தம்!'

இவை எல்லாம் எமக்கு மிகவும் பழகிப்போன வார்த்தைகள் தான்.

காலம் இவ்வாறு ஆகிவிட்டது.

மனிதனின் உயிருக்கு விலை இப்பொழுது மிகவும் குறைந்து விட்டது ! மிருகங்கள் கூட ஒன்றுடன் ஒன்று துப்பாக்கியால் சுட்டுக் கொள்வதும் இல்லை.

கத்தியால் குத்திக் கொள்வதும் இல்லை.

ஆனால் மனிதன் ஒருவனை ஒருவன் சுடுகின்றான், ஒருவனை ஒருவன் கத்தியால் குத்துகின்றான்!

ஒரு மிருகத்திடம் இருந்து மனிதனை காப்பாற்றிக் கொள்வது என்பது சுலபமான விடயம்.

ஆனால்... ஒரு மனிதனிடம் இருந்து ஒரு மனிதனைக் காப்பாற்றிக் கொள்வது என்பது மிகவும் கஷ்டமான விடயமாக மாறிவிட்டது.

மனிதன் எந்த நேரத்தில் என்ன செய்வான் என்று யாராலும் சொல்ல முடியாது.

பிறக்கும் போது நன்றாக இருக்கின்ற மனிதன் போகப் போக ஏன் இவ்வாறு ஆகின்றான் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

இதுபற்றி சிறிது பொறுப்பாக சிந்தித்துப் பார்த்தால்.... வளர்கின்ற முறை,வளர்க்கின்ற முறை இவையெல்லாம்தான் இதற்குக் காரணமாக அமைகின்றன போல உள்ளது.

சிறிது நாள்களுக்கு முதல் ஒரு கதைப் புத்தகத்தை வாசித்தேன். அது தரம் ஒன்றுக்கான புத்தகம் என்று நினைக்கின்றேன். அதில் ஒரு படத்தைப் பார்த்தவுடன் எனக்கு அதிர்ச்சியாகிவிட்டது.

ஏன் என்றால்...

அதில் வர்ணங்களைப் பற்றி, அதாவது நிறங்களைப் பற்றி கற்றுக் கொடுக்கின்ற படம் இருந்தது..

இலையின் நிறம் பச்சை என்று எழுதியிருந்தது.

பக்கத்தில் பச்சை நிறத்தில் இலையின் படம் போடப்பட்டிருந்தது.

இது சரியான விடயம்தான். அடுத்ததாக...

இரத்தத்தின் நிறம் சிவப்பு என்று போடப்பட்டிருந்தது! அதற்குப் பக்கத்தில் ஒரு படம் போடப்பட்டிருந்தது அது என்ன என்றால்.. ஒரு கைவிரலை ஒரு கத்தி வெட்டுகின்றது! அதிலிருந்து சிவப்பாக இரத்தம் வடிகின்றது.

சிவப்பு நிறம் எவ்வாறு இருக்கும் என்று சிறிய பிள்ளைகளுக்கு இந்த விதத்தில் கற்றுக் கொடுக்கிறார்கள்.

சிறிது சிந்தித்துப் பாருங்கள்!

பிஞ்சு மனதில் நஞ்சை தெளிக்கின்றோம் என்பது இதிலிருந்து புரியும்.

அந்தப் படத்தைப் பார்க்கின்ற சின்னப் பிள்ளைகள் சிவப்பு நிறம் எவ்வாறு இருக்கும் என்று தெரிந்து கொள்வதை விட சிவப்பு நிறத்தைப் பார்க்க வேண்டும் என்றால்.. கத்தியால் விரலை வெட்டலாம் என்றுதான் அதிகமாக தெரிந்திருக்கும்!

அவன் வளர்ந்து பெரியவனானவுடன் கத்தியைத் தூக்க மாட்டானா?

இதை விட நாங்கள் இன்னும் சிறிய பிள்ளைகளுக்கு தீமை செய்கின்றோம் எப்படி என்றால்...

பிள்ளைகளுக்கு விளையாட்டுத் துப்பாக்கியை வாங்கிக் கொடுத்து வேடிக்கை பார்க்கின்றோம்!

''சுடுடா கண்ணா'' என்று சொல்லி அதைக் கொடுக்கின்றோம்.

தீபாவளி வந்துவிட்டால், எத்தனை குழந்தைகள் விளையாட்டுத் துப்பாக்கியும் கையுமாகத் திரிகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

அவன் வளர்ந்து பெரியவனாக.ஆனவுடனே தைரியமாக துப்பாக்கியைத் தூக்க மாட்டானா?



சிறிய பிள்ளைகளுக்கு வீரத்தை ஊட்டுவது தவறு இல்லை. ஆனால் வெறியை ஊட்டுவது தான் தவறு. விளையாடுவதற்காக குழந்தைகளுக்கு பொம்மைகள் வாங்கிக் கொடுத்தால்கூட சிறிது விபரத்துடன் வாங்கிக் கொடுக்க வேண்டியது பெரியவர்கள் பொறுப்பு ஆகும்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# வாசகர் திருமுகம்

## காதலுக்காக உயிரை மாய்க்காதீர்கள்!

நேற்று வரை ஒரு மூலையில் இருந்த கந்தையாவின் பிள்ளை, பல்கலைக்கழகத்தினுள் புகுந்தால், அது எம் தமிழரின் சொத்தாகி விடுவதை நாமோ அல்லது அந்தப் பிள்ளையோ உணர்வதில்லை.

ஏழைப் பெற்றோர்கள் பட்ட கஷ்டம் படிப்புக்குச் செலவழித்த செலவு, பிள்ளை உழைத்த உழைப்பு என்பவற்றை நாம் நினைத்துப் பார்க்கிறோமா?

அண்மையில் பத்திரிகையில் செய்தி பார்த்தேன். அதி உயர் கல்விச் கூட்டிகளில் ஒன்று, கருகி அழித்ததாம் தன்னுயிரை. அழகுப்பதுமை ஒன்று அவலமாய் மாண்டது. இந்தநிலை தொடரவேண்டாம்.

தனிமனித ஆசாபாசங்கள், குறிப்பாகக் காதல்... பல்கலையில் புகுந்தோருக்கு வரவே கூடாது. வந்தாலும் எங்கள் தேசத்தின் சொத்துக்கள் என்பதால் ,காதல் தோல்வியால் தங்களை அழிக்கக் கூடாது. தமிழரின் இறுக்கமான சமூகக் கட்டமைப்பு ஒழுக்க விழுமியங்கள் இவை இன்று அருகியிருந்தாலும்... அவற்றின் மேலாக சீர், தனக் கவர்ச்சி உங்கள் காதலைச் சாகடிக்கிறது. உயிரை மாய்த்துக் கொள்வது உங்கள் பெற்றோருக்கு குறிப்பாக எம் தேசத்துக்குச் செய்யும் துரோகம் என்பதை உங்கள் சிந்தனையில் கொள்ளுங்கள்.

**பொதுமகன், ஊரெழு.**

## கண்ணீரைத்துடைக்க முன்வரவேண்டும்

நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சை முடிவு வெளிவந்துவிட்டன. வாழ்க்கையின் திருப்புமுனைகளை பரீட்சை முடிவுகள் வெளிக்கொணர்கின்றன. மூன்றாண்டுகளாக முயற்சியுடன் படித்து மூன்று மணித்தியாலங்கள் பரீட்சை எழுதி தற்போது முடிவுகள் வெளிவந்து விட்டன.

பல்கலைக்கழகத்தை எதிர்பார்த்து அவன் படிக்கவில்லை. ''உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து விட்டேன்'' என்று சமூகத்துக்கு சொல்வதற்கே அவன் விரும்பினான்.

அவன் வீட்டில் வறுமையைக் காரணம் காட்டி தனியார் கல்வி நிறுவனங்கள் அவனை விரட்டி விட்டன. சமூகத்தில் பல்வேறு வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே அவன் படித்தான். ஆனாலும் பரீட்சையில் சித்தியடையவில்லை. அவனுடைய கண்ணீரில் தாய், தந்தையரின் கண்ணீரும் சேர்ந்து கொள்கிறது.

பரிகாரம் ஒன்று அனைத்துக்கும் இருக்க வேண்டும். பிராயச்சித்தம் ஒன்று இல்லை என்று எதுவுமே இல்லை. உயர்வடைந்தோரின் வெற்றியைக் கொண்டாடும் உலகம் தாழ்ந்துவிட்ட மனிதர்களின் கண்ணீரையும் துடைக்க முன்வரவேண்டும்.

மாணவச் செல்வங்களின் கல்வியில் இதுவரை காட்டிய அக்கறை தொடரவேண்டும். ஆனந்த நிலையைக் காண வேண்டும். கற்றோர் கடமை தமது அறிவை இளைய [illegible]பதே!

**[illegible], ஆசிரியர், சாவகச்சேரி.**

## பிள்ளைகளை எப்படி கட்டுப்படுத்துவது?

இந்தக் காலத்துப் பிள்ளைகள் பெற்றோரின் சொல்லைக் கேட்பதில்லை. இதனால் பிள்ளைகள் சமூகத்தில் பல பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றனர். பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி வளர்க்காத காரணத்தால் தான் பிள்ளைகள் பெற்றோரின் சொல்லைக் கேட்பதில்லை என்று சொல்லுகின்றனர்.

பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதால் பிள்ளைகள் பல பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்... அதாவது கட்டுப்படுத்தாமல் பிள்ளைகளை அவர்களின் இஷ்டப்படி விட்டால் அவர்களுக்கு எது நல்லது, எது கெட்டது என்று தெரிய வாய்ப்பிருக்காமல் போய்விடும். எனவே பிள்ளைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பெற்றோர்களின் கட்டுப்பாட்டில் வளரும் பிள்ளை சமூகத்தில் சிறந்த பிள்ளையாக வளர வாய்ப்பிருக்கிறது. பெற்றோர்களின் கட்டுப்பாடு இல்லாமல் வளரும் பிள்ளைகள் நல்லதை, கெட்டதை தாமே தீர்மானிக்கும் சக்தி இருந்தால் அந்தப் பிள்ளைகளும் சமூகத்தில் சிறந்து விளங்குவர்.

எனவே பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவது என்பது பிள்ளைகளைப் பொறுத்து இருக்கிறது. பிள்ளைகளின் செயற்பாட்டினை பெற்றோர்கள் அவதானித்து வந்தால் அவர்களை கட்டுப்படுத்த வேண்டுமா, வேண்டாமா? என்பது புரிய வரும்.

இல்லாது போயின், அதாவது பிள்ளைகளின் செயற்பாடுகளை அவதானிக்க முடியாது போயின் பெற்றோர்களால் பிள்ளைகளை ஒரு போதுமே கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என்பது உண்மை.

பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் கூடுதலான அனுமதியை கொடுக்கும் போது பிள்ளைகள் வழி தவறிச் செல்வதற்கான காரணங்கள் நிறைய உள்ளன. கட்டுப்பாடற்ற முறையில் அனுமதியைப் பிள்ளைகளுக்கு வழங்குவது அவர்களின் எதிர்காலத்தையும் கேள்விக்குறிக்கு உள்ளாக்கிவிடும்.

இதனால் பிள்ளைகள் தாம் நினைத்தபடி சில முடிவுகளை எடுத்து செயற்படுவார்கள். இதன்காரணமாக அந்த செயற்பாட்டில் என்ன விளைவு ஏற்படும் என்று தெரியாமல் இருப்பதால், பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழலும் ஏற்படும்.


எனவே பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி வளர்ப்பது அவர்கள் சமூகத்தில் சிறப்புடன் வாழ வழி சமைக்கும். இதன் மூலம் எதிர்காலத்தில் பெயர் சொல்லும் பிள்ளையாக வெளிப்படும் போது அந்தச் சமூகமும் முன்னேற்றப்பாதையில் செல்லும்.

சிந்தித்துச் செயலாற்றும் திறமையை கட்டுப்படுத்துவதன் மூலம் பிள்ளைகளில் தேவையற்ற தாக்கங்களைக் காணமுடியும். அவர்களாகவே வாழ்வில் சிறந்த முடிவெடுக்கக் கூடிய நடுவர்களாகவும் திகழுவர். எனவே பிள்ளைகளின் செயற்பாட்டைக் கண்காணித்து பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதே சிறந்தது.

**கண்ணன், பொலிகண்டி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்பாய் இருந்தால் ஆபத்தைத் தவிர்க்கலாம்



ஒரு நாட்டில் வயது முதிர்ந்த சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தச் சிங்கத்தால் இப்போது மிருகங்களை வேட்டையாட முடியாது. எனவே அது பசியால் வாடியது. அந்தச் சிங்கம் ஒரு குகைக்கு அருகே வந்தது.

குகை வாயிலில் எலும்புத் துண்டுகளைக் கண்டது. அத்துடன் மிருகம் ஒன்றின் கால் அடையாளங்களையும் கண்டது. தான் அதற்குள் ஒழித்திருந்து, மாலையானதும் அந்தக் குகைக்குள் வசிக்கும் மிருகத்தைப் பிடித்து உண்ணலாம் என்று சிங்கம் நினைத்தது.



மாலை ஆனதும் அந்தக் குகைக்குள் வசிக்கும் நரி வந்தது. மிகப் பெரிய மிருகம் ஒன்றின் கால் தடங்களைக் குகை வாசலில் கண்டது.

முதலில் திகைத்து நின்றது. பின்னர் அமைதியாக சிந்தித்தது. குகையாரே! நான் நரி வந்திருக்கின்றேன். உள்ளே வரலாமா? என்று கேட்டது. குகை பேசவில்லை. குகையாரே! நீர் பேசாமல் இருந்தால் நான் திரும்பிச் சென்று விடுவேன் என்று கூறித் திரும்பியது. குகைக்குள்ளே இருந்த சிங்கம் "நான் இருக்கும் குகை பேசும் போல் இருக்கின்றது. நான் இங்கே இருப்பதால் தான் இப்போது பேசாதிருக்கின்றது" என்று நினைத்தது. நரியாரே! நில்லுங்கள் நீங்கள் தாராளமாக உள்ளே வரலாம் என்று கூறி கர்ச்சித்தது. குகையின் உள்ளே சிங்கம் இருப்பதை நரி அறிந்து கொண்டது. தப்பினேன் பிழைத்தேன் என்று ஓட்டம் பிடித்தது.

சி.சுவேத்தா, தரம் 5 எப்
யாழ்.புனித ஜோன்பொஸ்கோ வித்தி.

# உலகப் பெருஞ்சுவர்



உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் கி.மு. 220-200 காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டது. இந்தப் பெருஞ்சுவர் சீனாவின் வடக்கு எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. சீனப் பெருஞ்சுவர்க் கட்டுமானப் பணியின் போது 20 -30 லட்சம் சீனக் குடிமக்கள் தமது உயிர்களைத் துறந்தனர்.

உலக அதிசயமான சீனப் பெருஞ்சுவர் 6400 km நீளத்தைக் கொண்டுள்ளது. சீனப் பெருஞ்சுவர் கட்டுமானப் பணிகள் முடிந்த பின்னர் சீன நாட்டின் பாதுகாப்பிற்காக 10 லட்சம் படையினர் அந்தச் சுவரில் காவலில் ஈடுபடுத்தப்பட்டனர்.


செங்கல், சுண்ணாம்பு, ஓடு, கருங்கல் போன்ற பொருள்களைக் கொண்டே இந்தச் சீனப் பெருஞ்சுவர் நிர்மாணிக்கப்பட்டது. சந்திரனில் இருந்து பார்க்கும் போது தெரியும் ஒரே ஒரு மனிதப் படைப்பு எனும் பெருமை சீனப் பெருஞ்சுவரையே சாரும்.

பதினொரு மாகாணங்களை உள்ளடக்கி இந்தப் பெருஞ்சுவர் கட்டப்பட்டுள்ளது. அன்று தொட்டு இன்று வரை சீனப் பெருஞ்சுவரை அதிகளவான சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டுச் செல்வது இதில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

உலகில் ஆகக்கூடிய சனத்தொகையைக் கொண்டுள்ள சீனாவில் மன்னராட்சி காலத்தில் அமைக்கப்பட்ட பெருஞ்சுவர் இன்றும் பாதுகாக்கப்படுகிறது.

சே.வித்யாசாகர்
தரம்-9 டி, கிளிநொச்சி ம.வி.

# சுவாமி விவேகானந்தர்





சுவாமி விவேகானந்தர் விசுவநாததத்தருக்கும் - புவனேஸ்வரி அம்மையாருக்கும் 1863 தை 12 ஆம் திகதி பிள்ளையாகப் பிறந்தார். இவரது இளமை நாமம் நரேந்திரன். இவர் நரேன் எனச் செல்லமாக பலராலும் அழைக்கப்பட்டார். அத்துடன் நவயுக சங்கரர் எனவும் அழைக்கப்பட்டார்.

இவர் வங்காளம், ஆங்கிலம், உபநிடதம், மேலைநாட்டு தத்துவம் என்பவற்றை நன்கு கற்றுத் தேர்ந்தவர். சுவாமியின் சமய, சமூக சிந்தனைகள் இந்து சமயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

சமயம் என்பது உயர்ந்த பண்பாடு என்றார். இறைவனின் ஆற்றலை உணரவும், உணர்ந்தபடி ஒழுகவும் மனித இனமே சரியானதும், பூரணமானதும் என்பது இவரது கருத்து.

பொதுவாக மனிதன் எந்த மதத்தையும் அனுஷ்டிக்கலாம். அவனிடம் பக்தியும், சிரத்தையும் இருப்பின் அவன் இறைவனை அடையலாம் என்ற கருத்தை வெளியிட்டார். சமயம் வாழ வேண்டுமானால் சமூகம் வாழ வேண்டும் என்றார். கடவுளை அவரவர் அனுபவத்தால் தான் கண்டுகொள்ள முடியும் என்றார். பசியுள்ளவனுக்கு சமயத்தை போதியாதே. தெய்வங்கள் ஆகுங்கள். பிறரை தெய்வங்கள் ஆக்குங்கள் எனப் போதித்தவர். இவ்வாறு சிறந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இவரிடம் தேசபக்தி நிறைந்திருந்தது. நேருஜி, காந்திஜி, ராஜாஜி என்போரின் வணக்கத்துக்கும் வாழ்த்துக்கும் உரியவராக விளங்கியவர். 1893 செப்ரெம்பர் 11 ஆம் திகதி சிக்காக்கோ நகரில் கொலம்பஸ் மண்டபத்தில் அகில உலக சமய மாநாட்டில் உலக சகோதரத்துவத்தை நிலைநாட்டினார். சான்பிரான்சிஸ்கோ நகரில் சங்கம் ஒன்றையும், ஆச்சிரமத்தையும் நிறுவி அதனூடாக சமய சிந்தனைகளை பரப்பினார். பல இடங்களுக்கும் சென்று சமய சொற்பொழிவுகளை ஆற்றினார்.

(வளரும்) சி.நற்குணலிங்கம், கரவெட்டி

# பொது விடயங்கள்

1.அமெரிக்க காந்தி என அழைக்கப்படுவர் யார்?
மார்டின்லூதர்

2.சீனாவின் வள்ளுவர் எனப்படுவர் யார்?
கன்பூசியஸ்

3.உலகில் உள்ள எரிமலைகள் எத்தனை?
850

4.A.T.M. இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
ஷாம் செர்பேட் மோன்

5.இரட்டைக் குடியுரிமை நிலவும் நாடு எது?
அமெரிக்கா

6.இந்தியாவின் பொறியியல் மன்னன் யார்?
ஷாஜகான்

7.ஒரேநாளில் சுதந்திரம் கொண்டாடும் நாடுகள் எவை?
தென்கொரியா, இந்தியா, கொங்கோ

8.தமிழ் நாட்டின் கலாசார நகரம் எனப்படுவது எது?
மதுரை

9.சிறிய இதயமுள்ள மிருகம் எது?
சிங்கம்

10.கோல்ப் விளையாட்டு எந்த நாட்டில் முதன் முதலாக விளையாடப்பட்டது?
ஸ்கொட்லாந்து

11.அணு சக்தியின் தந்தை எனப்படுபவர் யார்?
ஓர் ஒஸ் ருக்போல்ட்

12.உலக வன உயிரி அமைப்பின் தலைமையகம் எது?
சுவிற்சர்லாந்து

13.செயற்கை மழையை உருவாக்கியவர் யார்?
இர்விங்லாங்மூர்

14.மனித இரத்தத்தில் நீரின் வீதம் எவ்வளவு?
80%

15.விமான மூலம் அதிக வருமானம் பெறும் நாடு எது?
அமெரிக்கா

ச.கலையரசி, தரம் 10
யா/மிருசுவில் றோ.க.த.க பாடசாலை.

# சாதனை

அம்மா எனும் மூன்றெழுத்து தெய்வத்தால்
குழவிகள் நாம் மூன்றெழுத்தாய் அவதரித்தோம்
அன்பு எனும் மூன்றெழுத்தில் கட்டுப்பட்டு
குட்டி என்னும் மூன்றெழுத்தாய் திகழ்ந்தோம்

சிறு பிள்ளை நீர் எனக் கூறி
சீர்தூக்கி வளர்க்கப்பட்டோம்
சிறுவர் எனும் உலகிற்கு
சீரானவராய் வந்தோம்

மாணவன் எனப் பெயர் கொண்டு
மண்ணில் நாம் கால் பதித்து
மாசற்ற நட்பின் மூலம்
மனக் காயங்களை ஆற்றுகிறோம்

வாழ்க்கை எனும் பாதையில்
வலம் வந்து கொண்டு
வாழ்வின் அர்த்தத்தை நாம்
வரவேற்கக் காத்திருக்கிறோம்

மனிதப் பிறப்பின் அர்த்தம் சாதனை என்று
மானிடர் நாம் உணர்ந்து
மண்ணில் ஒரு சாதனை நிகழ்த்த
மாதக் கணக்காய் தூக்கம் மறந்தோம்

சாதனை ஒரு போதனை
போதனையோ ஒரு சோதனை
சோதனையோ ஒரு வேதனை
அந்த வேதனை தான் வாழ்க்கை

படிக் கற்கள் ஒவ்வொன்றிலும்
பாதங்களைப் பதித்து
பணிவுடன் பல செயல்களைச் செய்து
பாரினிலே ஒரு சாதனை செய்வோம்

இலட்சியத்தை நோக்கிப் பயணித்து
அல்லல்களை எல்லாம் முறியடித்து
இதயத்தைக் கசக்கிப் பிழிந்து
அதில் ஒரு சாதனை நிகழ்த்துவோம்

வளரும் வரை சோதனை செய்து
வாழும் வரை வேதனை தாங்கி
வயோதிபத்திலும் சாதனை படைத்து
வாழ்வை நாம் பயனுள்ளதாக்குவோம்

மண்ணில் ஒரு சாதனை நிகழ்த்தி-பல
மனங்களில் ஒரு இடம் பிடித்து
மனிதன் தான் நாம் என்பதை நிரூபித்து
மடிவது தான் மனித வாழ்க்கை

ஆர்த்திகா சுவேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஆம் மாத நினைவு



## செல்லப்பா துரைராஜா

(ஓய்வு பெற்ற அதிபர்)

பிறப்பு:01.06.1938

இறப்பு:13.08.2012

எங்கு சென்றாலும் சொல்லிவிட்டுப்
போகும் எங்கள் அப்பா
இம்முறை சொல்லாமல் போனதேனப்பா
காலத்தின் வேகத்தில் மாதங்கள்
ஆறாகிப் போனாலும்
எங்கள் மனங்களில் உங்கள்
நினைவுகள் மாறாது என்றும் மறையாது
எம் மனம் என்றும் ஆறாது
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தாலும்
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லை.
ஆனாலும்.
உங்கள் நினைவுடனும் கனவுடனும்

**உங்கள் மனைவி, பிள்ளைகள்.**

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## சிவசம்பு தனபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற
தொலைத் தொடர்பு
உத்தியோகத்தர்)

அன்னை மடியில்:18.09.1929

அரன் திருவடியில்:08.03.2011

நேர்மையின் சின்னமாய் ஒழுக்கத்தின் சிகரமாய்
கண்ணியமிக்க கணவராய் பாசமுள்ள தந்தையாய்
வாழ்ந்த நீங்கள் மறைந்து ஈராண்டுகள் சென்றாலும்
உங்கள் கனவுகளோ என்றும் எம்முடன்

*என்றும் உங்கள் நினைவுகளுடன்.*

புதைபொருள் ஆராய்ச்சி நிலையம் அருகில்,
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளைகள்.

(28901)(2.6.7)

## கடை வாடகைக்கு

சுன்னாகம் நகர் பகுதியில் 3 மாடிக் கட்டடக் கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.
(தற்போதுள்ள தம்ரோ காட்சியறை கூடம்)

(28468)(5-6-7)

தொடர்பு: 077 385 4623

## காணிகள் விற்பனைக்கு

சங்கானை மேற்கு, சாங்கையில் 11 பரப்பு பள்ள வயற்காணி (இரண்டு போகம் செய்யக்கூடியது)
உரும்பிராய் சம்பந்தர் ஒழுங்கை, வடலிப் புலத்தில் 15 பரப்பு தோட்டக் காணி என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-0772873245,
0778025022

(29401)(6.7.11)





PER DAY TV

வேண்டியவாறு Reload செய்து
விரும்பியவாறு TV பார்த்து மகிழுங்கள்

www.dialog.lk/tv

இப்பொழுது Dialog கார்ட், Reload அல்லது Ez Cash மூலம் ரூ. 3/- க்கு 18 செனல்களுடன் Per Day TV இணைப்பொன்றை மிக இலகுவாக Reload செய்து பெற்றிட முடியும்.

அனைத்து டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும், தெரிவு செய்யப்பட்ட சிங்கர் காட்சியறைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 1777க்கு உடன் அழையுங்கள்.

Dialog TELEVISION

இணைப்புடன் கூடிய இணைப்புக் கருவிகளின் விலை ரூ. 9,990/- வரிக் கட்டணம் ஏற்புடையது. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.jwt.lk

பயந்தாங்கொள்ளியான எனக்கு
இப்போது சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை

எக்ஸ்ட்ரீம் உந்துருளிகளைக்கொண்டு
வீதிகளை உங்கள் சாதனைகளமாக்கிடுங்கள்

Hero




3 வருடங்கள் அல்லது 40000 கிலோமீற்றர்கள் வரையான உத்தரவாதம்

அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள்: பேலியகொடை: 011 7444452, 077 7662625 • கொள்ளுப்பிட்டி: 011 2055605 / 0772322880 • வவுனியா: 077 0691999
மாத்தளை 077 8336830 • மதவாச்சி 077 2323200 • திருகோணமலை ... • மட்டக்களப்பு:077 9583151 • புதுக்குடியிருப்பு: 0773161092
R.G. ட்ரேடர்ஸ் யாழ்ப்பாணம்: 021 2226185 • ... காட்சியறை: 021 2227667
நெல்லியடி: 021 2262585 • சாவகச்சேரி: 0212270185 • சுன்னாகம்: 021 2241985 • கிளிநொச்சி: 021 2280185 • பளை: 0777 340056

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகப்பா பல்கலைக்கழகம்
2013-2014 ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
வகுப்புக்கள், பரீட்சைகள் யாழ் எமது நிறுவனத்தில் நடைபெறும்
இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால்
அங்கீகரிக்கப்பட்ட பட்ட, பட்டமேற்படிப்புக்கள்

A/L மூன்று பாடசித்தியுடன் நீங்களும்
இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட
பட்டதாரியாகலாம்

## Under Graduate Programmes ( 3 years )

**B.A.** Tamil, English, Histroy, Public Administration
**B.B.A.** Banking, Corporate Secretaryship, Business Administration
**B.Sc.** Psychology, IT, Mathematics, Computer Science
**B.Com.** Computer Application, General

## Post Graduate Programmes

**M.A.** Education, Tamil, English, Histroy, Mass Communication & Journalism, Child Care & Education, Personal Management & Industrial Relations
**M.Com.** General, Finance & Control
**M.Sc.** Mathematics, Computer Science, Information Technology, Physics, Chemistry, Botany-Plant Bio Technology
**M.B.A.** International Business, Banking & Finance, Investment Management, Tourism Management, Education Management, Human Resource Management

வகுப்புகள் அனைத்தும் வாரநாள் முழுநேரம்
வாரஇறுதிநாள் முழுநேரம் ஒழுங்கு செய்து தரப்படும் 0212219460

University Approved Information & Study Centre
Mind Vishion
College of International Studies ( Pvt. ) Ltd
( Reg No : PV 85546 )
No.04, Clock Tower Lane, Navalar Road, Jaffna.
(பொருளியல் கல்லூரி அருகாமை, Science corner ஒழுங்கை)

# B.E ENGINEERING @ BANGALORE

Bachelor of Engineering
Don Bosco Institute of Technology - BANGALORE

உங்கள் பொறியியல் கனவை நாம் நனவாக்குகின்றோம்.
உலகில் தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும்
பெங்களூர் ( Bangalore ) சென்று உங்கள்
பட்டப் படிப்பை தொடருவதற்கு அரிய வாய்ப்பு

Food and Accommodation FREE

- Computer Science Engineering
- Information Science Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering
- Mechanical Engineering

- University Grants Commission Approved
- Visvesvaraya Technological University (VTU)
- Banglore University
- National Broad of Accrediation, India (NBA)
- All India Council for Technical Education (AICTE)
- Ministry of HRD, Gort of India


OTHER COURSES
- BBA
- BCA
- B.Com
- MBA ( Marketing )
- MBA ( Finance )
- MBA ( HR )
- M.Tech ( VLSI & Embedded Systems )
- M.Tech ( Computer Science )
- M.Tech ( Design Engineering )

Limited Seats Only Apply Now

2013-2014 ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தொடர்புகளுக்கு 0212219460

Don Bosco Institute of Technology - Admission Office
Mind Vishion
College of International Studies ( Pvt. ) Ltd
( Reg No : PV 85546 )
No.04, Clock Tower Lane, Navalar Road, Jaffna.
(பொருளியல் கல்லூரி அருகாமை, Science corner ஒழுங்கை)







(சி/6370)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூரில் குடும்பத் தலைவர்கள் புனர்வாழ்வு என்ற பெயரில் கைது

## முகாம்களில் வாழும் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர் என்கிறார் துரைரெட்னசிங்கம்

திருகோணமலை,பெப்.13

திருகோணமலை,சம்பூர் பிரதேசத்தில் குடும்பத் தலைவர்கள் புனர்வாழ்வு என்ற பெயரில் கைது செய்யப்படுகின்றனர்.

இவ்வாறு திருகோண மலை மாவட்டத்தின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பி னரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உப தலைவருமான க.துரைரெட்னசிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் குடும்பத் தலைவர்கள் ஏழு பேரை புனர்வாழ்வு வழங்குவதாகக் கூறி, கொழும்பிலிருந்து வந்த சிறப்பு புலானாய்வுப் பிரிவுக்குழுவினர் கைது செய்து கூட்டிச் சென்றனர்.

அந்தச் சம்பவத்தைய டுத்து கிளிவெட்டி, பட்டித் திடல், மணற்சேனை , கட் டைப்பறிச்சான் ஆகிய இடங் களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக் கப்பட்டுள்ள அகதிக் குடும் பங்களைச் சேர்ந்தவர்கள் அச்சத்தில் வாழ்ந்து வரு கின்றனர்.

மூதூர் கிழக்குப் பிரதேசத் தில் 2006 ஆம் ஆண்டு நிகழ்ந்த போரால் இடம் பெயர்ந்த பல தமிழ்க் குடும் பங்கள் நலன்புரி நிலையங் களிலும் மற்றும் உறவினர் கள் வீடுகளிலும் தங்கி வாழ் கின்றனர்.

இந்தநிலையில் புனர் வாழ்வு என்ற பெயரில் குடும்பத் தலைவர்கள் கைது செய்யப்படுகின்றமையால் ஏழைக் குடும்பங்களின் வாழ்வில் வாழ்வாதாரம் பாதிக்கப் படுகிறது.

உழைக்கின்ற குடும்பத் தலைவர்களைக் கைது செய்ததன் மூலம் அந்தக் குடும் பங்களின் வாழ்வு சீரழிக்கப் பட்டு விட்டது.-என்றார்.

(ச)

# கிழக்கில் பட்டதாரி ஆசிரியர்களை இணைக்கப் போட்டிப் பரீட்சை

மட்டக்களப்பு,பெப்.13

கிழக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர்களை இணைப்பதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளது என்று கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க தெரிவித்தார்.

சிங்கள,தமிழ் மொழிக ளில் 6175 பேருக்கு பரீட் சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அட் டைகள் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

அவர்களுக்கான போட் டிப் பரீட்சை திருகோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை ஆகிய மாவட்டங் களில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற வுள்ளது.

ஆங்கில மொழியில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 32[illegible] நபர்களுக்கு அனுமதி அட் டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவர் களுக்கான போட்டிப் பரீட்சை மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை ஆகிய மாவட் டங்களில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது என்று அவர் கூறி னார்.

பரீட்சைக்குத் தோற்று வதற்கு அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் 026 222 3869,026-2220092, 026 2222174 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கோரியுள் ளார்.

(ச)

# கல்குடாவில் நடமாடும் பொலிஸ் நிலையம்

மட்டக்களப்பு,பெப்.13

மட்டக்களப்பு,கல்குடா பொலிஸ் பிரிவில் நடமாடும் பொலிஸ் நிலையம் ஒன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலரின் ஆலோசனையில் பொலிஸ் சேவையை மக்களின் காலடிக்கு எடுத்துச் செல்லும் செயற்றிட் டத்தின் அடிப்படையிலேயே நடமாடும் பொலிஸ் நிலையம் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வரும் இந்தச் செயற்றிட்டத்தின் பிரகாரம் கல்குடா பொலிஸ் நிலையத்தில் நடமாடும் பொலிஸ் நிலையம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேத்தாளைக் கிராமத்தில் அமைக்கப்பட்ட நடமாடும் பொலிஸ் நிலையத் திறப்பு நிகழ்வில் வாழைச்சேனை உத விப் பொலிஸ் அத்தியட் சகர் லால் செனவிரத்ன மற் றும் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு திறந்து வைத்த னர்.

இந்தநடமாடும் பொலிஸ் நிலையம் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை பேத்தாளைக் கிரா மத்தில் இருக்கும்.

நடமாடும் பொலிஸ் நிலை யத்தினூடாக பிரதேசத்தின் தேவைகளை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்யும்போது, பொது மக்களுக்கும் பொலிஸா ருக்கு மிடை யிலான நல்லுறவை வளர்க்க முடியும் என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லால் செனவிரத்ன தெரிவித்தார். (ச)

## சாம்பல் தீவுக் கிராமத்தில் புனரமைப்பு இன்றி வீதிகள்

திருகோணமலை,பெப்.13

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட சாம்பல்தீவு கிராமத்தின் முக்கிய வீதிகள் நீண்ட கால மாக குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இந்த வீதிகளால் செல்லும் மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் எனப் பலரும் பாதிக்கப்படுகின்றனர்.

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையின் கிராமப் புறங்களிலுள்ள வீதிகள் பல அபிவிருத்தி செய்யப்பட்டு வரு கின்றன. சாம்பல் தீவு பிரதேசத்தின் கிராம வீதிகள் மட்டும் ஏன் அபிவிருத்தி காணாமல் இருக்கின்றன என்று அங்குள்ள மக்கள் பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே பட்டினமும் சூழலும் பிரதேச சபை யின் நிர்வாகத்தின் கீழ் காணப்படும் சாம்பல் தீவு கிராமத்தின் வீதிகள் புனரமைக் கப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-40)


**மணல் விற்பனை**

கட்டட வேலைகளுக்கான பூநகரி மணல் மிகவும் குறைவான விலையில் டிப்பர்கள் மூலம் உங்கள் இடங்களுக்கே நேரடியாக விநியோகிக்கப்படும்.

தொடர்பு:- 0755110767



**Sky Computers (Pvt) Ltd**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| | |
|---|---|
| Diploma in Ms Office | - 3 Months |
| Diploma in DTP | - 2 Months |
| Diploma in Web Design | - 3 Months |
| Diploma in Graphic Design | - 2 Months |
| Certificate in Internet & E-mail | - 1 Month |
| Kids Programme | - 2 Months |

Diploma In Video Mixing - 2 Months
(Mon, Fri - 9.00 am)
Diploma In Hardware - 2 Months
(Tue, Thu- 10.00 am)

TP:021-222-1417
162, Main Street, Jaffna.


## மரண அறிவித்தல்

### பரராஜசிங்கம் பிரசன்னா

(உரிமையாளர், பிரசன்னா பந்தல் சேவை)

கே.கே.எஸ். றோட் ,கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் பிரசன்னா நேற்று (12.02.2013) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பரராஜசிங்கம் - காலஞ்சென்ற பஞ்சவர்ணம் தம்பதியரின் அன்பு மகனும் பிரபாகரன் (ஜேர்மனி), பிரதீபன் (ஜேர்மனி), பிரதீஸன் (வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி), பிரகலாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் சமாதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரசன்னா பந்தல் சேவை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்.


**NALIN IT இன் விசேட விலைக்குறைப்பு**

NALIN Information Technologies Pvt Ltd.

**DUAL CORE DESKTOP ASSEMBLED PC**
intel Dual Core 2.9 processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
48,800/=

**CORE I3 DESKTOP ASSEMBLED PC**
Intel I3 3.3Ghz processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
58,500/=

**LAPTOPS**
HP 1000 --- 56,000/=
DELL I3 --- 67,000/=
DELL I5 --- 79,500/=
DELL I7 --- 109,500/=
Bag,mouse, headphone free with laptops

650W SQUTE UPS FREE WITH SYSTEMS

**CORE I5 DESKTOP ASSEMBLED PC**
Intel i5 3.2 GHZ processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
70,500/=

**CORE I7 DESKTOP ASSEMBLED PC**
Intel I7 3.4 GHZ processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
85,500/=

Hp branded system
i3 333o
from Rs.72,000/=

8GB FLASH - 1,000/=
16GB FLASH - 1,900/=
32GB FLASH - 4,000/=
DDR3 2GB RAM - 2,200/=
DDR3 4GB RAM - 3,600/=
MULTI DONGLE - FROM 3,200 TO 5,500/=

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD www.[illegible]nalinit.com
195/2, Parameswara Junction, Jaffna. T.P: 0212221121 / 0777667975



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### இராமசாமி சிறிதரன்

(B.A. Dip.in. Ed, SpTr., SLPS 2II)
(அதிபர், யா/காரை. ஊரி,
அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம்)

எமது அதிபர் அவர்கள் 08.08.2012 முதல் அதிபர் சேவை தரம் 2 II இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டுவதோடு, அவரது தன்னலமற்ற சேவையின் மூலம் தரணியில் மிளிர்ந்திட உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஊரி, களபூமி,
பிட்டி பொல்லை, காரைநகர்.

குமாரசாமி பசிதரன் குடும்பம்,
சுதாகரன் விதுர்சன் குடும்பம்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி தெய்வானை



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தெய்வானை நேற்று (12.02.2013) செவ்வாய்க் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் வேலாயுதம்பிள்ளை, நவமணி, பூதத்தம்பி, முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் பரமேஸ்வரி(சுவிஸ்), மகேஸ்வரி, மாசிலாமணி(சுவிஸ்), சந்திரலீலா (கனடா), காலஞ்சென்ற கணேசகுமாரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயும் ஜெயலோகராஜா(சுவிஸ்), பரமேஸ்வரன்(BOC Retired), கதிர்காமநாதன் (சுவிஸ்), இலட்சுமிகாந்தன்(கனடா), மஞ்சுளேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஜனுாயா-ஜெயமுகன்(டென்மார்க்), அசோயன்(சுவிஸ்), ஜீவிதா-விமல்(BOC Jaffna), கார்த்திகா-சசிகரன் (ஜேர்மனி), அபீரன்(சுவிஸ்), அஜீர்(சுவிஸ்), அனிசன்(கனடா), காலஞ்சென்ற அனுர்ஜா(கனடா), அதிசன்(ஜேர்மனி), விதுசன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கஸ்விகாவின்(இலங்கை) பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(12.02.2013) பிற்பகல் சிறுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு.

தகவல்:
பரமேஸ்வரன் மகேஸ்வரி(மகள்)
விமல் ஜீவிதா

### சுப்பிரமணியம் ஆனந்தராசா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஆனந்தராசா கடந்த (10.02. 2013) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சோதிமணி, புனிதவதி மற் றும் சித்திராதேவி சிறீதரன் ஆகியோரின் சகோ தரனும், காலஞ்சென்ற செல்லையா அன்னமெய் கதிர்காமநாதனின் அன்பு மருமகனும், திலீபன், சுஜீபன், பிரவீனா ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் புஸ்பராணி, இரத்தினசபாபதி, காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் புஸ்பராசா, பரமேஸ்வரி, சந்திரகுமார், சுகுமார், பதும்மராஜ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (16.02.2013) சனிக் கிழமை ஜேர்மனி நேரப்படி மு.ப. 10.00மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

111/10, ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P. 021 568 3371

தகவல்:
சந்திரகுமார்(மைத்துனர்),
சாருஜன் (கொமினி.[illegible]),
கொக்குவில் சந்தி.




City and Guilds

# Engineering Courses

**Benefits**

Uk யை தலைமையகமாக கொண்டு 100 க்கு மேற்பட்ட நாடுகளின் பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்.

தவணை முறையில் பாடநெறிக்கட்டணத்தை செலுத்தும் வசதி.

பொறியியல் படிப்புக்களின் இறுதி வருடத்தை Uk பல்கலைக்கழகங்களில் தொடரும் வாய்ப்பு.

குறித்த துறையில் Diploma பாடநெறியை முடிப்பவர்களுக்கு பிரபல பொறியியல் கம்பனிகளில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.

கடந்த ஜூன், டிசம்பர் Civil Diploma பரீட்சையில் 97% சித்திகள்

- Civil Engineering
- Quantity surveying
- Motor Vehicle
- Electrical & Eletronics

**யாருக்காக...**

- A/L இன் பின்னர் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை தவற விட்ட மாணவர்களுக்கானது!
- NCT, NCIT, HND NDT பூர்த்தி செய்த மாணவர்களுக்கானது.
- Bsc Degree படித்துக் கொண்டிருக்கும், படித்து முடித்த மாணவர்களுக்கானது.
- உயர்கல்வியை வெளிநாட்டில் மேற்கொள்ள இருப்பவர்களும், வெளிநாட்டில் உயர் சம்பளத்துடனான வேலைவாய்ப்பை எதிர்நோக்கி இருப்பவர்களுக்குமானது.

City & Guilds APPROVED CENTRE

SKILLS COLLEGE OF TECHNOLOGY
Jaffna Campus
No. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kajan@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk
Like us on Face book
www.facebook.com/scot.jaffna

0214 666 699
0771 067 394

SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## Asphalt Plant for sale

அஸ்போல்ற் உற்பத்தி செய்யும் இயந்திரம் விற்பனைக்குண்டு

தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் வீதி அமைப்பிற்கு தேவைப்படும் அஸ்போல்ற் உற்பத்தி செய்யும் 80 ton/hr இயந்திரத்தொகுதி ஒன்று விற்பனைக்குண்டு.

இடம்: கீரிமலை, யாழ்ப்பாணம்.
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

விபரங்களுக்கு :071 2347090/ 0115 422222 (Ext.210)
Fax: 0112-914153
Email- hr@vvkarunaratne.lk

## பணிப்பெண் தேவை

குழந்தையைப் பராமரிப்பதற்கும், சமையல் செய்வதற்கும் பணிப்பெண் தேவை. யாழ். நகரப்பகுதியினுள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0754985400, 0217912997

## இரவு நேர வேலை தேவை

யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து 5Km தூரத்திற்குள் இரவு நேர காவலாளி , அல்லது பொருத்தமான வேலை தேவை.
தொடர்புக்கு-0721837801


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 | 11 |
| 05 | 01 |
| 1948 | 2013 |

## அமரர் வாரித்தம்பி நல்லம்மா

அம்மாவே நிலம் என்றால்
அவள்தானே நீராவாள்
அம்மாவே நெருப்பென்றால்
அவள் வீசும் காற்றாவாள்
அம்மாவே ஆதாரம்...
அவள் தெய்வ அவதாரம்

அம்மாவின் கருவறையே
ஆத்மாவின் திருவறையாம்
அம்மா சொல் வேதம்தான்
அவள் மடியே சொர்க்கம்தான்
அம்மாவின் நினைவுகளில்
அமைதிகொள்வேன் அனுதினமும்

கைதடி மேற்கு,
கைதடி.

(c/6385-6-14)

பொ.தர்மேஸ்வரன்
(மகன்).

# மரண அறிவித்தல்

## செல்வரத்தினம் மனோன்மணி



மானிப்பாயைப் பிறப்பிடமாக வும்கோண்டாவில், இராமகிருஸ்ணா ஒழுங்கை கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் மனோன்மணி (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், குணரத்தினம் (சுவிஸ்), செல்வகுமார் (சுவிஸ்), சிவராசா (லண்டன்), பாக்கியரத்தினம் (கனடா), மனோராணி, கிருஸ்ணலீலா, மகிழ்மலர், விமலாதேவி, சுபந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயும், இரத்தின சிங்கம்(கனடா), சிவகுமார் (நோர்வே), காலஞ்சென்ற சுந்தரலிங்கம், பத்மநாதன், நகுலேஸ்வரன் சிவயோகராணி, சுபாசினி (சுவிஸ்), குமாரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், றமேஸ், சுரேஸ், கீத்தா, சுமித்தா, பிரதாங்கினி, சியாமினி, பிரவீனா, கிருஷாந்தன், கீர்த்திகன், சுந்தரேசன், வாசுகி, உமாபதி, யசோமலர், தர்சிகா, தர்சன், தனுஜா, பிரதீப், சசிகரன், நர்மினா, திவ்வியா, சஞ்சீவன், லக்சனா, சாரங்கா, அஜந்தா, அஜந்தன், ஐஸ்வர்யா, அஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2013) வியாழக்கிழமை நவரட்ணராஜா வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலில் தற்போது வசிக்கும் மகளது (ராணி) இல்லத்தில் நடைபெற்று, பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.


(29486)(5-6-7)

தகவல்
மக்கள், மருமக்கள்.

# மரண அறிவித்தல்

## முருகன் செல்லத்தம்பி (சின்னராசா)

(சந்திரன் சவுண்ட்ஸ் உரிமையாளர்,
EY 3807 CAR உரிமையாளர்)



ஊரிக்காடு, சோடாக்கம்பனி ஒழுங்கையைப் பிறப்பிடமாக வும், சம்பர்மலை கலாவாணி சன சமூகநிலையத்தை வசிப்பிடமா கவும் கொண்ட, சம்பர்மலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய ஸ்தாபக ரும், முன்னாள் ஆலய தர்மகர்த்தா வும் ஆகிய முருகன் செல்லத் தம்பி (சின்னராசா) (11.02.2013) திங்கட் கிழமை மாலை 6 மணி யளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான முருகன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயிலன் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கோசலை யின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம், சின்னக்கிளி, தம்பையா (6529 - கார்), இராசையா (C.T.B), தங்கம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வச்சந்திரன் (சுவிஸ்), செல்வேந்திரராணி (லதா - சுவிஸ்), செந்தமிழ்ச்செல்வி, செல்வேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேவதி (மதி), திருநாமசிங்கம் (சிங்கம்), குமணன், கிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனும், ஆரபி, நிற்சன், ஆரூரன், அபூர்வா, தருச்சினி, நிசோபா, திவ்வியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2013) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக நண்பகல் 12 மணி யளவில் ஊரிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சம்பர்மலை,
வல்வெட்டித்துறை,
தொ.பே. 077 6224 038

(27740)(45-6.7)

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org